Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 19 வெள்ளிக்கிழமை (03.01.2014) பக்கங்கள் 20 ஓசை - 094

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

11



தீவிர ரசிகை

18



இலவசம்

## மூளை அழற்சி நோய் யாழ். குடாவில் அதிகம்

### வெளியாகியது அதிர்ச்சித் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் முதுமை மூளை நோய் வேகமாக அதிகரித்துவருகின்றது. அண்மைக்காலமாக யாழ். நகரில் 'டிமென்சியா' (முதுமையில் ஏற்படும் ஒரு வகை மறதியுடன் கூடிய மூளை அழற்சி) எனப்படும் நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இதற்குப் பல்வேறு காரணங்களைக் குறிப்பிடலாம். மற்றைய பகுதிகளை விட யாழ். நகரில் ஒப்பீட்டளவில் முதியவர்களின் விகிதாசாரம் அதிகமாகக் காணப்படுகிறது. இதைவிட

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாண நிர்வாகம் திறம்படச் செயற்படுகிறது

### அதிகாரிகளின் ஒத்துழைப்பை கோருகிறார் ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று மாதங்களாக செயலாற்றிவரும் வடமாகாண சபையின் செயற்பாடுகள் திறம்பட இடம்பெற்று வருகின்றன. இதற்கு அதிகாரிகள், அமைச்சர்கள் என்றும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற புத்தாண்டு வரவேற்பு நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாகாண முதலமைச்சரின் அமைச்சர்களின் செயற்பாடுகளுக்கு ஆளுநர் மற்றும் உயரதிகாரிகளின் ஒத்துழைப்பு எப்போதும் இருக்கும். இதன்மூலம் ஏற்படுத்தப்படும் நிர்வாக அபிவிருத்தி மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பவை எப்போதும் மாகாண அரசுடன் மட்டுமல்லாது மத்திய அரசின் செயற்பாடுகளுடன்

19 ஆம் பக்கம் பார்க்க



# மாகாண நிர்வாகத்தில் இழுபறி; ஜனாதிபதியுடன் விக்கி பேச்சு



(கொழும்பு)

வடக்கு மாகாண நிர்வாகத்தில் அண்மைக்காலமாக ஏற்பட்ட இழுபறிநிலை குறித்து ஜனாதிபதியுடன் வடக்கு முதலமைச்சர் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

வடமாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து வடமாகாண சபை நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பு நேற்று முற்பகல் அலரி மாளிகையில் நடைபெற்றது. வடமாகாண முதலமைச்சர் ஜனாதிபதிக்கு புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்ததோடு சினேகபூர்வமாக உரையாடினார்.

இந்த சந்திப்பின் போது இருவரும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டனர்.

வடமாகாண சபையின் நிர்வாக பிரச்சினைகள் தொடர்பில் முதலமைச்சர் விக்னேஸ்வரன், ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்ததுடன், வடமாகாண சபையின் எதிர்கால நிர்வாக செயற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடியதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, நிதியமைச்சின் செயலாளர் பேராசிரியர் பீ.பி.ஜயசுந்தர ஆகியோர் உட்பட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

## கடமை தவறினர் பொலிஸார்; சாட்சியங்களுடன் முறைப்பாடு

### மனித உரிமை ஆணைக்குழு விசாரிக்கும்

(கொழும்பு)

காணாமற் போனோரைத் தேடி கண்டறியும் குழுவினர், சர்வதேச மனித உரிமைகள் தினமன்று தாம் நடத்திய கவனஈர்ப்பு போராட்டத்தின் போது பொலிஸ் பக்கசார்பாக நடந்துகொண்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் நேற்று முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளனர்.

சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10 ஆம் திகதி திருகோணமலையில் காணாமற் போனோரை தேடி கண்டறியும் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற கவனஈர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது சிங்கள மொழியில் பேசிய குழுவொன்றினால் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் காணாமற் போனோரைத் தேடி கண்டறியும் குழுவின் தலைவரான சுந்தரம் மகேந்திரன் உட்பட சிலர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சையும் பெற்றிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக காணாமற் போனோரை தேடி கண்டறியும் குழுவினால் நேற்று தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் திருகோணமலை பொலிஸாருக்கு எதிராக செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டில்

19 ஆம் பக்கம் பார்க்க

## இன நல்லிணக்கத்தில் முன்னேற்றம்; ஆராய்கிறது அமெரிக்கா

### கொழும்பு வருகிறார் பிஸ்வால்

(கொழும்பு)

யுத்தத்துக்குப் பிந்திய இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரம் குறித்தும் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் ஏற்பட்டிருக்கும் களநிலை முன்னேற்றங்கள் குறித்தும் அமெரிக்கா கவனம் செலுத்தியுள்ளது.

இதற்காக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு, மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான உதவிச் செயலர் நிஷா தேசாய்

19 ஆம் பக்கம் பார்க்க



## பாடசாலை சேவை வாகனங்களுக்கு பொலிஸ் பதிவு இருக்க வேண்டும்

### கட்டாய நடைமுறை அமுல்

(கொழும்பு)

பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்கள் அனைத்தும் இனிமேல் பொலிஸ் நிலையங்களில் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற புதிய விதிமுறை அமுல்செய்யப்படவுள்ளது.

சிறுவர்கள் மீது அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் முகமாகவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஜனவரி முதல் நவம்பர்

19 ஆம் பக்கம் பார்க்க

## நகரசபையின் 'பட்ஜெட்' தன்னிச்சையானது மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம், நான்கு உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டதை எதிர்த்து, மேற்படி கூட்டத்திற்கு வருகை தராதிருந்த உறுப்பினர்களின் சார்பில் தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளரும், உறுப்பினருமான சூ.சே.குலநாயகம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார்.

கடந்த 27.12.2013 அன்று வல்வெட்டித்துறையின் நகரசபையின் அமர்வு நடைபெற்றபோது, தான் உட்பட ஏனைய நான்கு உறுப்பினர்களுக்கு சபைக்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படாமைக்கும், பிரதான வாயில் பூட்டப்பட்டிருந்தமையால், தமது பிரசன்னமின்றி 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டமைக்கும் எதிராக அவரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நான்கு உறுப்பினர்கள் சமுகமளித்திருந்த நிலையில் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த கனகராஜா ஜெயராஜா முன்மொழிய, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பொன்னுத்துரை தெய்வேந்திரம் வழிமொழிய ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

அதேவேளை தமிழ்த் தேசியக்

19 ஆம் பக்கம் பார்க்க

### பிரதமர் மீது வழக்குத் தொடர ஹெல உறுமய முயற்சி

(கொழும்பு)

பிரதமர் தி.மு.ஜயரட்னவுக்கு எதிராக ஜாதிக ஹெல உறுமய வழக்குத்தாக்கல் செய்ய விருப்பதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# புறாக்களின் தங்குமிடமாகியுள்ள வளலாய் பொதுநோக்கு மண்டபம்

## திறப்பார் எவருமில்லையா?

(வலி.கிழக்கு)

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வளலாய் கிராமத்தில் கட்டப்பட்ட பொதுநோக்குமண்டபம் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் கட்டப்பட்டும் இதுவரை மக்கள் பாவனைக்காக திறக்கப்படாமல் பூட்டப்பட்ட நிலையில் இருப்பதையிட்டு அப்பகுதி மக்கள் பெரும் விசனம் அடைந்துள்ளனர்.

இம்மண்டபம் திறக்கப்பட்டால் தனியார் வீடுகளில் இயங்கிவரும் கிராம சேவையாளர் அலுவலகம், சமுர்த்தி உத்தியோகத்தர் அலுவலகம் என்பன இயங்க உதவியாக இருக்குமெனவும், பொதுமக்களுக்குரிய கூட்ட நிகழ்வுகளையும் நடத்தவும், ஏனைய் நிகழ்வுகள் நடத்தவும் இம்மண்டபம் உதவுமெனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இம்மண்டபத்தில் தற்போது புறாக்கள் தங்குமிடமாகவும், புறாக்களின் எச்சங்கள் கூடுதலாகவும் காணப்படுகின்றது. இம் மண்டபத்தை விரைவில் திறந்து மக்கள் பயன்பெற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் மக்கள் பலரும்எதிர்பார்க்கின்றனர். (08)


# தொடர்ந்தும் இருளில் மூழ்கும் யாழ் - பருத்தித்துறை பிரதான வீதி

(அச்சுவேலி)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதிக்கு ஒளியூட்டுவதற்காக வீதியின் குறிப்பிட்ட சில பகுதிகளில் புதிய மின்கம்பங்கள் நிறுவப்பட்டு மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள போதிலும் அம்மின் விளக்குகளுக்கு மின் இணைப்புக்கள் எவையும் இதுவரை வழங்கப்படாமையினால் தொடர்ந்தும் அப்பகுதி வீதிகள் இரவு வேளையில் இருளிலேயே மூழ்கிக் கிடக்கீன்றன. இதனால் இரவு வேளையில் இப்பகுதியூடாக பயணிக்கும பாதசாரிகள் மற்றும் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆலயங்கள், கடைத் தொகுதிகள், பிரதான சந்திகள் என இனங்காணப்பட்ட முக்கிய பகுதிகளில் பொருத்தப்பட்டுள் இம்மின் விளக்குகள் ஒளிர ஆரம்பிக்கும் பட்சத்தில் மக்கள் அப்பகுதிகளினூடாக அச்சமின்றிப் பயணிக்க முடியும் எனவும், திருடர்களின் திருட்டு முயற்சி தவிர்க்கப்படும் எனவும் மக்கள் நம்புகின்றனர். (03)

# பாலம், வீதி புனரமைப்பு எப்போது எனக்கேள்வி



(கரணவாய்)

உடுப்பிட்டி இராசலிங்கம் சனசமூக நிலையத்திற்குச் செல்லும் வீதியும், அவ்வீதியூடான பாலமும் எவ்வித புனரமைப்பும் இன்றிக் காணப்படுவதால் இவ்வீதியூடான போக்குவரத்து நெருக்கடியாக இருப்பதாக இக்கிராமமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இவ்வீதி புனரமைக்கப்படாமையால் பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள், வியாபாரிகள் எனப்பலர் பயணத்தை மேற்கொள்கின்ற நிலையில் நாளாந்தம் இவர்கள் சிரமத்தின் மத்தியில் பயணத்தை மேற்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இப்பாலம் புனரமைப்புப்பணிகள் இடம்பெற்ற நிலையில் அவையும் இடை நடுவில் முடிவுறாமல் உள்ளதாகவும், மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

போக்குவரத்துக்கு அவசியம் தேவையாகவுள்ள குறித்த வீதியை புனரமைக்காததுடன், பாலத்தையும் முழுமையாக புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

(ஆனைக்கோட்டை)

நவாலி வை.எம்.சி.ஏ. நிறுவனத்தின் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் நாளை சனிக்கிழமை முதல் 6 ஆம் திகதி வரை காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்புத்தக விற்பனையில் ஸ்ரீலங்கா பதிப்பகம், இனிய தென்றல் பதிப்பகம், கே.வி. பதிப்பகம், இஸ்லாமிய புத்தக நிலையம், குமரன் பதிப்பகம், பூபாலசிங்கம் பதிப்பகம், சாயி பதிப்பகம் உள்ளிட்ட பல புத்தக விற்பனை நிலையங்களின் கண்காட்சியும், விற்பனையும் இடம்பெறவுள்ளது.

இதனைவிட மாணவர்களுக்கான பயிற்சி நூல்களும் காட்சிப் படுத்தப்படுத்தப்படவுள்ளதுடன், ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகக் கங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (104)

# கோஷ்டி மோதல்

(கொடிகாமம்)

நெல்லியடி கலிகைச் சந்திக்கு அருகாமையில் உள்ள வேம்படிப் பகுதியில் இரு குழுக்களுக்கிடையே கோஷ்டி மேதல் இடம்பெற்றுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்ற இம் மோதலில் எவருக்கும் காயம் ஏற்படாத நிலையில், கோஷ்டி மோதல் இடம்பெற்ற வீதிப் பகுதியில் கண்ணாடித்தூள்கள் பரவி காணப்பட்டதால் அவ் வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

இந்நிலையில் இவ்வீதியூடாக செல்வோர் மோதலால் மாற்று வீதியூடாக சென்றமை குறிப்பிடத்தக்கது. (130)

# விபத்தில் படுகாயம்

கொக்குவில் குளப்பிட்டிப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றின் முன்பாக குறுக்கிட்ட வயோதிபப்பெண் ஒருவர் மோட்டார் சைக்கிளில் மோதுண்டு படுகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

நேற்றுக்காலை 9 மணியளவில் நடைபெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நாகலிங்கம் கனகம்மா (வயது - 60) என்ற பெண்ணே படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# புதுவருடம் பிறந்தபோதிலும் விடாது துரத்துகிறது டெங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இந்த வருடத்தில் டிசம்பர் மாதத்தில் மட்டுமே அதிகளவானவர்கள் டெங்குநோய்த்தெற்றுக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் இவ்வாறு 656 பேர் இந்த நோய்த்தொற்றிற்கு இலக்காகியதுடன், டிசம்பர் மாதத்தில் மட்டும் 107 பேர் இவ்வாறு நோய்த்தொற்றிற்கு இலக்காகி சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை புதிய வருடத்தில் நேற்றும், நேற்று முன்தினமும் ஐந்துபேர் டெங்குத்தொற்றிற்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2492 திகதி 01-01-2014

ஆங்கில எழுத்து: E

வெற்றி எண்கள் 34 42 43 51

போனஸ் இல: 45

ஜக்பொட் பரிசு ரூ.20,700,175/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 231125 | 20/- | 4,622,500/- |
| 2 இல | 16644 | 100/- | 1,664,400/- |
| 3 இல | 323 | 1,000/- | 323,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9118 | 40/- | 364,720/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 619 | 1,000/- | 619,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 29 | 10,000/- | 290,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 20,700,175/- | - |
| 1 இல + போனஸ் இல | 11029 | 100/- | 1,102,900/- |
| 2 இல + போனஸ் இல | 527 | 500/- | 263,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 409 | 200/- | 81,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 16 | 1,500/- | 24,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 269845 | | 11,755,820/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.01.04 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 21,330,125/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3112)


# லிப்கோ நிறுவன சேவைகள் தென்மராட்சியில் விஸ்தரிப்பு

தென்மராட்சிப்பிரதேசத்தில் லிப்கோ நிறுவனம் தனது சேவையை விஸ்தரித்துள்ளது. வீடுகளுக்கும், கடைகளுக்கும், கோயில்களுக்கும் தரமான பால் தேவைப்படுவோர் தேவையான விபரங்களை தொலைபேசியிலோ அல்லது செருக்கல் பிள்ளையார் கோயிலடியில் உள்ள அலுவலகத்தில் நேரடியாகவோ பெறமுடியவதுடன், பால், தயிர், பன்னீர், யோக்கட், நெய் என்பன தேவைக்கு ஏற்ப விநியோகிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாடுகளுக்கான தீவனமும் பெற்றுக்கொடுக்கப்படுகிறது. சகல கால் நடைகளுக்கும் அவர்களது வைத்தியர்கள் மூலம் சிபாரிசு செய்யப்பட்டு மருந்தும் வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் முட்டை, குஞ்சு, புறொயிலர் என்பன நியாயமான விலைக்கு விநியோகிக்கின்றனர். இது குறித்த மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள 021 2270225, 077 9683097, 077 1630896 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அதன தலைவர் தெரிவித்துள்ளார். (இ)




இந்தியாவிலுள்ள அபிவிருத்தி, விஞ்ஞான மற்றம் கல்வியாளர்கள் சங்கத்தினால் வழங்கப்படும் சிறந்த விஞ்ஞான ஆராய்ச்சியாளர் விருது யாழ்.பல்கலைக்கழக கணக்கியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரான பாலசுந்தரம் நிமலதாசனுக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த 30 ஆம் திகதி தமிழ்நாடு பாண்டிச்சேரியில் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக வணிக பீட தலைவர் பேராசிரியர் ரி.வேல்நம்பியும் கலந்துகொண்டிருந்தார். (இ)

# சாரதிகளுக்கான நிரந்தர நியமனம்

# வடமாகாண ஆளுநர் வழங்கிவைத்தார்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சாரதி சேவை வகுப்பு III இற்கான நியமனங்கள் நேற்று ஆளுநரால் வழங்கப்பட்டது.

உள்ளூராட்சித் திணைக்களங்களின் சேவைகள், வடமாகாணத்திலுள்ள திணைக்களங்கள் ஆகியவற்றின் சேவைகளுக்கென சாரதி வகுப்பு III இற்கான 97 நியமனங்களை நேற்று இடம்பெற்ற நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வழங்கிவைத்தார்.



ஓய்வூதியம் பெறும் வகையில் நிரந்தர நியமனங்கள் வடக்கின் 5 மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இவர்களின் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நேற்று ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்நியமனம் வழங்கும் நிகழ்வில் வடமாகாண ஆளுநர், அவைச் செயலாளர், அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் மாகாண பிரதம செயலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.(இ)

# தேசிய விருதுபெற்ற பாடலுக்கு காணொளி உருவாக்கம்

(மானிப்பாய்)

கடந்த வருடம் அரச விருது வழங்கும் விழாவில் சிறந்த பாடல் வரிகளுக்கான தேசிய விருதைப் பெற்ற இந்துவின் இளசுகளின் 'உறவு தேடும் உயிரின்' பாடலுக்கு காணொளியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இக் காணொளி புதுவருடத் தினமான நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணிக்கு யூ டியூப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

இக் காணொளியை யாழ்.இந்துவின் மாணவன் சி.அனுசாந் இயக்கியுள்ளார்.

பாடலுக்கான இசையினை த.மதீசன், ஒளிப்பதிவினை செ.உசாந்த், படத்தொகுப்பினை என்.பி.எஸ், பாடல்வரிகளை மதீசன் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். பாடல்களை விஸ்ணுகரன், ஜெகனி, கோகுலன் ஆகியோர் பாடியுள்ளனர். ஒலிப்பதிவினை சத்யன் மேற்கொண்டுள்ளார் யாழ்.இந்துக் கல்லூரியின் ஆசிரியர் நா.கு.மகிழ்ச்சிகரன் இவற்றிற்கான ஆலோசனையினை வழங்கியுள்ளார்.

பாடலினை http://www.youtube.com/ watchv =YHmJYazOh3A என்னும் இணைப்பினூடாகப் பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (48)

## அங்குரார்ப்பணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வாரிவனேஸ்வரம் புராதன வாரியப்பர் சிவன் ஆலயசித்திரதேர் அங்குரார்ப்பணவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக தினமான அன்று மு.ப. 10.30 மணிக்கு வாரியப்பா சுவாமிக்கும் கூடவே அம்பாளுக்கும் உரிய முறையில் சித்திரத்தேர் அமைப்பதற்கு அருள் பாலித்துள்ளது.

பல இலட்சம் ரூபா செலவில் அழகிய 27 அடி உயர சிற்ப வேலைகளோடு கூடிய தேர் அமைப்பதற்கு அடியவர்கள் முன்வந்துள்ளனர். இச்சித்திரத் தேரினை நச்சிமார் கோவிலடியைச்சேர்ந்த தேர்ச் சித்திரக் கலைஞரான விஷ்வபிரம்ம ஸ்ரீ ஸ்தபதி செ.பாலச்சந்திரன் சிறப்பாக அமைக்கவுள்ளார். (இ)

## கல்லூரியின் பெயர் மாற்றம்

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் பெயரினை அதன் தமிழ்ப் பிரயோகத்தில் திருத்தம் செய்து யா/நெல்லியடி மத்திய கல்லூரி என மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கான கோரிக்கையினை கல்லூரிச் சமூகம் முறைப்படி சமர்ப்பித்ததின்பேரில் கல்வியமைச்சின் 2013.11.06ஆம் திகதிய கட்டமைப்புக் குழுவின் தீர்மானத்திற்கமைய இவ்வாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக கல்வியமைச்சினால் 2014.01.01ஆம் திகதிய கடிதத்தின் மூலம் கல்லூரி அதிபருக்கும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பெண்கள் அபிவிருத்தி அமைச்சர் கிளிநொச்சி மாவட்டத்திற்கு வருகை

(கிளிநொச்சி)

சிறுவர் அபிவிருத்தி பெண்கள் அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ கரலியத்த இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு வருகை தரவுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரசாங்கஅதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் 4 பிரதேச செயலர்களும் வடமாகாணத்தைச் சேர்ந்த 175 உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட உத்தியோகத்தர்கள், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள், மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள், உளவளத்துணையாளர்கள், முன்பிள்ளைப்பராய அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த நிகழ்வில் அமைச்சரால் கணனிகள், தளபாடங்கள், காகிதாதிகள் என்பன வழங்கப்படவுள்ளன. (90)



நெல்லியடி சமுர்த்தி வங்கியினால் வாழ்வின் எழுச்சி திணைக்களத்தை வரவேற்கும் முகமாக கடந்த செவ்வாய்க்கிழமை சுழற்சி நிதியத்தின் கீழ் பயனாளிகளுக்கு துவிச்சக்கர வண்டிகள் மற்றும் தையல் இயந்திரம் என்பன வழங்கப்பட்டது. வங்கி முகாமையாளர் இ.உதயகுமார் பயனாளிக்கு தையல் இயந்திரம் வழங்குவதைக் காணலாம். (18)

# "என்னைப் பிடி; விசாரி" என்று இலங்கைக்கு வருவோர் கூட்டம்...




'ராதிகாவ்வப் பின்தொடர்கிறார்களாம். ராதிகாவை விசாரிக்கிறார்களாம். உங்களுக்கு இதைப்பற்றி ஒண்டும் தெரியாதோ!' என்று கேட்டார் கனடா நண்பர் ஒருத்தர்.

ராதிகா இலங்கைக்கு வந்தாரா? எப்ப வந்தார்? எதற்காக வந்தார்? ஒரு மண்ணும் விளங்கவில்லை எனக்கு.

ராதிகா இலங்கையில் பிறந்திருந்தாலும் அதை ஒரு ரத்தபந்தமாக அவர் பின்னர் கொண்டாடியதாக நானறியவில்லை. சுற்றுலாவுக்கு வந்திருப்பாரா? அல்லது அவருடைய தொழில்முறையாக...நடிப்புக்காக–படப்பிடிப்புக்காக வந்திருக்கலாம் என்று எண்ணிக்கொண்டு நண்பரிடமே விசாரித்தேன்.

'என்னய்யா... இங்க (கனடாவில்) ராதிகாவைப் பற்றித்தான் செய்திகள். நீங்கள் ஒண்டுமே தெரியாது எண்டிறீங்கள்...!'என்று திரும்பவும் கேள்விக்கணையை என்னிடமே திருப்பினார்.

தெய்வமே, நான் என்ன செய்வேன்!

உண்மையாகவே எனக்கு அடிநுனி ஒன்றும் விளங்கவில்லை. என்ன வம்படா இது? காலையிலேயே மனுசன் குழப்பிக் கொண்டிருக்கிறாரே!

ராதிகாவை நான் அவருடைய முதற்படத்திலிருந்து நன்றாக அறிவேன். இன்றைக்கும் திரையில் உலாவிக்கொண்டிருக்கின்றார். அவருடன் திரைக்கு வந்தவர்கள் யாருமே அவரளவுக்கு இல்லை. ஓய்ந்து விட்டார்கள். இதுமட்டும் 'ஓயாத அலை' என்ற மாதிரி இன்னும் களத்தில் நிற்கிறது. அஞ்சாத சிங்கம் எம்.ஆர். ராதாவின் மகள் அல்லவா!

எனக்கும் ராதிகாவில் கொஞ்சம் விருப்பமுண்டு. சில படங்களில், சில பாத்திரங்களில் முத்திரை பதித்தவர். நிறம்மாறாத பூக்களில் அவர் ஒரு கலக்கல். அதிலிருந்து மனதின் எங்கோ ஒரு மூலையில் இன்னும் நிறம்மாறாத பூவாகவே உள்ளார்.

இப்பொழுது என்னுடைய நெஞ்சிலும் மெல்லியதாக ஒரு வலி எழத் தொடங்கியது. ராதிகாவை யார் பின்தொடர்கிறார்கள்? ஏன் பின் தொடர்கிறார்கள்... எதற்காக... எதற்காக....?

'யோவ், நீர் ஒரு சுத்தமான களிமண்ணப்பா. (நல்லவேளை, கலப்படமான களிமண் என்று சொல்லாமல் விட்டார்) இஞ்ச எலெக்‌ஷன் நடக்கப்போகுதல்லோ..! அதுக்காக ராதிகா அங்க வந்திருக்கிறார். அங்க வந்து, வன்னிப் பகுதியில நாலு ஏழைக்குடும்பங்களோடயும் யாழ்ப்பாணத்துக்குப் போய் ஒரு அகதி முகாமிலையும் நிண்டு ஐந்தாறு படம் எடுத்திட்டால், பிறகென்ன? தேர்தலில் அதை வைச்சே தாக்காட்டலாம். இந்தமுறை இஞ்ச (கனடாவில்) ராதிகா மண்கவ்வும் நிலையில தான் இருக்கிறார். அதைத் தவிர்க்கிறதுக்காக அங்க வந்திருக்கிறார். அப்பிடி வந்த இடத்தில யாரோ பின்தொடர்கிறார்களாம்...! அநேகமாக இலங்கைப் புலனாய்வுத்துறையினராக இருக்கும் எண்டு இணையத் தளத்தில் செய்திகள் வந்திருக்கு....' என்று விளக்கினார் நண்பர்.

ஓ.. அப்படியா சங்கதி?

நன்றாக வாய்த்தோம் நாம் எல்லோருக்கும். பிரித்தானியாவில் நடக்கும் தேர்தலில் தமிழர்களின் ஆதரவைப் பெறுவதற்காக டேவிற் கமரூன் யாழ்ப்பாணத்துக்கு வந்து போஸ் குடுக்கிறார் படமெடுக்கிறார்.

இந்தியத் தேர்தற் களங்களிலும் வை.கோவிலிருந்து சிதம்பரம் வரை இலங்கைத் தமிழர்களுக்காக நீலிக்கண்ணீர் போலிக்கண்ணீர் எல்லாம் வடிக்கிறார்கள்.

இப்பொழுது கனடியத் தேர்தலுக்கும் இலங்கைத் தமிழரா பயன்படுகிறார்கள்?

ஈழத்தமிழரின் துயரமும் அவலமும் நன்றாகத்தான் விலைபோகிறது. இதற்கெல்லாம் ஒத்துப் பாடுவதற்குத் தோதாக இருக்கிறார்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சில எம்.பி. மார்.

வெளியாரின் எலும்புத்துண்டுகளுக்காக வாலாட்டும் இந்த எம்.பி. மார் இங்கே இருக்கின்ற பாவப்பட்ட சனங்களை வைத்தே தங்களின் வியாபாரத்தைச் செய்து கொள்கிறார்கள்.

காயங்களை ஆற்றாமல், வலிகளைப் போக்காமல் புண்ணைப் பெருப்பித்துப் பெருப்பித்தே மருந்துக்கடை வைத்திருக்கிறார்கள் இந்த மாயாவிகள்.

ராதிகா சிற்சபேசனும் குறைந்த ஆளில்லை. ஆளுக்கு வயசு குறைவெண்டாலும் அரசியலில் சிங்கி ஒரு சின்னப் புலிதான்.

இல்லையென்றால், இலங்கைக்கு வந்து சிறிதரன் எம்.பி.யைப் பிடிச்சிருக்கிறார் என்றால் சும்மாவா? அவரைப்பிடித்தால்தான் தன்னுடைய வியாபாரம் நன்றாக நடக்கும் என்று தெரிந்திருக்கிறது.

சிறிதரனைப் பிடித்தால் அவர், வன்னியில் தோதாகப் படம் எடுக்கக் கூடிய இடங்களுக்குக் கூட்டிச் செல்வார். அவரோடு திரிந்தால்தான் புலனாய்வுத்துறை தேடுவதாக, துரத்துவதாக, கண்காணிப்பதாக, விசாரிப்பதாக எல்லாம் செய்திகள் வரும்.

இப்படிச் செய்திகள் வந்தால் அங்கே தேர்தற் காட்டில் மழை பொழியும். இந்தச் செய்திகளால் இங்கே சிறிதரனின் காட்டிலும் மழைகொட்டும்.

ஆகவே எனக்கு நீ சொந்தம்... உனக்கு நான் சொந்தம்... என்ற கணக்கில் ஆளுக்காள் உதவி.

'ஐயா, இந்த ராதிகா நிறம்மாறிய பூ...' என்று நண்பருக்குச் சொல்ல வேண்டும் என நினைத்திருக்கிறேன்.

பிறரிடம் உள்ள நூறு குறைகளைச் சுட்டிக்காட்டுவதைவிட நம்மிடம் இருக்கும் ஒரு குறையையாவது போக்க வேண்டும். - புத்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## எங்கே பேச வேண்டும்?

சிறைகளிலுள்ள அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு கோரி கரைச்சிப் பிரதேச சபை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் வை.குகராஜா தலைமையில் பிரதேச சபையின் இதர தமிழ்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் சென்று இந்த மனுவை கிளிநொச்சி அரசாங்க அதிபரிடம் கையளித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர்கள் அந்த மனுவில் எழுத்து மூலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கேட்டிருப்பதாவது: "தணித்துக் கொள்ளக்கூடிய யுத்தத்தின் விளைவுகளை பல்வேறு சவால்களோடு தாங்கள் எதிர்நோக்கி வருகிறீர்கள். யுத்த விளைவுகளின் தொடர்ச்சியாக இருக்கின்ற அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் எமது மக்கள் பலத்த எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கிறார்கள். அது தொடர்பாக எமது சபையில் கவனம் எடுக்கப்பட்டு தங்களின் கவனத்திற்கும் கொண்டு வருகிறோம். புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருப்பவர்கள் சமூகமயப்பட்டிருப்பதைப் போல ஏனைய அரசியல் கைதிகளின் விடுதலையையும் சாதகமான முறையில் பரிசீலித்து ஆவன செய்யுங்கள்"

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேல்மட்டத் தலைமையினர்க்கு விளங்காத ஒரு யதார்த்தம் கூட்டமைப்பின் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு விளங்கியிருப்பதன் அடையாளமே இந்த மனுவாகும். மத்திய அரசு சம்பந்தப்பட்டதாக உள்ள மக்களின் பிரச்சினை ஒன்றுக்குத் தீர்வு காணவேண்டுமாயின் அரசிடம்தான் பேசி அதை சாத்தியமாக்கிக் கொள்ள வேண்டும் என்ற எளிய உண்மையை கரைச்சிப் பிரதேச சபை விளங்கிக் கொண்டிருக்கிறது.

என்ன இருந்தாலும் பிரதேச சபை உறுப்பினர்கள் மக்கள் மத்தியிலேயே வாழ்கிறவர்கள் அல்லவா? வன்னி மக்களின் தேவைகளுக்கு பதிலளிக்க வேண்டிய கடப்பாட்டை அலட்சியப் படுத்தாத, மக்களின் அல்லல் தீர்க்க விரும்பும் உறுப்பினர் எவரும் நல்லது நடக்க விரும்பினால் இந்த யதார்த்தத்திற்குத்தான் வந்தாக வேண்டும்.

ஏதாவது ஒரு மக்கள் பிரச்சினையையேனும் தீர்த்து வைக்க வேண்டும் என்று மனப்பூர்வமாக விரும்புகிறவர்கள் இப்படித்தான் செயற்பட்டாக வேண்டும். மாறாக, பிரச்சினைகள் தீர்வதை விரும்பாதவர்கள், பிரச்சினைகள் தொடர்ந்து இருப்பதுதான் தங்களுக்கு லாபமானது என்று கருதுபவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேல்மட்டத் தலைவர்கள் செய்வதுபோலத்தான் கோஷங்களிட்டுக் குழப்பிவிட்டுக் கொண்டிருப்பார்கள்.

முன்பு நீதியரசராக இருந்து சட்டதிட்டங்களைத் தெரிந்துவைத்திருக்கும் வடக்கு முதலமைச்சரே கூட, மக்களின் காணிகளைத் திரும்பப் பெறுவதற்கு எங்கு பேச வேண்டுமோ அங்கு போய்ப் பேசாமல், இராணுவ அதிகாரிகளிடம் போய் வாக்குவாதமிட்டு, அதைப் படம்பிடித்துச் செய்திப்பரபரப்பை ஏற்படுத்தும் மலின அரசியல் செய்பவராக மாறிவிட்டதையே சிலநாட்களுக்கு முன்னர் பார்த்தோம்.

மக்களின் எந்தப் பிரச்சினைக்கும் அரசிடம் பேசித் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சியை கூட்டமைப்பு செய்வதில்லை. இராணுவம் வெளியேறினால் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்றோ, அரசின் மீது சர்வதேச விசாரணை வந்துவிட்டால் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்றோ, எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காகத்தான் நாலு வருடங்களாக சர்வதேச அழுத்தத்திற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறோம் என்றோ கதைவிட்டு ஏமாற்றுவதே கூட்டமைப்புத் தலைமையின் வாடிக்கையாகக் கண்டிருக்கிறோம்.

மாறாக, உண்மையாக பிரச்சினை தீர்வதை விரும்பினால் எங்கு பேச வேண்டும் என்று தெரிந்து பேசியிருக்கும் கரைச்சிப் பிரதேச சபையைப் பாராட்டத்தான் வேண்டும். - ஆசிரியர்.

# 30 வருடமாக பெறமுடியாத சமாதானத்தை மூன்று வருடங்களில் பெறுவது கடினம்

## என்கிறது ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

முப்பது வருட காலமாகப் பெறமுடியாத சமாதானத்தை முன்று ஆண்டுகளில் பெறுவதென்பது கடினமான விடயம் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்வில தெரிவித்துள்ளார்.

ஹெல உறுமய கட்சியினால் நேற்றுமுன்தினம் கொழும்பில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கத்துடன் இணைந்து உரிய தீர்வினை பெற்றுக்கொள்வதே சிறந்த வழி. அதனை விடுத்து, சர்வதேச ரீதியில் அழுத்தங்களை ஏற்படுத்தி நாட்டில் சிக்கல்களை ஏற்படுத்துவதனால் இலங்கைக்குள் முழுமையான இனப்பிரச்சினைக்கான தீர்வினை பெற்றுக்கொள்ள முடியாது.

சமாதானம் என்று பேசுவோர் அதனைப் பெற்றுக்கொள்வதற்கான வழிமுறையினை கருத்திற்கொள்ளாததே இன்று இத்தனை பிரச்சினைகளுக்கும் காரணம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசாங்கத்தை குறை கூறிக்கொண்டு அவர்களின் தவறுகளை மூடி மறைக்க நினைக்கின்றனர்.

இத்தனை ஆண்டுகளாக தமிழர்கள் கொல்லப்பட்டமைக்கும் சிங்கள மற்றும் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டமைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் முக்கிய காரணமாகும். ஒரே நாட்டுக்குள் இரண்டு ஆட்சி நடத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திட்டத்திற்கு நாம் ஒரு போதும் இடமளிக்க மாட்டோம்.

அவ்வாறானதொரு நிலைமையினை சர்வதேச நாடுகளின் மூலம் கூட்டமைப்பினர் ஏற்படுத்த நினைத்தால் இன்னொரு மாவிலாறு யுத்தத்திற்கு இரு தரப்பினரும் தயாராக வேண்டும்.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பதானால் கூட்டமைப்பின் கொள்கைகளை மாற்றி பிரச்சினைகளை தீர்த்துவிட முடியாது. அவ்வாறு அரசாங்கம் நினைப்பதும் முட்டாள் தனமான செயற்பாடாகும். சம்பந்தனை பேச்சுவார்த்தைக்கு அழைத்து இலங்கையில் தற்போது இருக்கும் ஓரளவு சமாதானத்தினையும் அழித்துவிடக் கூடாதென்றார்.

# வளிமண்டலவியல் திணைக்களத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை

## ஐ.தே.க. எம்.பி. எரான் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் பிரசார நோக்கங்களுக்காக பல பில்லியன் ரூபாவினை செலவிட்டு வருகின்றது. எனினும், வளிமண்டலவியல் திணைக்களத்தை மேம்படுத்த இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

காலநிலை சீர்கேட்டினால் 1.6 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும், அரசாங்கம் தனது பிரசாரத்திற்காகவே பணத்தை செலவிட்டு வருகின்றது, மக்களின் நலனுக்காக பணத்தைச் செலவிடத் தவறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தை மேம்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் ஒரு பில்லியன் ரூபாவினை செலவிட தயக்கம் காட்டி வருகின்றமை வருத்தமளிக்கின்றது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

காலநிலை மாற்றங்கள் தொடர்பில் துல்லியமான தகவல்களை வழங்குவதன் மூலம் மக்களுக்கு ஏற்படக் கூடிய பாரிய அழிவுகளையும் சேதங்களையும் தவிர்க்க முடியும். காலநிலை மாற்றங்களை கண்டறிந்து கொள்ள நவீன இயந்திர சாதனங்கள், கருவிகள் பயன்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மின்னஞ்சல்மூலம் முறையிட உச்ச நீதிமன்றில் வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் மார்ச் மாதமளவில் மின்னஞ்சல் மூலம் உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடர மக்களுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட உள்ளதால் அதற்கான ஏற்பா டுகள் தற்போது செய்யப்பட்டு வருவதாக உச்ச நீதிமன்ற பதிவாளர் நாயகம் மஹேசி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த முறையானது தூரப் பிரதேசங்களில் இருப்பவர்கள் உரிய நேரத்தில் நலன்களைப் பெற்றுக்கொள்ள இந்த வழி உதவும் என்பதுடன் இந்த முறையில் முதற்கட்டமாக அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பில் மின்னஞ்சல் ஊடாக முறைப்பாடு செய்து வழக்குத் தொடர முடியும் என்பதுடன் இது ஒரு நாளின் எந்த நேரத்திலும் அதாவது நள்ளிரவு கூட மின்னஞ்சல் மூலம் வழக்குத் தொடரலாம் எனத் தெரிவித்தார்.

மேலும் இந்தப் புதிய நடைமுறை நடைமுறைக்கு வரும் போது முறைப்பாட்டாளருக்கு பயண செலவுகள் கிடையாது என்பதுடன் வழக்குத் தொடர்பான மூல ஆவணங்களை பின்னர் நீதிமன்றிடம் ஒப்படைக்க முடியும் எனத் தெரிவித்தார்.

# விசமானது புத்தாண்டு விருந்து; 300 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

புத்தாண்டையொட்டி வழங்கப்பட்ட விருந்துணவு விசமாகியதில் 300 இற்கும் மேற்பட்டவர்கள் திடீர் சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தனியார் ஆடைத் தொழிற்சாலையொன்றின் ஹோமாகம, பாதுக்க, ஹொரண மற்றும் கிரியெல்ல போன்ற பிரதேசங்களிலுள்ள கிளைத் தொழிற்சாலைகளில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட உணவு விசமாகியதை அடுத்தே இவர்கள் சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஹொரண, போருவதண்ட பிரதேசத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றைச் சேர்ந்த 120 ஊழியர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹோமாகம பிரதேசத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலையைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உணவு விசமாகியதில் சுகவீனமுற்றதை அடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பாதுக்க மற்றும் கிரியெல்ல பிரதேசங்களிலுமுள்ள மேற்படி தொழிற்சாலைகளில் கடமையாற்றும் சுமார் 150 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி தொழிற்சாலைகளின் ஊழியர்களுக்கு சோறுடன் கோழி இறைச்சிக் கறி, பருப்பு போன்றவைகள் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.






# தமிழக மீனவர்களின் ஊடுருவலைத் தடுக்கும் நடவடிக்கைகளை வட மாகாணசபை எடுக்க வேண்டும்!

**இலங்கைக் கடல் எல்லைக்குள் வந்து அத்துமீறி மீன்பிடிக்கும் பெரும்பாலான தமிழக மீனவர்கள் அன்றாடக் கூலிக்காக வருபவர்கள். இழுவைப் படகுகள் எல்லாமே பெரும்பாலும் பெரிய முதலாளிகளுக்குச் சொந்தமானவை. அந்த பெரும் முதலாளிகள் இரண்டு திராவிடக் கட்சிகளுக்கும் இலட்சக்கணக்கில் தேர்தல் நேரத்தில் பணத்தை வாரி வழங்கும் அந்தக் கட்சிகளின்ஆதரவாளர்கள். எனவேதான் ஜெயலலிதாவும், கருணாநிதியும் இந்தப் பிரச்சினையில் அடிக்கடி குரலெழுப்புவதுடன், இந்தியப் பிரதமருக்கும் கடிதம் எழுதுகின்றனர். ஆனால் இந்த தமிழின தலைவர்களும், தலைவிகளும் திரும்பத் திரும்ப குரல் எழுப்பினாலும், இந்திய மத்திய அரசாங்கம் பெரும்பாலும் வாய்மூடி மௌனமாகவே இருந்து வருகிறது. இந்திய அரசு இப்படி மெத்தனமாக இருப்பதற்குக் காரணம், தமிழக மீனவர்கள் செய்வது தவறு என்பது அவர்களுக்கும் தெரியும்.**

## வானவில் 34 தலையங்கத்திலிருந்து

இன்று வட பகுதி மக்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளில் ஒன்றாக, எமது கடல் எல்லைகளுக்குள் தமிழக மீனவர்களின் ஊடுருவல் உருவெடுத்துள்ளது. இந்தப் பிரச்சினையைப் பலரும் வரையறுத்துக் கூறுவது போல, "வட பகுதி மீனவர்கள் பிரச்சினை" என்று கூறாமல், வட பகுதி மக்களின் பிரச்சினை என்று நாம் பொதுவாகக்குறிப்பிடுவதற்கு நிறைந்த காரணங்கள் இருக்கின்றன.

இலங்கையின் வட பகுதியைப் பொறுத்தவரை, பாரம்பரியமான தொழில்களாகப் பெரும்பான்மையான மக்களால் விவசாயமும், மீன்பிடித் தொழிலுமே இருந்து வருகின்றன. இந்த இரண்டு தொழில்களுமே கடந்த 30 வருடங்களாக போர் காரணமாக பாதிக்கப்பட்டு வந்தாலும், மிக மோசமாகப்பாதிக்கப்பட்டது மீன்பிடித் தொழில்தான்.

குறிப்பாக விவசாயத்தில் பாரம்பரியமாக ஈடுபட்டு வந்தவர்கள் பெரும்பாலும் நிலத்தைச் சொந்தமாக வைத்திருந்த உயர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தான். அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களில் ஒரு பகுதியினர் கடந்த காலங்களிலேயே அரச உத்தியோகம், வர்த்தகம் போன்றவற்றின் மூலமும் வருமானம் பெற்று வந்தனர். போர் ஆரம்பமான பின்னர் அவர்களது வாழ்வாதாரங்களில் பாதிப்பு ஏற்பட்டபோது, பலர் பல வழிகளிலும் பணத்தைப் புரட்டி ஏஜென்சிகள் மூலம் வெளிநாடுகளுக்குச் சென்று குடியேறி இன்று வசதியுடனும், வனப்புடனும் வாழ்கின்றனர்.

ஆனால் மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பி வாழ்ந்தவர்கள் நிலை அதுவல்ல. சாதாரணமான காலங்களிலேயே அவர்களது வாழ்க்கை உத்தரவாதமானதாகவோ, இலகுவானதான ஒன்றாகவோ இருக்க வில்லை. இயற்கையை நம்பியே அவர்களது தொழில் நடந்து வந்தது. போர் ஆரம்பமாவதற்கு முன்னர் கூட, அவர்களது வாழ்வு அரைகுறை வயிற்றுடன்தான் நடந்து வந்தது. போர் ஆரம்பமான பின்னர் அவர்களது வாழ்க்கை தொடர்ச்சியான இடப்பெயர்வுடனும், இழப்புகளுடனும்தான் கழிந்தது. அரசாங்கம் வழங்கிய நிவாரணத்தில்தான் அவர்கள் தமது வயிற்றை அரைகுறையாகக் கழுவிக் கொண்டனர்.

இன்று பலர் தமது மண்ணை விட்டு வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டு, அங்கு சகல வசதி வாய்ப்புகளுடனும் வாழ்ந்து கொண்டு "தாயக மீட்பு"ப் போராட்டம் நடாத்துவது போல அல்லாது,இந்த மீனவ மக்கள் எவ்வளவோ கஷ்டங்களை எதிர்நோக்கிய போதிலும், தாம் வாழ்ந்த மண்ணை விட்டு வெளியேறாதவர்கள்.

அவர்களது நம்பிக்கை வீண்போகவில்லை. 2009ஆம் ஆண்டு யுத்த முடிவுடன், அதுவரை கடலில் மீன்பிடிப்பதற்கு இருந்து வந்த தடைகள் படிப்படியாக நீக்கப்பட்டு, இன்று நமது மீனவர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் கடலுக்குச் சென்று மீன் பிடிக்கலாம் என்ற சுதந்திரமான நிலை ஏற்பட்டுள்ளது.

போர் முடிந்து அமைதி தோன்றி பல்வேறு வசதிகளை அரசாங்கம் செய்து கொடுத்த போதும், வட பகுதி மீனவ மக்களின் வாழ்க்கை தொடர்ந்தும் கண்ணீர்க்கதையாகவே தொடர்கிறது. இப்பொழுது துன்பம் "சிங்களப் பேரினவாதிகளிடம்" இருந்து வரவில்லை. 20 மைல் தூரத்தில் கடலுக்கு அப்பால் உள்ள "இரத்தத்தின் இரத்தங்களான" அல்லது "தொப்புள்கொடி உறவுகளான" அல்லது "தாய்த் தமிழ் உறவு-களிடம்" இருந்து வருகிறது. ஆம், தமிழக மீனவர்கள் எமது மீன் வளங்களை அத்துமீறிச் சூறையாடுவதுடன், எமது மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களையும் நாசம் செய்துவிட்டுப் போகின்றனர். அவர் கள்தான் இன்று நமது மீனவர்களின் வாழ்க்கையைச் சூறையாடுபவர்களாக இருக்கின்றனர்.

போர் காரணமாக எமது மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதற்கு தடை இருந்த போது, தமிழக மீனவர்கள் எமது கடலில் கேட்பாரின்றி வந்து மீன்பிடித்துச் சென்றனர். சரி, அதுதான் போகட்டும். ஆனால் போர் முடிவுற்று, எமது மீனவர்கள் எமது கடல் பிரதேசத்தில் சுதந்திரமாக மீன் பிடிக்கட்டும் என்று விட்டு விட்ட பின்னரும், தமிழக மீனவர்கள் அடாவடித்தனமாக எமது கடல் வளங்களைவாரிச் செல்வது எந்தவிதத்தில் நியாயம்? அதுவும் தினமும் சராசரி 500 தமிழக இழுவைப் படகுகள் எமது கடல் பிரதேசத்தில் நுழைந்து மீன்பிடிப்பதென்றால்...? தமிழக மீனவர்கள் சாதாரணமானமுறையில் எமது கடலில்நுழைந்து மீன்பிடிக்கவில்லை.எமது கடலில் தடை செய்யப்பட்ட இழுவைப் படகுகளையும், மீன் பிடி உபகரணங்களையும் பயன்படுத்தி மீன் பிடிக்கிறார்கள். பொன் முட்டை இடும் ஒரு வாத்துப் பற்றியும், அதை ஒரே நாளில் பெற முயன்ற பேராசைக்காரன் பற்றியும் எல்லோரும் படித்திருப்போம். அந்தப் பேராசைக்காரன் போலவே தமிழக மீனவர்களும் நடந்து கொள்கிறார்கள். ஒரே நாளில் எல்லா பொன் முட்டைகளையும் எடுத்துவிடும் பேராசையில் அந்த வாத்தைக் கொல்வது போல, எதிர்காலத்தில் கடல் வாழ் உயிரினங்கள் இனப்பெருக்கம் செய்ய முடியாதபடி, பெரிய மீன்களிலிருந்து குஞ்சு மீன்கள் வரை தமிழக மீனவர்கள் தாம் பயன்படுத்தும் மடி வலையில் வாரி அள்ளிச் சென்று விடுகிறார்கள்.

இந்த நிலைமையில் இலங்கைக் கடற்படையினர் எமது மீனவர்களைப் பாதுகாப்பதற்காகவும், எமது நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதற்காகவும் தமிழக மீனவர்களைத் தடுத்து நிறுத்தினால், அல்லது கைது செய்தால், "ஐயோ! சிங்கள அரச படை தமிழக மீனவர்களைக் கொடுமைப்படுத்துகிறது" என தமிழக அரசும், அரசியல்வாதிகளும் கூக்குரல் எழுப்புகிறார்கள். ஆர்ப்பாட்டம்செய்து ஊர்வலம் போகிறார்கள். "பந்த்" நடத்துகிறார்கள். அதாவது தமது கடற்கொள்ளையைச் சட்டப்படி தொடர அனுமதிக்க வேண்டும் என மிரட்டுகிறார்கள்.இந்த அமர்க்களத்தில் வலது - இடது என்ற வேறுபாடில்லாமல் எல்லா தமிழக ஓட்டுக் கட்சிகளும் ஈடுபடுகிறார்கள்.

இவ்வளவையும் செய்துகொண்டு ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்காக நீலிக் கண்ணீர் வேறு வடிக்கிறார்கள். ஏன் இந்த நடிப்பு? பெரும்பாலான தமிழக அரசியல்வாதிகள்சினிமாக்காரர்கள் என்பதால், இதிலும் நடிக்கிறார்களா?

உண்மை அது மட்டுமல்ல. தி.மு.க, அ.இ.அ.தி.மு.க என இரண்டு கட்சிகளும் இந்தப் பிரச்சினையில் தீவிரம் காட்டுவதற்கு முக்கிய காரணம்உண்டு. அதாவது இலங்கைக் கடல் எல்லைக்குள் வந்து அத்துமீறி மீன் பிடிக்கும் பெரும்பாலான தமிழக மீனவர்கள் அன்றாடக்கூலிக்காக வருபவர்கள். இழுவைப் படகுகள் எல்லாமே பெரும்பாலும் பெரிய முதலாளிகளுக்குச் சொந்தமானவை. அந்த பெரும் முதலாளிகள் இரண்டு திராவிடக் கட்சிகளுக்கும் இலட்சக்கணக்கில் தேர்தல் நேரத்தில் பணத்தை வாரி வழங்கும் அந்தக் கட்சிகளின் ஆதரவாளர்கள். எனவேதான் ஜெயலலிதாவும், கருணாநிதியும் இந்தப்பிரச்சினையில் அடிக்கடி குரலெழுப்புவதுடன், இந்தியப் பிரதமருக்கும் கடிதம் எழுதுகின்றனர்.

ஆனால்இந்த தமிழின தலைவர்களும், தலைவிகளும் திரும்பத் திரும்ப குரல் எழுப்பினாலும், இந்திய மத்திய அரசாங்கம் பெரும்பாலும் வாய்மூடி மௌனமாகவே இருந்து வருகிறது. இந்திய அரசு இப்படி மெத்தனமாக இருப்பதற்குக் காரணம், தமிழக மீனவர்கள் செய்வது தவறு என்பது அவர்களுக்கும் தெரியும்.

சமீபத்தில் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு,பின்னர் விடுதலை செய்யப்பட்ட சில தமிழக மீனவர்கள் தமது ஊர் திரும்பிய பின்னர் கருத்து வெளியிட்டபொழுது,தம்மை இலங்கையில் இருக்கின்ற இந்தியத் தூதரக அதிகாரிகள் சரியாக நடத்தவில்லை என்றும்,"உங்களால் பெரியதொல்லை" என்று திட்டியதாகவும் குறிப்பிட்டிருக்கின்றனர். இதுவும் தமிழக மீனவர்களின் ஊடுருவல் பற்றி இந்திய அரசு என்ன கருதுகிறது என்பதற்கு உதாரணம்.

தமிழக மீனவர்களின் ஊடுருவலைத் தடுக்க இலங்கை கடற்படை நடவடிக்கை எடுத்தால், சிங்கள அரசின் அடாவடித்தனம் என தமிழக அரசியல்வாதிகள் கூக்குரல் இடுகிறார்கள். நமது மீனவர்கள் சார்பாக யாராவது (ஈ.பி.டி.பிபோன்ற கட்சிகள்) ஊர்வலம் நடத்தினால்,அதை அரச எடுபிடிகளின் சதி என்கிறார்கள். மீனவ அமைப்புகள் சுயாதீனமாக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டாலும், அதற்கு இலங்கை அரசு சார்பு முத்திரை குத்துகிறார்கள்.வானத்திற்கும் பூமிக்கும் இடையில் உள்ள அனைத்துக்கும் தீர்வை முன்வைக்கும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர், மனோ கணேசன் வகையறாக்களோ இந்தப் பிரச்சினையில் நிரந்தர ஊமைகளாகி விடுகிறார்கள்.

எது எப்படியிருந்த போதிலும், நமது மீனவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை அரசாங்கமும், நாட்டுப்பற்றுள்ள அரசியல் கட்சிகளும், மீனவர் சங்கங்களும் தொடர வேண்டும். அதே வேளைஅதற்கும் அப்பால்,தற்பொழுது தெரிவு செய்யப்பட்டுள்ள மாகாண சபைக்கு இந்த விடயத்தில் மிக முக்கியமான பங்கு ஒன்று இருக்கிறது.

அதிலும் வடமாகாணசபை முதலமைச்சராக அமோகமான விருப்பு வாக்குகளுடன் தெரிவு செய்யப்பட்டுள்ள, எந்தவொரு கட்சியையும் சேராத, உயர்நீதிமன்ற நீதியரசராக இருந்த, முதலமைச்சர் விக்னேஸ்வரன் இந்த விடயத்தில் அக்கறை எடுத்துச் செயற்பட வேண்டும். வட மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும், முதலமைச்சர் விக்னேஸ்வரனும் அமோக வெற்றிபெறுவதற்கு, இந்த வட பகுதி மீனவர்களின் வாக்குகளும் கணிசமான பங்கை வகித்துள்ளன என்பதை அவர்கள் மறுத்துவிடவோ, மறந்துவிடவோ முடியாது.

வட மாகாணசபை இந்தப் பிரச்சினையில் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாக இருந்தால், தமிழக மீனவர்களின் ஊடுருவலை ஓரளவாவதுகட்டுப்படுத்த முடியும் என்பதுடன், நமது மீனவர்கள் பாதுகாக்கப்படவும் வழி ஏற்படும். குறைந்த பட்சம் எமது மீனவர்களுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வு, ஒரு நம்பிக்கையாவது ஏற்படும்.

வட மாகாணசபையும், அதனை வழி நடாத்தும் முதலமைச்சர்விக்னேஸ்வரன் அவர்களும் தமது இனத்தின் ஒரு பகுதி மக்களின் இந்த மனிதாபிமானப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்படுவார்களா?


# தேசிய ஒருமைப்பாட்டுடன் அரச ஊழியர் பணியாற்ற வேண்டும்

## பாதுகாப்புச் செயலர் அறிவுறுத்து

(கொழும்பு)

அரச ஊழியர்களாகிய நாம் நாட்டின் சமூக மயமான பொருளாதார அபிவிருத்திக்காக மிகுநத அர்ப்பணிப்புடனும் தேசிய ஒருமைப்பாட்டுடனும், பணியாற்ற கடப்பாடுடையவர்களாக உள்ளோம் என பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவிததுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை அமைச்சின் ஊழியர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முதலாம் திகதி காலையில் தென்பகுதி உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களை சந்தித்து சுமுகமாக கலந்துரையாடினார். தங்காலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தி எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்க அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

அனைத்து நிறுவனங்களையும் அபிவிருத்தி நோக்கி ஒன்றிணைப்பது மிகவும் அவசியமானது. கடந்த காலங்களைப் போன்றே இந்த ஆண்டிலும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளது.

அரச ஊழியர்களான நாம் நாட்டினதும் நாட்டு மக்களினதும் நலன்கருதி எமது கடமைகளை சிறப்பாக முன்னெடுத்து நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யவேண்டும் என்றார்.

இந் நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகள், இராணுவ உயரதிகாரிகள் மற்றும் அமைச்சின் சக ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

அத்துடன் பாதுகாப்பு அமைச்சின் சேவா வனிதா பிரிவின் தலைவி திருமதி. அயோமா ராஜபக்ஷவும் கலந்து கொண்டார்.

# உயரிய ஒழுக்கத்தினை இராணுவத்தினர் பின்பற்ற வேண்டும்



(கொழும்பு)

இராணுவத்தின் அனைத்து தரப்பினரும் உயரிய ஒழுக்கத்தை பின்பற்றவேண்டும் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்க கோரியுள்ளார்.

இராணுவ தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புதுவருட நிகழ்வில் பங்கேற்றபோதே அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

இராணுவத்தினரின் அர்ப்பணிப்புக்கும் சீரான கடமைகளுக்கும் ஏற்கனவே ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு செயலாளரிடம் இருந்து உரிய மரியாதை வழங்கப்படுகின்றது.

இந்தநிலையில் தற்போது இராணுவத்துக்குள் புதிதான நிர்வாக அமைப்புக்கள் கொண்டு வரப்படுகின்றது என்றார்.

# முதலமைச்சர் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படவில்லை



(கொழும்பு)

மேல் மாகாணசபைத் தேர்தலுக்கு முதலமைச்சர் வேட்பாளர் எவரையும் தெரிவு செய்யவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பேரவையின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலில் போட்டியிடுமாறு ஐக்கிய தேசியக் கட்சி எவரையும் நிர்ப்பந்திக்காது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை சமூகத்தின் ஒரு தரப்பினர் லம்போர்கினி வாகனங்களைப் பயன்படுத்தி வருகின்ற போதிலும் பலர், அன்றாட உணவுகளை பெறறுக் கொள்ள முடியாது அவதியுறுகின்றனர். வட கொரியாவின் ஆட்சி முறைமையே இலங்கையில் தற்போது நிலவி வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளனர்.

# பல்கலை மாணவர்களுக்கு மத்திய கல்விமுறை அறிமுகம்

(கொழும்பு)

இவ்வருடம் தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மத்திய கல்வி முறை ஒன்றை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக உயர் கல்வி அமைசசு தெரிவித்துள்ளது.

அனைத்து பல்கலைக்கழகங்களிலும் கலை, சமூகக்கல்வி மற்றும் முகாமைத்துவ பீடங்களில் முதலில் இந்தக் கல்வி முறை அறிமுகம் செய்யப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

அதற்கு ஏற்றவாறு பாடப் புத்தகங்கள் அச்சிடப்படவுள்ளன. விரிவுரைகளுக்கு பதிலாக மாணவர்களின் பங்களிப்பில் கல்வி கற்பிக்கும் முறையை அறிமுகம் செய்வதே இதன் நோக்கமாகும்.

படைப்புத்திறன் மிக்க மாணவர் சந்ததி ஒன்றை உருவாக்கி குழுவாக இயங்கும் வகையில் மாணவர் மத்திய கல்வி முறை அறிமுகப்படுத்தப் படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரூபவாஹினி கூட்டுத்தாபன தலைவர் இராஜினாமா

(கொழும்பு)

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக கடமையாற்றி வந்த மொஹான் சமரநாயக்க பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

மொஹான் சமரநாயக்க ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளராகவும் கடமையாற்றி வருகின்றார். ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பதவியை தொடரப் போவதாகத் அறிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் மொஹான் சமரநாயக்க இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்தின் தலைவராக கடமையாற்றி வருகின்றார்.



முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரும் தென் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான பிரதாபசிங்க, புதிய தலைவராக ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பினை ஏற்றுக்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தனியார் பேருந்துகள் தொடர்பாக "ஸ்கைப்" மூலம் முறையிடலாம்

## புதிய இணையத்தளம் ஆரம்பிப்பு

தனியார் பேருந்துகள் தொடர்பாக ஸ்கைப் (Skype) தொழில்நுட்பத்தினூடாக முறைப்பாடு செய்யும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கென தனியார் போக்குவரத்து அமைச்சில் விசேட நடவடிக்கைப் பிரிவொன்று தனியார் போக்குவரதது அமைச்சர் சி.பி. இரத்நாயக்காவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஸ்கைப் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி புதிய முறைப்பாட்டுப் பிரிவுடன் தொடர்புகொண்ட அமைச்சர் தமிழில் முறைப்பாட்டுப் பிரிவுடன் உரையாடினார்.

தனியார் பேருந்துகள் குறிதத முறைப்பாடுகளை 0716550000 எனும் இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு முன்வைக்க அவகாசம் உள்ளதோடு அமைச்சின் Private transportservices எனும் ஸ்கைப் முகவரியுடன் தொடர்பு கொள்வதினூடாகவும் முன்வைக்க முடியும்.

பேருந்துகள், சாரதிகள், நடத்துநர்கள் தொடர்பான முறைபபாடுகள், பேருந்து சேவை பற்றிய முறைப்பாடுகள், சத்தமாக பாடல் ஒலித்தல், மோசமான படங்களை காண்பித்தல் போன்ற சகல விடயங்கள் குறித்தும் இங்கு முறையிட முடியும்.

தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுக்கும் சம்பந்தப்பட்ட மாகாண போக்குவரத்து அதிகார சபைகளுக்கும் பொலிஸ் போக்குவரத்து பிரிவுக்கும் முறைப்பாடுகள் முன்வைத்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய அவர், பயணிகளை பாதுகாக்க சகல நடவடிக்கைகளும் எடுப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிலும் முறைப்பாட்டுப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட உள்ளது. தமிழ், சிங்கள மொழி மூலம் புதிய பிரிவிற்கு முறையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அமைச்சின் புதிய இணையத்தளமும் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. இதனூடாக தனியார் பேருந்துகளின் நேர அட்டவணை கட்டணம் குறித்து தகவல் பெறமுடியும் என அமைச்சர் தெரிவித்தார்

# சுங்கப்பகுதியின் நடவடிக்கையால் அரசாங்கத்திற்கு 470 பில்லியன் வருமானம்

(கொழும்பு)

கடந்த வருடம் மேற்கொண்ட சுற்றிவளைப்புக்களினால் அரசாங்கத்திற்கு 470 பில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளது.

கடந்தவருடம் 15 கோடி ரூபா பெறுமதியான 25 கிலோகிராம் தங்கம் கைப்பற்றப்பட்டதாக சுங்கப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் நாட்டிலிருந்து தங்கம் கொண்டு செல்லப்பட்ட 290 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. குற்றமிழைத்தவர்களிடம் இருந்து 54 இலட்சம் ரூபா பணம் அபராதமாக அறவிடப்பட்டுள்ளது.

சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் மற்றும் பொருட்கள் விலைமனுக் கோரல் மூலம் விற்பனை செய்யப்பட்டு, அரசாங்கத்திற்கு 70 கோடி ரூபா பணம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் கலாசாரம் மற்றும் பல்வகைமையை சீர்குலைக்கும் வகையில் வெண் சந்தனம், வல்லபட்டை, புராதன பொருட்கள், உயிரினங்கள் கொண்டு செல்லப்பட்ட 35 சம்பவங்கள் பதிவானதாக லெஸ்லி காமினி குறிப்பிட்டார்.

# ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் இணைந்தார் ஐ.தே.க உறுப்பினர்

ஐக்கிய தேசியக் கட்சியின் தென் மாகாணசபை உறுப்பினர் கிறிசாந்த புஷ்பகுமார எனப்படும் ரத்தரன் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ரத்தரன் பதவி விலகியுள்ளார்.

எதிர்வரும் தென் மாகாணசபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடும் நோக்கில் சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளார்.

காலியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையை பெற்றுக்கொண்டு இம்முறை தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி தம்மை உரிய விதத்தில் கவனிக்கத் தவறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# முகமாலை வடக்கு கிராம வீதி சேவா நிறுவனத்தால் புனரமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முகமாலை வடக்கு கிராமத்தின் உள்ளக வீதி சேவா நிறுவனத்தினால் 22 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

யுத்த அனர்த்தங்களினால் இக்கிராம மக்கள் இடம்பெயர்ந்து மீள்குடியேறியுள்ள நிலையில் இக்கிராமத்தின் உள் வீதி நீண்டகாலமாக புனரமைப்புக்கள் எவையுமின்றிக் காணப்பட்டதுடன் இதனால் இக்கிராமத்திலுள்ள மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர்.

குறிப்பாக இவ்வீதி புனரமைப்பு இன்மையால் இக்கிராமத்திலுள்ள மக்கள் அவசர தேவை நிமிர்த்தம் செல்வதாயின மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்கியதாகவும் தெரிவிக்கும். மக்கள் மழை காலங்களில் வீதி சேறும் சகதியுமாக காணப்படுவதுடன் போக்குவரத்து தடைபட்டிருந்தது. இதனால் மக்கள் அத்தியாவசிய தேவைகளை நிறை வேற்றிக் கொள்வதில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வந்ததாகத் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் குறித்த கிராமத்தின் மீள் குடியேறிய குடும்பங்களின் வாழ்வாதார உட்கட்டுமாணப் பணிகளை முன்னெடுத்துவரும் சேவா நிறுவனம் இவ்வீதியை 22 இலட்சம் ரூபா செலவில் புனரமைத்துள்ளது.

இதனால் தற்போது இக்கிராம மக்கள் தாம் இலகுவான போக்குவரத்தை மேற்கொண்டு வருவதாக மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

## நூல்வெளியீடு

பருத்தித்துறை தும்பளை முத்துமாரியம்மன் தர்மபரிபாலன சபையின் அனுசரணையுடன் முத்துமாரி அம்மன் நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 15ஆம் திகதி மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந் நூல் தும்பளை முத்துமாரியம்மனை பற்றிய வரலாறுத் தகவல்களையும் அற்புதங்களையும் உள்ளடக்கியுள்ளதுடன் இதன் பிரதி ஒன்று 100 ரூபா என சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# உங்களின் தொழில் தெரிவுக்கு வழிகாட்டும் ஜோதிடம்

ஜோதிர் வித்யாரத்னா
வி.ஏ.சிவராசா

பொருள் இல்லாதவர்க்கு இந்த உலகம் இல்லை. இல்லாதவனை இல்லாள் மட்டுமல்ல பெற்றேடுத்த தாயும் மதிக்கமாட்டாள். செல்வம் அற்றவனை செல்லாக்காசாகவே சமூகம் மதிக்கும். பணமற்றவனின் சொல்லும் அம்பலம் ஏறாது.

ஆம்! பொருளைத் தேடித் தருவது தொழிலாகும். உங்களுக்குப் பொருத்தமான தொழிலை மேற்கொண்டால் மட்டுமே உயர்வும் பெருமையும் கிட்டும். கையொப்பம் வைக்கத்தெரியாமல் கைநாட்டு வைத்து பொருள்வளம் தேடிய கோடீஸ்வரர்களின் பெயர்களின் வரலாற்றில் இடம் பெற்றிருப்பப்பது கண்கூடு பொருத்தமான தொழில்களை எப்படித்தெரிந்தெடுப்பது என்ற கேள்விக்குப்பதிலாக உங்கள் ஜாதகமும், பிறப்பு எண்களும், (எண் ஜோதிடம்) கைரேகையும் சான்றாக உசாத்துணையாக விளங்கி நிற்கின்றது. நாங்கள் அன்றாட வாழ்வில் பொருத்தமில்லாத நட்டத்தை தரக்கூடிய தொழிலை மேற்கொண்டு பின்னர் கவலை தேங்கி வழிய அவதிப்படுகின்றோம். எங்கள் தகுதிக்கேற்ற சோதிடம் எடுத்துரைக்கின்ற தொழிலில் ஈடுபட்டால் தான் நிச்சயம் வெற்றிபெற்று அதிர்ஷ்ட தேவதையின் சுவீகாரப் புத்திரராக வரமுடியும்.

ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கான மனோசக்திகள் கொண்டு விளங்கும் ஒருவர் அதற்கேற்ற தொழிலில் ஈடுபட்டால் மற்ற எண்ணிக்கையில் அதாவது வேறுபட்ட குண அம்சங்கள் உடையவர்கள் எவ்வளவு திறமைசாலிகளாக இருந்த போதிலும் அவர்களுடன் போட்டியிட்டு வெல்லவே முடியாது. உதாரணமாக 01,10,19,28ஆகிய திகதிகளில் பிறந்த 1ஆம் எண்காரர்கள் நேர்மையான தன்மைகளும் ஊக்கமும் அறிவாற்றலும் நிரம்பப்பெற்றவர்களாக இருந்தபோதிலும் இவர்களிடம் நாணல் புல்போன்று வளைந்து கொடுக்கக் கூடிய தன்மைகளின்றி நிமிர்ந்து நிற்பார்.

கஷ்டமோ, நஷ்டமோ வரின் கலங்கிக் குழம்புவார். இப்படிப்பட்ட எண்காரர்கள் தொழிலில் ஈடுபட்டால் நட்டம் வந்தால் சமாளித்து எழக்காலதாமதமாகும். ஆனால் 5,14,23ஆகிய திகதிகளில் ஜனனமான 5ஆம் எண்காரர்கள் மலைபோல் உறுதியாக நின்று கஷ்டநட்டத்தைக் கண்டு கலங்காது 'எல்லாம் போய்விட்டாலும் நான் இருக்கின்றேன்' வேறு ஏதாவது வழியைக் கையாண்டு சமாளித்துக் கொள்கின்றேன் என்று சுதாகரித்து எழுந்து சமயோசித்மான யோசனைகள் மனதில் ததும்பி வியாபாரத்தில் பிறர் வியக்கும் வண்ணம் வெற்றித்திருமகனாக ஏறுபோல் வீறு நடைபோட்டு வலம் வருவார்.

இவர்களுக்குச் சூழ்நிலையை அனுசரித்து வாழ்க்கையை செலுத்தும் மனப்பக்குவம் ஏற்படும். முதலாம் எண்காரர்களுக்குத் தீவிரமான விருப்பு, வெறுப்புக்கள் இருக்கும். ஒரு இலட்சியத்தை அடைவதற்கு தளராமல் உழைக்க முடியுமே ஒழிய திட்டமில்லாத வாழ்க்கையை நடாத்துவதில் சாமர்த்தியமுண்டாகாது.

தொழில்கள் முதலியன சூழ்நிலையை அனுசரித்து திட்டங்களை, யுக்திகளை மாற்றிக்கொண்டு போகின்றவர்களுக்கே இலாபமளிக்கக் கூடியதாக இருக்கும். 6,15,24ஆகிய திகதிகளில் பிறந்த 6ஆம் எண்ணினர் மனவெழுச்சி கொண்டவர்கள். சுக்கிர ஆதிக்கம் (வெள்ளி) தீவிரமான எழுச்சியைக் கொடுக்கும். இயற்கையாகவே இவர்களுக்கு மனோரம்மியமான பொருட்களில், சப்தங்களில் நாட்டமிருக்கும் புலன்களுக்கு இன்பந்தராத தொழில்களில் இவர்களுக்கு முன்னேற்றம் கிடைக்காது. ஏதாவதொரு கலையில் நாட்டமிருக்கின்மட்டுமே சதா அதையே நினைத்தின்புறுவர். கலையைத் தொழிலாகக் கொண்டிருப்பின் புகழும் வெற்றியும் ஏற்படும்.

வெற்றி ஏற்படுவது பொருத்தமான தொழிலையும் முயற்சியின் தன்மையையும் ஊக்கத்தையும் பொறுத்தமையும்.

'தெய்வத்தால் ஆகாதெனினும்
முயற்சிதான் மெய்வருந்தக்
கூலிதரும்' - என்றார் வள்ளுவர்.

'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்பது முதுமொழி.

அவரவர்கட்கு ஏற்ற தொழிலில் ஈடுபட்டால்தான் சிரத்தை, மன மகிழ்வு என்பன உண்டாகும்.

பணம் சம்பாதிக்கவேண்டும் என்பதற்காக மாத்திரம் உங்களுக்கு ஆர்வமில்லாத ஒரு தொழிலில் இறங்கவேண்டாம். அப்படி எத்தொழிலிலாவது இறங்கினாலும் அத்தொழிலில் இயற்கையான ஈடுபாடுடையவர்களுடன் உங்களால் ஒருநாளும் போட்டியிட்டு வெல்ல முடியாது.

இதுவோ போட்டிமிக்க உலகம். வென்றவனே வாழ்ந்து காட்டுவான். தோற்றவனுக்கு முட்டாள் பட்டமே கிடைக்கும். வெற்றிக்குத்தகுதி தேவை என்பது ஒரு கசப்பான உண்மை. ஆகையால் பெற்றோர்கள் தமது குழந்தைகளை அவரவர்கட்டு ஏற்ற தொழில்களிலே பிறந்த எண்களுக்கேற்ப, ஜாதகத்தின் கர்மஸ்தானமான (தொழில்) பத்தாம் இடம் குறிக்கும் தொழிலின் வகைக்கேற்ப ஈடுபடுத்த முயலுங்கள். ஒருவர் பிறந்த எண் குறிக்கும் தொழில்களுக்கான, தகுதியுடையவராவர். கூட்டு எண் குறிக்கும் தொழில்களில் ஈடுபட்டால் வெற்றிகிட்டும் உங்கள் பிறந்த திகதி எண்கள் கூட்டெண்கள் எத்தகைய தொழிலையும், சூழ்நிலையையும் உண்டாக்கித்தரும் என்பதைக் கவனிப்போம்.

**பிறந்த திகதிகள், 01,10,19,28**

உங்களுக்கு சூரிய ஆதிக்கம் எண்ணில் இருப்பதினால் அரசாங்கத்தின் ஆதரவு கிட்டும் அரசாங்கத் தொடர்பான எல்லாத் தொழில்களிலும் வெற்றிவாகை சூடலாம். மதசம்பந்தமான காரியங்களிலும் ஈடுபடலாம் உத்தியோக உயர்வுண்டாகும். அரசியல் பிரமுகராகலாம். 28ஆம் திகதியில் பதவி ஏற்பதைக் கைவிடவும். வைத்தியத்தொழிலும் ஏற்றது. சூட்சும அறிவுடையவர்களாதலால் நோயை நொடியில் உணர்ந்து கொள்வர். கூட்டெண் 3 அல்லது 6 எனின் மருந்தளிப்பதில் திறமை விருத்தியாகும். கூட்டெண் 9 ஆக இருந்தால் சத்திரசிகிச்சையில் மன்னராக விளங்கலாம். கூட்டு எண் 5 எனின் நூதன முறை சிகிச்சைகளில் வெற்றி ஏற்படும். **(தொடரும்)**

# கௌரவிப்பு விழா

யாழ்.பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் ஏற்பாட்டில் சிரேஷ்ட ஓய்வூதியக் குடிமகன் விருது பெற்ற வி.ஸ்ரீசக்திவேலுக்கான கௌரவிப்பு விழா நாளை சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் சங்க உபதலைவர் வி.எஸ்.வீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வாழ்த்துரைகளை யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி பொ.பாலசுந்தரம்பிள்ளை, தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறுதிருமுருகன், யாழ். மத்தியஸ்தர் சபையின் உபதவிசாளர் வே.ஞானகாந்தன் சைவ பரிபாலனசபை செயலாளர் இரா.செல்வவடிவேல், சைவவித்தியா விருத்திச்சங்கத் தலைவர் சோ.பத்மநாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

மேலும் அறவழி போராட்டக்குழு செயலாளர் வி.ஜி.தங்கவேல், யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியச்செயலாளர் து.ரமணதாஸ், யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் எம்.மகேந்திரன், பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் ஆர்.எம்.வி.ஜே.ரணதுங்க, இந்து அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் எஸ்.பரமநாதன் ஆகியோரும் வாழ்த்துரைகளை வழங்கவுள்ளனர்.

# வருடாந்த மகோற்சவம்

சாவகச்சேரி நகர் வாரிவனேஸ்வரம் புராதன வாரியப்பா சிவன் கோவில் மகோற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றது. ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் விழா ஆரம்பாகின்றது. 13ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும், 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறவுள்ளதுடன் மறுநாள் மு.ப 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளது. மகோற்சவ காலத்தில் தினமும் பகல் மகேஸ்வர பூசை இடம்பெற்று அன்னதானம் வழங்கப்படவுள்ளது. ஆலய பிரதம குரு கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் விழாக்கள் இடம்பெறவுள்ளன. (இ)

# முரசின் இன்றைய பலன்

(03.101.2014 வெள்ளிக்கிழமை)



விஜய வருஷம் மார்கழி மாதம் 19 ஆம் திகதி.
உத்தராட நட்சத்திரம் மு.ப 08.30 வரை. பின் திருவோணம்.
பொன்னாலை வரதராஜப்பெருமாள் கொடியேற்றம்.
இராகுகாலம் 11.00 - 12.30 வரை. சுபநேரம் 06.30 - 08.00 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** திறமைகளை வெளிப்படுத்த கிடைக்க விருக்கும் பொன்னான வாய்ப்பினைக் கைநழுவவிடாதீர்கள், நம்பிக்கையீனம் ஏற்பட்டதால் விவாகமுயற்சியைக் கைவிட முஸ்தீபு.

**ரிஷபம்** மேலதிகாரிகளுடன் சுமுக உறவைப் பேணியதால் பதவி உயர்வு கிடைக்க வழிபிறத்தல், தொலைபேசி மூலம் தடைப்பட்டிருந்த பயண முயற்சி பற்றிய முடிவு எடுத்தல்.

**மிதுனம்** உங்கள் நகைச்சுவையான பேச்சு ஒரு சிலருடைய மனதைப் புண்படுத்திவிடும், எடுத்த காரியம் முடிக்க பகீரதப்பிரயத்தனம் ஏற்பட்டு ஜெயமடைதல்.

**கடகம்** தாயாரின் உடல் நிலை திடீரெனப் பாதிப்படைந்தாலும் மருத்துவத்தினால் துயர் நீங்குதல், திட்டமிட்ட காரியமொன்று பணவரவுத்தடையினால் இழுபடலாம்.

**சிம்மம்** மறைமுகமாக ஏற்படும் போட்டிகளைச் சமாளித்துப் பெருமை ஏற்படும், பிதாவின் உதவியினால் பயண முயற்சிக்கு பணம் திரட்டப்பெற்று ஆயத்தம் செய்தல்.

**கன்னி** சுப நிகழ்வுகளுக்கு பணச்செலவினை சக நண்பர்கள் பொறுப்பேற்பர், எதிர்பாராத திடீர் உள்ளூர் பயணமொன்றுக்கு செய்தி வரல்.

**துலாம்** பணியில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் உற்சாகமும் ஏற்படுவதினால் பழுகுறைதல், ஓய்வு நேரத்தில் ஆன்மீகத்தில் ஈடுபாடு காட்டுவதினால் அமைதி ஏற்படல்.

**விருச்சிகம்** பிறருக்கு பிணை வைப்பதையும் சிபார்சு செய்வதையும் த்விர்த்துக் கொள்ளுங்கள், நீண்டகாலம் மாறாதிருந்த நோய் ஆயுர்வேத வைத்தியத்தால் குணமடைதல்.

**தனுசு** உண்மைகளை எடுத்துரைப்பதினால் சிலரின் பகைமையைப் பெறக்கூடும், கருத்து வேற்றுமைகள் விலகுவதினால் குடும்பத்தில் நிலவிய முரண்பாடுகள் நீங்கிவிடும்.

**மகரம்** உங்களின் மேல் சுமத்தப்படும் விமர்சனங்களைக் கண்டு மனக்கிலேசம் படவேண்டாம், உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிருங்கள்.

**கும்பம்** சிறுசிறு அவமானச் சம்பவங்கள் மனதைவாட்ட நேரிடும், தேவையில்லாமல் பிறர் விடயங்களில் தலையிட வேண்டாம்.

**மீனம்** சில நாட்கள் தேங்கிக் காணப்பட்ட மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள், வியாபார ரீதியாக இலாபம் பெற புதிய யுக்திகளை மேற்கொள்ளல்.

## சாதனைத் துளிகள்...

• அண்டர்சன் 14 சிக்சர் அடித்ததன் மூலம், ஒரே போட்டியில் அதிக சிக்சர் அடித்த வீரர்கள் வரிசையில் 3ஆம் இடத்தைப் பிடித்தார். முதலிட்த்தில் இந்தியாவின் ரோகித் சர்மா உள்ளார். இவர், கடந்த ஆண்டு அவுஸ்ரேலியாவுக்கு எதிரான போட்டியில் 16 சிக்சர் விளாசி 209 ஓட்டங்களைக் குவித்தார். அடுத்த இடத்தில், அவுஸ்ரேலியாவின் வட்சன் 15 சிக்சர்களுடன் உள்ளார்.

• நியூசிலாந்து அணி மே.தீவுகளுக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் மட்டும் 22 சிக்சர்கள் (அண்டர்சன் 14, ரைடர் 5, மக்கல்லம் 3) விளாசியுள்ளது. ஒரே போட்டியில் ஒரு அணி அடித்த அதிகபட்ச சிக்சர் இதுவே. இதுவும் உலக சாதனை. இதற்கு முன் இந்தியா, கடந்த ஆண்டு அவுஸ்ரேலியாவுக்கு எதிராக 19 சிக்சர் விளாசியது. அது 50 ஓவர். நியூசிலாந்து அடித்திருப்பது வெறும் 21 ஓவரில் என்பது குறிப்பிடத்தக்கது.



## எதிர்பார்க்காத வீரரால் முறியடிக்கப்பட்ட சாதனை

எனது சாதனையை அதிரடிக்கு புகழ்பெற்ற கிறிஸ் கெய்ல், அல்லது டேவிட் வோர்னர் ஆகியோரில் ஒருவர் முறியடிக்க வாய்ப்பிருப்பதாக நம்பினேன். ஆனால் புதிய வீரர் ஒருவர் இச்சாதனையை முடிவுக்கு கொண்டு வருவார் என்று ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை. இச்சாதனையை விரைவில் ஒரு பாகிஸ்தான் வீரர் முறியடிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். ஆனால் இப்போது எல்லோரும் அண்டர்சனை பாராட்ட வேண்டிய நேரம் என பாகிஸ்தான் அதிரடித் துடுப்பாட்ட வீரர் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு நாள் போட்டியில் 36 பந்துகளில் சதமடித்து அப்ரிடியின் சாதனையை கோரி அண்டர்சன் முறியடித்தார். இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அப்ரிடி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கோரி அண்டர்சனின் பெயரை இதற்கு முன்பு நான் கேள்விப் பட்டதில்லை. இன்று (நேற்று முன்தினம்) காலை எனது உறவினர் வந்து உங்களது சாதனை முறியடிக்கப்பட்டு விட்டதாகக் கூறினார். புத்தாண்டில் எனக்கு வந்த முதல் செய்தி இது தான். ஆனால் இது மிகப்பெரிய சாதனை என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும். அண்டர்சன் எல்லா பாராட்டுகளுக்கும் தகுதியானவர். 36 பந்துகளில் சதம் அடிப்பதற்கு கடுமையான முயற்சி தேவை. சாதனைகள் எல்லாமே முறியடிக்கப்படக்கூடியவை தான். எனது சாதனையும் ஒரு நாள் தகர்க்கப்படும் என்பது தெரியும். ஆனால் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறும் வரை எனது சாதனை தொடர்ந்து நிலைக்க வேண்டும் என்று விரும்பினேன். ஏனெனில் அப்போது தான் எனக்கும், பாகிஸ்தானுக்கும் அது மிகப்பெரிய பெருமையாக இருக்கும். எனது பெயர் வரும் போதெல்லாம், இந்தச் சாதனையை பற்றிக் குறிப்பிட்டுப் பேசுவார்கள்.

இனி இச்சாதனைப் பட்டியலில் அண்டர்சனின் பெயர் வரும். ஆனால் 20 ஓவர் கிரிக்கெட்டின் அவதாரத்தால், எதிர்காலத்தில் இந்தச் சாதனைக்கும் ஒரு நாள் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று உறுதியாக நம்புகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சாதனை நிகழ்த்தியமை குறித்து அண்டர்சன் குறிப்பிடுகையில், ஆரம்பத்தில் ஓரிரு ஓட்டங்கள் எடுத்து ரைடருக்கு ஒத்துழைப்புக் கொடுக்கவே நினைத்தேன். ஆனால், பின்னர் ஆட்டத்தின் போக்கே மாறிவிட்டது. பந்து சிக்ஸருக்குப் பறக்க வேண்டும் அல்லது ஆட்டமிழக்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே நாங்கள் இருவரும் ஒவ்வொரு பந்தையும் எதிர் கொண்டோம். கடைசியில் எனது ஆட்டம் சாதனையில் முடிந்தது. அப்ரிடியின் சாதனையை முறியடிப்பது குறித்து நான் முன்கூட்டியே திட்டமிடவில்லை என்றார்.

## மோசமாகாது வாழ்க்கை



கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற பின் வாழ்க்கை ஒன்றும் மோசமாகி விடாது என்று கலிஸிடம் கூறியுள்ளார் சச்சின் டெண்டுல்கர்

தென்னாபிரிக்க சகலதுறை வீரர் கலிஸ், டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். அவரைப் புகழ்ந்து ட்விட்டரில் சச்சின் கூறியது:

கிரிக்கெட்டை உண்மையான உத்வேகத்துடன் விளையாடி வந்தீர்கள். உங்களுக்கு எதிராக விளையாடியது எனக்கு எப்போதும் மகிழ்ச்சிகரமான அனுபவமாகவே இருந்தது. கலிஸ் நீங்கள் உண்மையாகவே கிரிக்கெட் சம்பியன்தான். கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றபின் வாழ்க்கை ஒன்றும் மோசமாகிவிடாது என்று கூறியுள்ளார்.

## முரண்பாடான கருத்துக்கள்

(சிட்னி)

இங்கிலாந்தின் விக்கெட் காப்பாளர் மட் பிரயர் தொடர்பாக அவுஸ்ரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க்கும், இங்கிலாந்து அணியின் தலைவர் அலஸ்ரெயர் குக்கும் முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

இங்கிலாந்தின் உப தலைவரான மட் பிரயர், தொடர்ச்சியாக மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்தியதன் காரணமாக 3ஆவது ஆஷஸ் போட்டியின் பின்னர் இங்கிலாந்திலிருந்து நீக்கப்பட்டதோடு, 4ஆவது போட்டியில் ஜோனி பெயர்ஸ்ரோ இங்கிலாந்தின் விக்கெட் காப்பாளராகச் செயற்பட்டிருந்தார்.

இந்நிலையில், 5ஆவது போட்டிக்கு முன்னதாகக் கருத்துத் தெரிவித்த மைக்கல் கிளார்க், 5ஆவது போட்டிக்காக மட் பிரயர் மீண்டும் இங்கிலாந்து அணிக்கு அழைக்கப்படாவிட்டால் ஆச்சரியப்பட வேண்டியிருக்கும் எனக் குறிப்பிட்டார்.

சிரேஷ்ட வீரரான பிரயரின் அனுபவம், போரிடும் குணம், அவரது பெறுபேறுகள் ஆகியன முக்கியமானவை எனக் குறிப்பிட்ட கிளார்க், இங்கிலாந்து அணியின் முக்கிய வீரராக பிரயர் நீண்ட காலமாகக் காணப்பட்டார் எனக் குறிப்பிட்டார்.

எனினும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த குக், 4ஆவது போட்டியில் வாய்ப்பு வழங்கப்பட்ட ஜோனி பெயர்ஸ்ரோவிற்கு மேலதிக வாய்ப்பொன்று வழங்கப்படவேண்டுமெனவும், ஒரு போட்டியில் வைத்து பெயர்ஸ்ரோவை எடை போடப்படக்கூடாது எனக் குறிப்பிட்டார்.




## முன்னேற்றம்

பிரிஸ்பேன் ஓப்பன் டென்னிஸ் தொடரின் 2ஆவது சுற்றில் சுவிஸின் ரோஜர் பெடரர், பின்லாந்தின் ஜோர்க்கோவை வீழ்த்தி அடுத்து சுற்றுக்கு முன்னேறினார்.

அவுஸ்ரேலியாவின் பிரிஸ்பேனில் நடைபெற்றுவரும் இத்தொடரின் 2ஆவது சுற்றுப் போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன. இதில் பெடரர் 6-4, 6-2 என்ற செட் கணக்கில் ஜோர்க்கோவை வீழ்த்தினார்.

மற்ற ஆட்டங்களில் ஜப்பானின் கீ நிஷிகோரி, அவுஸ்ரேலியாவின் மரின்கோ மடோசெவிச் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

மகளிருக்கான ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்றில் ரஷ்யாவின் மரிய ஷரபோவா, அவுஸ்ரேலியாவின் காஸ டெலாகுவாவை 6-3, 6-1 என்ற நேர் செட்டில் வீழ்த்தினார். தவிர, பெலாரஸின் விக்டோரிய அசரென்கா, ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பர் ஆகியோரும் அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.





இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் சிட்னியில் நடைபெறவுள்ளது. இந்நிலையில் நேற்றைய தினம் இரு அணிகளையும் அவுஸ்ரேலியப் பிரதமர் ரொனி அபோட் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது கப்டன் கிளார்க்கிற்கு கைலாகு கொடுப்பதையும், இங்கிலாந்து அணியுடன் பிரதமர் ரொனி அபோட் நிற்பதையும் காணலாம்.

## திரும்பவில்லை நினைவு

பார்முலா1 கார்பந்தய ஜாம்பவான் ஜேர்மனியின் மைக்கல் ஷுமாக்கர், பிரான்சின் ஆல்ப்ஸ் மலையில் பனிச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டிருந்த போது பாறையில் மோதி தலையில் பலத்த காயமடைந்தார். அவருக்கு அங்குள்ள கிரனோபில் பல்கலைக்கழக மருத்துவனையில் கடந்த மூன்று நாட்களாக தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவரது உடல்நிலை சீராக இருப்பதாக ஷுமாக்கரின் மேலாளர் சபினே கெம் தெரிவித்தார். ஆனாலும் இன்னும் கோமாவில் இருந்து அவருக்கு நினைவு திரும்பவில்லை என்றார்.

## இளைய வீரர்களின் பந்து வீச்சில் திருப்தி

பாகிஸ்தானுக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இளைய வேகப்பந்து வீச்சாளர்கள் பந்துவீசிய முறை தொடர்பாக மகிழ்ச்சியடைவதாக இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் கிரஹம் போர்ட் தெரிவித்துள்ளார். இரண்டாம் நாளில் இளைய வேகப்பந்து வீச்சாளர்கள் பந்துவீசியமை தொடர்பாகத் திருப்தியடைவதாகவும், ஆனால் அவர்களுக்குச் சிறிது அதிர்ஷ்டம்கூட இருந்திருக்கவில்லை. மிஸ்பா உல் ஹக் 76 ஓட்டங்களைப் பெற்ற வேளை, சுரங்க லக்மால் வீசிய பந்து மிஸ்பா உல் ஹக்கின் காலில் பட்ட போது ஆட்டமிழப்பிற்காகக் கோரப்பட்டது. நடுவர் அதை மறுக்க, இலங்கை அணி தீர்ப்பு மறுபரிசீலனைத் திட்டத்திற்குச் சென்றிருக்கவில்லை. ஆனால் மறு ஒளிபரப்புக்களில் அந்தத் தீர்ப்பு தவறானது எனப் புலப்பட்டது. அதனைச் சுட்டிக் காட்டிய கிரஹம் போர்ட், அதற்கு தீர்ப்பு மறுபரிசீலனைத் திட்டத்தைப் பயன்படுத்தியிருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். இரண்டாம் நாளில் மிஸ்பா உல் ஹக், யுனிஸ் கான் இருவரும் 218 ஓட்டங்களை 4ஆவது விக்கெட்டுக்காகப் பகிர்ந்திருந்த நிலையில், அவர்களிருவரும் மிகச்சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியிருந்ததாகக் குறிப்பிட்ட கிரஹம் போர்ட், அவர்களிருவரும் களமிறங்கும் போது இரு அணிகளும் ஓரளவு சமநிலையில் காணப்பட்டதாகவும், ஆனால் அவர்களது இணைப்பாட்டம் இலங்கைக்கு கடுமையான சவாலை வழங்கியதாகக் குறிப்பிட்டார்.



## இலங்கை நிதான ஆட்டம்

(டுபாய்)

இலங்கை அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் பாகிஸ்தான் அணி 383 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக்கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் டுபாயில் நடைபெற்று வருகின்றது. இதில் முதல் இனிங்ஸிற்காக நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த பாகிஸ்தான், ரங்கன ஹேரத்தின் சுழலில் சிக்கி வேகமாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் பாகிஸ்தான் அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 383 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் மிஸ்பா உல் ஹக் 306 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், 16 பவுண்டரிகள் அடங்கலாக 135, யுனிஸ்கான் 136 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரங்கன ஹேரத், எரங்க ஆகியோர் தலா மூன்று, லக்மல் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

179 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் இலங்கை அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் தேநீர் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டவேளை ஒரு விக்கெட்டை இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கே. சில்வா 37, சங்கக்கார 29 ஓட்டங்களைப் பெற்று களத்திலிருந்தனர். குணரட்ன 24 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். இன்று போட்டியின் நான்காம் நாளாகும். இலங்கை முதல் இனிங்ஸ் 204.

# கிண்ணம் முத்துத்தம்பி மத்தி வசம்



(கொக்குவில்)

கொம்மாந்தறை விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை முத்துத்தம்பி மத்திய அணி கைப்பற்றிக்கொண்டது.

கொம்மாந்தறை விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்ட அணிக்கு 8 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் இரவு மின்னொளியில் கொம்மாந்தறை விளையாட்டுக் கழக மைதா னத்தில் இடம்பெற்றது.

8 ஓவர்கள் கொண்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் முத்துத்தம்பி மத்திய அணியும், கொக்குவில் காமாட்சி அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் காமாட்சி அணி நிர்யிக் கப்பட்ட 8 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெயரூபன் 32, சிந்து 37 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கிஷோ, சுரேந்திரன், பிரபவன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 84 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய முத்துத்தம்பி மத்திய அணி 7.3 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் விதுன் 31, கிஷோ 21, லவன் 16, ராஜ், முரளி ஆகியோர். தலா ஆறு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மோகனதீபன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இப்போட்டியின் ஆட்டநாயகனாக முத்துத்தம்பி மத்திய அணி வீரர் விதுன் தெரிவு செய்யப்பட்டார். தொடர் நாயகனாக அதே அணியைச் சேர்ந்த சுரேந்திரன் தெரிவு செய்யப்பட்டார். (48)

## இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டுவரும்பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் இன்றைய தினம் சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து சென். ஜோண்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (எஸ்.பி.)

## தைத் திருநாளை முன்னிட்டு மாபெரும் சவாரிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழர் திருநாளான தைப்பொங்கல் தினத்தை சிறப்பிக்கும் வகையில் வடமாகாண விவசாய அமைச்சினால் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடாத்தப்படவுள்ளது.

நான்கு பிரிவுகளாக நடைபெறவுள்ள மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி மூளாய் பொன்னாலை சவாரித்திடலில் எதிர்வரும் 14ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு நடைபெறவுள்ளது.

காளைகளை எவ்விதத்திலும் துன்புறுத்தலாகாது என்ற நிபந்தனையுடன் நடாத்தப்படவுள்ள இப்போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை 295, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள விவசாய அமைச்சின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்வதோடு, போட்டி தொடர்பான மேலதிக விபரங்களை 077 8449739 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறிந்து கொள்ளலாம்.

இந்தப்போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 10ஆம் திகதியாகும். இம்மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி போட்டியில் வெற்றிபெறும் போட்டியாளர்களுக்கான பரிசுகள் எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ள உழவர் பெரு விழாவின் போது வழங்கப்படவுள்ளது.



வலி. தெற்கு, பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால், யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட இளைஞர் வெற்றிக் கிண்ண தாச்சிப் போட்டியில் தையிட்டி வள்ளுவர் அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது. கடந்த 29ஆம் திகதி சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் சித்தார்த்தன் வள்ளுவர் அணியின் கட்டனுக்கு கிண்ணத்தை வழங்குவதைக் காணலாம். இப்போட்டியில் தாவடி காளியம்பாள் அணியை வீழ்த்தி வள்ளுவர் அணிகிண்ணத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது. (48)

## யாழ். சென்றல் "த்ரில்" வெற்றி

(கொக்குவில்)

நியூஸ்ரார்ஸ் ருவென்ரி-20 போட்டியில் யாழ்.சென்றல் அணி 2 ஓட்டங்களால் த்ரில் வெற்றிபெற்றது.

யாழ்.நியூஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையில் லீக் முறையிலான ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரை நடத்தி வருகின்றது.

கடந்த 29ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியொன்றில் யாழ்.சென்றல் அணியும், தெல்லிப்பளை கிறாஸ் ஹொப்பர்ஸ் அணியும் மோதி ன.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் ஆடிய சென்ரல் அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரஜீவ்குமார் 85, றொசான் 42 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் அஜித் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 151 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கிறாஸ் ஹொப்பர் 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கபிலன் 56, நிலோசன் 34, ரகீம் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரஜீவ்குமார் மூன்று, ஜெசிந்தன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப்போட்டித் தொடரின் ஏனைய ஆட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

விளையாட்டு செய்திகள்

## வென்றது குறிஞ்சிக்குமரன்

(அராலி)

நியூபிறைற் அணிக்கெதிரான போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி அபார வெற்றிபெற்றது.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி ,மாவத்தை விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டமொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் பண்டத்தரிப்பு நியூ பிறைற் அணியும், குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய குறிஞ்சிக்குமரன் அணி 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (93)

## அம்பாறை அல்றைட்ஸை வென்றது மேரிஸ்

(யாழ்ப்பாணம்)

சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி அம்பாறை அல்றைட்ஸ் அணியை 5:1 என்ற கோல் கணக்கில் வென்றது.

அம்பாறை மாவட்டத்தில் சிறந்த அணிகளில் ஒன்றான அல்றைட்ஸ் அணிக்கும், நாவாந்துறை சென்.மேரிஸ் அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை யாழ்.துரையப்பா விளை யாட்டரங்கில் நடைபெற்றது.



போட்டி ஆரம்பித்த சில நிமிடங்களில் கோல் ஒன்றை அடித்த அல்றைட்ஸ் அணி போட்டியினை அசத்தலுடன் ஆரம்பித்தது. இருந்தும் அதற்குப் பதில் கோலடிக்கும் விதத்தில் சென்.மேரிஸ் அணியினர் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டனர்.

முதல் பாதியாட்டத்தில் சென்.மேரிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியாட்டம் முழுமையாக சென்.மேரிஸ் அணியின் பக்கமிருக்க அவ்வணி அடுத்தடுத்து மூன்று கோல்களைப் போட்டது.

அல்றைட்ஸ் அணிக்கு கோல் அடிக்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அவ்வணி அச்சந்தர்ப்பங்களைத் தவறவிட்டது. இறுதியில் சென்.மேரிஸ் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அண்மைக் காலமாக யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகள் வெளிமாவட்ட அணிகளுடன் விளையாடுவதும், யாழ்.மாவட்டத்தில் நடைபெறும் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் வெளிமாவட்ட அணிகள் பங்குபற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

## தைப்பொங்கலை முன்னிட்டு வேலணை ஐயனாரின் விளையாட்டு

(வேலணை)

பொங்கல் திருநாளை முன்னிட்டு வேலணை ஐயனார் விளையாட்டுக்கழக வீர,வீராங்கனைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 12,13,14ஆம் திகதிகளில் நடாத்தப்படவுள்ளது.

இவ்விளையாட்டுப் போட்டிகள் வேலணை ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் கால்பந்து, மென்பந்து கிரிக்கெட், கரப்பந்து, வலைப்பந்து மற்றும் கிராமிய விளையாட்டு நிகழ்வுகள் பலவும் இடம் பெறவுள்ளதாகவும், இதில் கழகத்தில் அங்கம் வகிப்போர் அனைவரும் தவறாது போட்டிகளில் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிக் கொணருமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (21)

# அரசாங்கமும் தமிழ் தரப்பும் சந்தித்தே தான் ஆக வேண்டும்

எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.


இனப் பிரச்சினையை மையமாகக் கொண்டு அரசியலமைப்பு திருத்தத்திற்காக அரசாங்கம் நியமித்துள்ள நாடாளுமன்ற தெரிவுக் குழுவையும் இதில், தெரிவுக் குழுவை நிராகரிப்பதென்ற முடிவு புதியதல்ல. அக்குழு நியமிக்கப்படும் முன்னரே தமிழ் தேசிய கூட்டமைப்பு அதனை நிராகரித்திருந்தது. குடிசன மதிப்பீட்டை நிராகரிப்பதற்கான முடிவு தான் இதில் புதிய முடிவாகும்.

இனப்பிரச்சினை தொடர்பான தெரிவுக் குழுவை நிராகரித்தாலும் பேச்சுவார்த்தைக்கு வருமாறு கடந்த 20ஆம் திகதி ஜனாதிபதி விடுத்த தாம் பேச்சுவார்த்தைகளை நிராகரிக்கவில்லை என்றே இதற்கு பதிலளித்த கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியிருந்தார்.

சம்பிக்க ரணவக்க மற்றும் விமல் வீரவன்ச போன்ற தமது அமைச்சர்கள் எதைக் கூறினாலும் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்சினைகள் இருப்பதை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டிருப்பதனாலேயே அவர் பேச்சுவார்த்தை நடத்த வருமாறு என்று பலவற்றை அவர்கள் முன்வைக்கிறார்கள். இவற்றையும் தீர்த்துக்கொள்ள பேச்சுவார்த்தையைத் தவிர வேறு வழியில்லை.

அரசாங்கமும் தமிழ் தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றே சர்வதேச சமூகமும் அடிக்கடி வலியுறுத்தி வருகிறது. ஆனால் ஜனாதிபதியின் அழைப்பின் நோக்கத்தை எதிர்க்கட்சிகள் சந்தேகிக்கின்றன. எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமை பேரவையின் தான். ஆனால் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள வேறு என்ன வழி இருக்கிறது என்பதே இங்குள்ள கேள்வியாகும்.

பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கான உலகம் ஏற்றுக்கொண்ட நாகரிகமான ஒரே வழி பேச்சுவார்த்தையே. பேச்சுவார்த்தைகளின் போது சம்பந்தப்பட்ட தரப்புக்கள் ஒருவருக்கொருவர் பல நெருக்குவாரங்களை ஏற்படுத்தலாம். இருந்த போதிலும் பிரச்சினைகள் இருப்பதாக ஏற்றுக்கொள்வதாக இருந்தால் அரசாங்கம் தமிழ் தரப்போடு



படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற போரின் போது நிகழ்ந்த உயிர் சேதம் மற்றும் பொருட் சேதம் ஆகியவற்றை கண்டறிவதற்கான குடிசன மதிப்பீட்டையும் நிராகரிப்பதென தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.


அழைப்பை கூட்டமைப்பு நிராகரிக்கவில்லை. வரவு - செலவு திட்டத்தின் மீதான விவாதத்தின் இறுதி நாள் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி, கூட்டமைப்பின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார். ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்றால் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கிறார். தெரிவுக்குழுவை நியமித்ததன் மூலமும் பேச்சுவார்த்தைக்கான அவசியத்தை அரசாங்கம் உலகத்தார் முன்னிலையில் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

தமிழ் தரப்பினரும் பிரச்சினைகளை முன்வைத்த வண்ணமே தான் இருக்கிறார்கள். அதிகாரப் பரவலாக்கல், காணிப் பிரச்சினை, பெண்களின் பாதுகாப்பு, காணாமற் போனோர்களின் பிரச்சினைகள் கூட்டத்தை இலக்காக வைத்தே ஜனாதிபதி, தமிழ் தேசிய கூட்டமைப்பை பேச்சுவார்த்தைக்கு அழைத்து இருக்கிறார் என ஐக்கிய தேசியக் கட்சியின் லக்ஷ்மன் கிரியல்ல கூறியிருந்தார்.

இந்த பேச்சுவார்த்தை விடயத்தில் அரசாங்கத்தின் நோக்கமும் சந்தேகமாக இருக்கிறது தான். அதே வேளை இலங்கையின் சமாதான பேச்சுவார்த்தை வரலாறும் அவ்வளவு திருப்திகரமானதாக இல்லை பேச்சுவார்த்தை நடத்தியே ஆக வேண்டும்.

அல்லது வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் தமிழ் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியே தான் ஆக வேண்டும். அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை மனித உரிமை பேரவையில் காட்சிப் பொருளாக பாவிக்கலாம் என்ற சந்தேகம் இருந்தால் மார்ச் மாதத்தின் பின்னராவது பேச்சுவார்த்தை நடத்துவதைத் தவிர இருசாராருக்கும் வேறு வழியில்லை.

# அமைதியை நோக்கி...



மாமன்னன் போஜராஜனின் அரசவையில் ஒருசமயம் ஒரு கூட்டம் நடந்து கொண்டிருந்தது. அவை நிரம்பி வழிந்தது. அப்படி ஒரு கூட்டம். அங்கு கற்றறிந்த பண்டிதர் ஒருவர் அரசவைக்குள் வர எண்ணினார். ஆனால், காலதாமதமாக வந்தார். வாயிற்காவலர் உள்ளே இடமில்லை என்று அவரைத் தடுத்தனர். "நீ போய் அரசரிடம் அவரைக் கண்டு முக்கியமாக ஒன்றைப் பேச நான் வந்திருப்பதாய்ச் சொல்!" என்று கண்டிப்பாய்ச் சொல்கிறார் அவர். அவரின் எடுப்பான, களையான தோற்றத்தைக் கண்டு வாயிற்காவலன் அரசரிடம் சென்று "நாங்கள் என்ன தடுத்தும் உங்களுடன் பேச வேண்டும் என்று பிடிவாதமாக ஒரு பண்டிதர் வெளியில் நிற்கிறார்" என்றான். அரசன் அந்த வாயிற்காவலனுடன் எதுவும் பேசவில்லை. ஒரு சேவகனை அழைத்து "ஒரு கோப்பை நிறைய பாலை எடுத்துக்கொண்டு போய் அந்தப் பண்டிதரிடம் கொடு!" என்றான். அந்த சேவகனும் அவ்வாறே சென்று அந்தப் பண்டிதரிடம் பால் நிரம்பிய கோப்பையைக் கொடுத்தான்.

பால் கோப்பையைப் பார்த்த பண்டிதர் உடனே தன் தோளில் மாட்டியிருந்த ஜோல்னாப் பையைத் திறந்து அதனுள் இருந்த ஒரு பொட்டலத்தை எடுத்துப் பிரித்து அதிலிருந்த சர்க்கரையைப் பாலில் இட்டு அந்தக் கோப்பையை மீண்டும் மன்னரிடமே எடுத்துச் செல்லப் பணித்தார்.

பால் கோப்பை திரும்பி வந்ததைப் பார்த்த போஜராஜன் என்ன ஆயிற்று என்று வினவினான். "அரசே.. அந்தப் பண்டிதர் எதுவும் பேசவில்லை. நீவிர் அனுப்பிய பால் கோப்பையைப் பார்த்ததும் தன் பையிலிருந்த ஒரு பொட்டலத்திலிருந்து சர்க்கரையை எடுத்து ஜாக்கிரதையாய்ப் பாலில் கலந்துவிட்டு உங்களிடம் கோப்பையைத் தரச் சொன்னார்!" என்றான் காவலாளி.

உடனே போஜராஜன் "ஆஹா... என்னுடைய சபையில் இப்படிப்பட்டவர்தான் இருக்க வேண்டும். உடனே அவரை உள்ளே அழைத்து வாருங்கள்!" என்று கட்டளையிட்டான்! அவையில் இருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அரசன் பால் கோப்பையை வெளியே அனுப்ப அவர் சர்க்கரையைப் போட்டுத் திரும்ப உள்ளே அனுப்ப அரசர் அவரை உள்ளே அழைத்து வரச் சொன்னதைக் கேட்ட அவர்கள் அதன் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ள விரும்பி துணிந்து அரசனிடமே கேட்டனர்.

அதற்கு போஜராஜன், "அவையில் கூட்டம் முழுமையாக இருக்கிறது. உள்ளே இடமில்லை என்பதைத் தெரிவிக்கக் கோப்பை நிறையப் பாலை நிரப்பி அனுப்பினேன். ஆனால், அவரோ எவ்வளவு கூட்டம் இருந்தாலும் சர்க்கரை பாலில் கரைவதுபோல கூட்டத்தில் என்னைக் கரைத்துக் கொள்வேன். சர்க்கரையைப்போல என் தனித்துவத்தை எடுத்துவிட்டுச் சுற்றுப்புறத்தை இனிமையாக்குவேன். எந்த விஷயத்திலும் உட்புக மாட்டேன். பெயருக்கும் புகழுக்கும் ஆசைப்பட மாட்டேன். அப்படி நான் கரைந்து அந்தச் சூழலை இனிமையாக்கும்போது நான் உள்ளே தாராளமாகச் செல்லலாமே என்று தெரிவித்தார் அந்தப் பண்டிதர" என்று விளக்கினான்!

('அமைதியை நோக்கி' என்ற நூலில் இருந்து.)

# யோசனைகள்... யோசனைகள்...



★ மின்சாரத் தீ விபத்தின்போது ஏற்படும் தீயை ஒருபோதும் தண்ணீர் ஊற்றி அணைக்கக்கூடாது. தண்ணீர் ஊற்றினால் மின் அதிர்ச்சியும் தீக்காயங்களும் ஏற்படும். மின் கசிவினால் ஏற்படும் தீயை அணைக்க காபனீரொட்சைட், காபன் டெட்ரா குளோரைட் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன.

★ கையில் மண்ணெண்ணெய் போன்ற வாசனையைப் போக்க வேண்டுமானால் தயிரினால் கையைத் தேய்த்துவிட்டுப் பிறகு கழுவினால் வாசனை போய்விடும்.

★ மெழுகுவர்த்தியை உபயோகிப்பதற்கு முன் அதைச் சிலமணி நேரம் குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருந்தால் வெகு நேரம் எரியும்.

★ வெங்காயப் பூவை சமையலறையில் வைத்திருந்தால் பல்லிகள் நடமாடாது.

★ சப்பாத்தி மிருதுவாக இருக்க மா பிசையும்போது வாழைப்பழத்தைச் சேர்த்துப் பிசையவும். சுவையாகவும் இருக்கும்.

★ அரிசி, பருப்பு, நூடில்ஸ், ரசம் போன்றவை அடுப்பிலிருக்கும்போது பொங்கி வழிகிறதா? அவை இருக்கும் பாத்திரங்களின் மேல் விளிம்பில் சற்று உள்புறமாக எண்ணெய் அல்லது வெண்ணெய் தடவி தீயைக் குறைத்து வைத்துச் சமைத்தால் பொங்காமல் இருக்கும். மைக்ரோவேவ் அடுப்பு மூலமாகச் சமைக்கும்போதும் இதுபோன்ற எண்ணெய் அல்லது வெண்ணெய் தடவி சமைக்கலாம்.

★ சாப்பிட முடியாத அளவுக்கு வாழைப்பழங்கள் கொழகொழவென்று கனிந்திருக்கிறதா? தோலை உரித்து பழத்தை கோதுமை மாவுடன் சேர்த்துப் பிசைந்து இனிப்பு சப்பாத்திகளோ, இனிப்பு பூரிகளோ தயாரித்து விடலாம். அல்லது பாலுடன் மிக்ஸியில் அடித்து "மில்க்ஷேக்" தயாரிக்கலாம்.

★ பாண் துண்டுகளுக்கு இடையில் காய்கறிக் கலவையை வைத்து சாண்ட்விச் தயாரிக்கும்போது கத்தியால் நேர்த்தியாக துண்டு போட கஷ்டமாக இருக்கும். சிலசமயம் காய்கறிகளில் இருந்து பாண்துண்டு வழுக்கிக் கொள்ளும். இதைத் தவிர்க்க பாணை நான்கு அல்லது இரண்டு துண்டுகளாக வெட்டுவதற்கு முன் கத்தியை வெந்நீரில் அமிழ்த்தி எடுத்து வெட்டினால் எளிதாகத் துண்டு போடலாம்.


# சினிமா சினிமா

✦ ஜெய், நஸ்ரியா நடிப்பில் "திருமணம் எனும் நிக்காஹ்" என்ற படத்தை இயக்குகிறார் புதுமுக இயக்குநர் அனீஸ். கல்யாணம் என்பது ஒரு கசப்பான விஷயம் என இப்போதைய இளைஞர்கள் நினைக்கிறார்கள். ஆனால், அது மிகவும் சுவாரஸ்யமான பயணம் என புரிய வைக்கிற மாதிரி இருக்கும் என் படம் என்கிறார் அனீஸ்.

✦ விதார்த், ஐஸ்வர்யா தத், தம்பிராமையா நடிப்பில் "அருத்தாபத்தி" என்ற படத்தை இயக்குகிறார் புதுமுக இயக்குநர் சஜின்வர்கீஸ். "சைவ சித்தாந்த நூல்களில் அருத்தாபத்தி என்ற சொல் பிரபலமானது. சொல்லப்படுகின்ற சொல்லிலிருந்து சொல்லாத ஒரு பொருளை நாம் அறிந்து கொள்வது என அந்த வார்த்தைக்குப் பொருள். பாரதியின் சுயசரிதை "உலகெல்லாம் ஒரு பெருங் கனவு..." என்று தொடங்கும். அந்த வரிகளை ஒரு முழுமையான திரைக்கதையாக்கி இருக்கிறோம் என்கிறார் சஜின்வர்கீஸ்.

✦ நீண்ட இடைவெளிக்குப் பின் "ஒரு தலைராகம்" சங்கர் இயக்குநராக தமிழ் சினிமாவில் நுழைகிறார். ஒரு சில படங்களில் நடித்ததோடு தன் சொந்தத் தொழிலை கவனித்து வந்தார் சங்கர். இப்போது தமிழில் அவர் இயக்கும் படத்துக்கு "மணல் நகரம்" என பெயரிடப்பட்டுள்ளது. புலம் பெயர்ந்த தமிழர்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் இப்படத்தில் பிரஜின், கௌதம் கிருஷ்ணா, தேஜஸ்வினி நடிக்கின்றனர். சிறப்பு அனுமதி பெற்று சுமார் 50 நாட்கள் டுபாயில் படப்பிடிப்பு நடத்தியுள்ளேன். தமிழில் வாய்ப்புகள் கிடைத்தால் நடிக்கவும் தயாராக இருக்கிறேன் என்கிறார் சங்கர்.

✦ "ஏணிப்படிகள்", "சலங்கை ஒலி" உள்ளிட்ட படங்களில் குணச்சித்திர வேடங்களில் நடித்திருப்பவர் மோகன்சர்மா. 2012-ஆம் ஆண்டு மலையாளத்தில் இவர் இயக்கிய படம் "நம்ம கிராமம்". பால்ய விவாகக் கொடுமையையும் விதவைகளின் மறுமணத்தையும் வலியுறுத்தும் படம். இப்படத்துக்காக நடிகை சுகுமாரிக்கு 2012ஆம் ஆண்டுக்கான சிறந்த துணை நடிகை விருது வழங்கப்பட்டது. கடந்த மார்ச் மாதம் சுகுமாரி உடல் நலக்குறைவால் காலமானார். இம்மாதம் தான் இப்படம் வெளியாக இருக்கிறது.
















✦ "ராமன் அப்துல்லா", "சூரி", "ஆச்சார்யா" என மாறுபட்ட படங்களில் தன்னை வருத்திக் கொண்டு நடித்தும் நடிகர் விக்னேஷுக்கு முன்னணி இடம் கிடைக்கவில்லை. தொடர் போராட்டங்கள்.... விடா முயற்சிகளின் வரிசையில் விக்னேஷின் அடுத்த படம் "புவனகாடு". "நான் தவற விட்ட சந்தர்ப்பம், வெற்றி, தோல்வி இதுவெல்லாம் பற்றி இப்போது பேசிக் கொண்டிருக்க முடியாது. சினிமாவுக்காக இழந்தது நிறைய. இப்போது கூட வேறு தொழிலில் வருமானம் ஈட்டி அதனை வைத்துத்தான் சினிமாவுக்குள் இயங்கிக் கொண்டிருக்கிறேன். இதில் குடும்ப உறுப்பினர்களின் வருத்தங்கள் நிறைய இருக்கிறது. இருந்தாலும் என் ஆர்வம், வேகம் அவர்களுக்கு என் நிலையைப் புரிய வைத்து விடுகிறது. இந்தப் படத்துக்கும் என் அயராத முயற்சிகளைத் தந்து உழைக்கிறேன்" என்கிறார் விக்னேஷ்.


✦ "நான் ரஜினியின் ரசிகை என்று சொல்வதை விட அஜித்தின் தீவிர ரசிகை என்று சொல்ல விரும்புகிறேன்" இது சமீபத்தில் இணைய தளத்தில் வெளியான டாப்ஸியின் பேட்டி. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ரஜினியின் ரசிகர்கள் பொங்கியெழுந்தனர். அதையடுத்து டாப்ஸி தன் டிவிட்டர் பக்கத்தில், "தலைவரைப் (ரஜினி) பிடிக்காது என்று நான் கூறவில்லை. நான் சொன்னதைத் தவறாகப் புரிந்து கொண்டு எழுதி இருக்கிறார்கள். நான் இரண்டு பேருக்குமே தீவிர ரசிகை என்றுதான் சொன்னேன்"" என ஜகா வாங்கியிருக்கிறார்.

✦ திரையுலகில் 25 வருடங்களை நிறைவு செய்கிறார் கே.எஸ்.ரவிக்குமார். "புரியாத புதிர்" படத்தின் மூலம் கவனம் ஈர்த்த இயக்குநராக அறிமுகம்... "சேரன் பாண்டியன்", "நாட்டாமை", "முத்து", "அவ்வை சண்முகி", "நட்புக்காக", "படையப்பா", "தெனாலி", "பஞ்ச தந்திரம்", "மின்சார கண்ணா", "வில்லன்", "வரலாறு", "தசாவதாரம்", "ஆதவன்", "மன்மதன் அம்பு" என வெற்றிப் படங்களின் பட்டியல் சிவாஜிகணேசன், ரஜினிகாந்த், கமல்ஹாசன், ரகுவரன், அஜித், விஜய், சூர்யா, சிம்பு என தலைமுறைகள் தாண்டிய கலைஞர்களை இயக்கிய அனுபவம்... தற்போது "கோச்சடையான்" படத்தில் திரைக்கதை மேற்பார்வையாளராகப் பணியாற்றி வரும் இவருக்கு "என்றென்றும் ரவிக்குமார்" என்ற பெயரில் ராஜ் டி.வி. 2014, ஜனவரி 4ஆம் திகதி சென்னை, நேரு விளையாட்டு அரங்கில் பாராட்டு விழா நடத்துகிறது.

# தமிழக மீனவர்களே! எமது கடல் வளத்தினை சூறையாடாதீர்கள்!

துறையூர் காசி கட்டுரையிலிருந்து.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து எமது கடல் வளங்களை கொள்ளையடிக்கும் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் இந்திய மீனவர்களது வன்முறைத்தனமான போக்கு இலங்கை வாழ் மீனவர்களது நாளாந்த வாழ்வுரிமையினை தட்டிப்பறிக்கின்ற போக்கிரித்தன






மான செயலாகும். இந்த அப்பட்டமான கடற் கொள்ளையினை கண்டித்து குரல் எழுப்புவதற்கு எமது தேசத்தில் போதுமான ஆளணி இல்லாதிருப்பது துரதிஷ்டசமானதே.

போருக்கு முன்னான காலப் பகுதியில் எமது தேசத்தின் கடற்பொருள் உற்பத்தியானது தேசிய வருமானத்தில் காத்திரமான பங்களிப்பை கொண்டிருந்தது. 2009ஆம் ஆண்டுக்கு முந்திய 30 வருட காலத்தில் கடற்றொழில் துறை கடுமையான சிதைவுக்குள்ளான போதிலும் தமது முந்திய நிலைமைகளை மீண்டும் வென்றெடுக்க பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டிருக்கும் எமது தொழிலாளர்களின் இலக்குகள் தமிழக மீனவர்களால் சிதறடிக்கப்படும் நிலைமைகளும் இதன் விளைவாக எமது கடற்றொழிலாளர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் எண்ணற்ற அவலங்களும் சமகாலத்தில் அவசர அவசரமாக பேசப்பட வேண்டியதாகவும் தீர்வு காணப்பட வேண்டிய விடயமாகவும் இருந்து கொண்டிருக்கின்றது.

ஏற்கனவே போதிய கவனிப்பின்றி போதிய சிரத்தையின்றி இது விடயம் ஆண்டுக்கணக்கில இழுத்தடிப்பு செய்யப்பட்டிருக்கின்றது. வட புலத்து அரசியல் வாதிகள் தரப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ச்சியான அக்கறையுடன் இது விடயத்தில் ஈடுபட்டார் என்பதும் தமிழக மீனவர்களுடன் இணக்கப்பாடு ஒன்றிற்காக முயற்சிகளை மேற்கொண்டிருந்தார் என்பதும் பரவலாக அறியப்பட்ட விடயமாகும் ஆயினும் அவரது மான சீகமான தீர்வொன்றினைத் தேடும் முயற்சிகள் யாவும் தமிழக தரப்பினரால் உதாசீனம் செய்யப்பட்டது.


கூடவே வடபுலத்து அரசியல் தலைமைகள் இங்கு இருந்திருக்கக்கூடிய சிவில் அமைப்பின் கனவான்கள் எவருமே குறித்த இந்திய மீனவர்களது அத்து மீறலையோ அவர்களால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் எமது கடல் வள அபகரிப்பையோ எதிர்த்து கண்டனக்குரல் எழுப்பவில்லை. வடபுல மீனவர்களது வாழ்வாதாரம் சூறையாடப்படுவதை இவர்கள் கண்டுகொள்ளாமல் இருந்தமைக்கான காரணம் என்ன?

வட மாகாணத்தில் பிரபல்யமான பல தமிழ் ஊடகங்கள் குறித்த இந்திய மீனவர்களது அத்துமீறிய செயற்பாடுகளையோ அதன் விளைவான எமது கடற்றொழிலாளர்கள் எதிர் கொள்ளும் அவலங்களையோ முதன்மைப்படுத்தாமல் மௌனம் சாதித்தே வந்திருக்கின்றன. இதற்கான காரணங்கள் என்ன? இது போன்ற விடை கிடைக்கப்படாத வினாக்கள் எமது கடற்றொழிலாள மக்களது மனங்களில் பதிவாகியுள்ளது.

எமது தொழிலாளர்கள் நாளாந்தம் உழைத்து - உண்டு - மகிழ வாரி வழங்கிக் கொண்டிருந்த கடல் இன்று அந்நியரின் அபகரிப்பால் வெறுமையாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது - இந்த உச்சக்கட்ட அநியாயத்தை - எமது கடல்பிராந்தியத்தின் மீதான ஆக்கிரமிப்பினை தடுத்து நிறுத்துவதற்கான முன்னெடுப்பில் அனைத்து கடற்றொழிலாளர்களும் அவர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் அரசியல் வேறுபாடுகளுக்கப்பால் அணிதிரளவேண்டிய அவசியத்தினை காலம் நிர்ப்பந்தித்து நிற்கின்றது - கூடவே முற்போக்குச் சக்திகள் மற்றும் நியாயத்துக்காக குரல் கொடுக்கும் ஊடகங்கள் இவர்களது நியாயத்துடன் கூடியதான முன்னெடுப்புகளுக்கு ஆக்க பூர்வமான ஆதரவு தர முன்வரவேண்டும்.


கடற்றொழில் அமைச்சர் இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வருவதை அனுமதிப்பதில்லை என்ற தீர்மானத்தில் உறுதியாக இருக்கிறார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. அவ்வாறாயின் அவருடைய தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் அமைச்சருக்கும் கடல் காவல் படையினருக்கும் பூரண ஒத்துழைப்பினை வழங்குவதற்கு எமது கடற்றொழிலாளர்கள் விருப்புடன் முன்வரவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக குறித்த விடயத்தில் இன மத அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் வட கிழக்கு உட்பட நாட்டின் ஒட்டு மொத்த மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் நாட்டின் கடல் வளம் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தினையும் முன்நிறுத்தியதாக நமது சிந்தனைகளும் செயற்பாடுகளும் அமையவேண்டும். அதன் வழியேதான் நமது முயற்சிகள் வெற்றியடைவது சாத்தியமாகும். எமது கடல் வளம் எமக்கானதே.

# அரியாலையூரின் அதியுயர்பெருமைகள்




வடதிசையில் ஈழத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருக்கும் உப்பு விளைகின்ற நிலமும், கிழக்கே பருவப் பெருமழையை நம்பி நெல் விளைவிக்கும் களனித் தரைகளும் ஆங்காங்கே வானத்தை எட்டிப்பிடித்துவிடுவோம் என வளர்ந்து நிற்கும் கற்பக தருக்களும் சோலையாகக் காட்சி தரும் தென்னை மரங்களும், உயர்ந்து சிறு சிறு பட்டிகளாகக் காட்சி தரும் வெண் மணல் திடர்களும் நிறைந்து இருக்க அருகே யாழ்ப்பாணக் குடாக்கடலை நோக்கித் தவழ்ந்து செல்லும் கடலேரியும் அமைந்திருக்க, மேலும் தென் திசையில் பாண்டியன் தாழ்வு – கொழும்புத்துறையை சென்றடையும் வீதியும், மேற்கே கச்சேரி – நல்லூர் வீதியும், வடக்கே செம்மணி வீதியையும் எல்லைகளாகக் கொண்டு அழகு மிளிரக் காட்சி தரும் கிராமமே அரியாலை யூராகும்.

### சைவமும் தமிழும் கொஞ்சி விளையாடும் கிராமம்



யாழ்ப்பாண மாநகர சபையின் கிழக்கு எல்லையாகத் திகழும் இக்கிராமம் யாழ்ப்பாண மாநகர சபையின் பெரும் பாகத்தினையும், கிழக்கே நல்லூர்ப் பிரதேச சபையின் ஒரு பகுதியையும் உள்ளடக்கிய தற்போதைய உள்ளூராட்சி அமைப்பின் பிரதேசமாகும் . ஏறக்குறைய பத்துச் சதுர கிலோமீற்றர் பரப்பளவாகும், இருபதினாயிரம் தமிழ் மக்கள் வாழும் பெரு நிலப்பரப்பாகும் . இவ்வழகிய அமைப்பினைக்கொண்ட கிராமத்தின் பெயர் அரியாலை ஆகும். சைவமும் தமிழும் கொஞ்சி விளையாடும் இக்கிராமத்தின் சைவப் பேராலயங்களும் சில கிறித்தவ தேவாலயங்களும் பிரசித்தி பெற்ற அரசாங்கப் பாடசாலைகளும் சமூகத்தின் பெருமை யினை எடுத்தியம்பும் சனசமூக நிலையங்களும் நிறையக் காணப்படுகின்றன .

### அந்தக் கவிஞரால் திருந்திய அரசன்

யாழ்ப்பாணத் தமிழ் இராச்சியத்தின் இராசதானியாக அக்காலத்தில் நல்லூர் விளங்கியதாகச் சரித்திர ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள் . ஒன்பதாம் நுற்றாண்டின் காலப்பகுதியில் உக்கிரசிங்கன் என்னும் மன்னனின் மகன் வாலசிங்கம் என்பான் யாழ்ப்பாண இராச்சியத்தைப் பரிபாலித்தான் என – வைபவமாலையில் குறிப்பிடப்பட்டுள்ளது . இந்த வாலசிங்கன் ஆட்சி புரிந்த காலத்திலே பாரதநாட்டில் சோழ சாம்ராச் சியத்திலிருந்து இரண்டு கண்களும் குருடான 'பாணன்' என்னும் பெயருடையான் ஒருவன் மரக்கலமேறி, தான் இயற்றிய பாடல்களை யாழ் இசைத்துப் பாடிப் பரிசில்கள் பெறலாம் என்ற நோககத்துடன் புறப்பட்டு வந்தான் . வருகை தந்த அந்தப் பாணனால் வாலசிங்க மன்னனைச் சந்திக்கமுடியவில்லை . அந்தக் காலத்தில் மன்னர்கள் பிறவிக் குருடர்களைக் காண விரும்புவதில்லை. அதனால் பிறவிக் குருடனான பாணன் வாலசிங்க மன்னனைச் சந்திக்க விரும்பிய பொழுதும் மந்திரிகள் மன்னனைக் காண அனுமதிக்கவில்லை . ஆனால் பாணனோ ' இவ்வளவு தூரம் கடந்து மன்னனைச் சந்திக்க வேண்டும் என வந்த நான் சந்திக்கமால் இவ்விடம் விட்டு அகலப் போவதில்லை' என பிடிவாதம் செய்தான் .

நிலைமையை மந்திரிகள் மன்னனுக்கு எடுத்துக் கூறினார் பாணனின் இசைப்பாடலைக் கேட்பதற்கு ஆயத்தமான மன்னன் ஒரு ஒழுங்கினை மேற்கொள்ளுமாறு மந்திரிகளைப் பணித்தான் . மன்னன் வாலசிங்கனின் ஏற்பாட்டின்படி , தான் அமர்ந்திருக்கும் அரியாசனத்திற்கும் சபாமண்டபத்திலிருந்து யாழ் இசைத்துப் பாடும்படி மந்திரிகள் கூறினர் . பாணன் சபா மண்டபத்திலமர்ந்து தன் இசைப்பாடலைப்பாட ஆரம்பித்தான் . பிறவிக் குருடனான அவன் தன்னை மன்னன் பார்க்காதவாறு திரை மறையில் இருக்கிறான் என்பதைத்தன் அகக்கண்களால் உணர்ந்து மன்னனை நோக்கிப் பின்வருமாறு பாடலானான் .

**நரைகோட்டினங்கன்று நல்வள நாடுநயத் தளிப்பான்**

**விரையூட்டும் நார்புய வெற்பீழ வீமமன் ன்னநென்றே விரும்பிச் கரையோ ட்டமாக மரக் கலம் போட்டுன்னைக் காணவந்தால்**

**திரை ட்டிருந்தளையே வாலசிங்க சிகா மணியே!**


எனப் பாடலில் கேட்டான் . மன்னன் வாலசிங்கன் தான் செய்த செயலுக்காக வருந்தினான் . உடனே தன் முன் மறைவிற்காக இடப்பட்ட திரையினை விலக்கும்படி உத்தரவிட்டான் . திரை விலக்கப்பட்டதும் - பாவலரே ! நின் பாடலில் என் பிழையைச் சுட்டிக்காட்டிப் பாடினீர். கண்கள் இரண்டும் குருடான போதும் இறைவன் உமக்கு அளித்த அகக்கண்களால் என் பெருந்தவறினை உணர்த்தியுள்ளீர் . நின்புலமையையும், யாழ். இசையின் வல்லமையையும் நான் பெரிதும் மதிக்கிறேன். உமக்கு என்ன வேண்டுமோ அதனைக் கேளும் , நான் கொடுக்கிறேன் – என்றான் . அதற்குப் பாணன் , 'பேரன்புக்குரிய பெருவேந்தே என்ன வேண்டும் என்பதை நான் உங்களிடம் கேட்டுப் பெறுவதிலும் , நீங்கள் எப்பரிசாயினும் விரும்பித் தருவதே கொடையின் தர்மமாகும்' எனச் சமயோசிதமாகப் பதிலளித்தான் . மன்னன் பாணனின் பதிலில் மன மகிழ்ந்து பல பெறுமதியான பரிசில்களை வாரி வழங்கினான் மேலும் தென் கிழக்கே பரந்து விரிந்த பெரு நிலப்பரப்பாக இருக்கும் வெண் மணல் திடரையும் தன் அன்பளிப்பாக வழங்கினான்

### பாணனுக்குக் கிடைத்த பரிசு நிலம் எது ?

மன்னன் வாலசிங்கனின் பெருந்தன்மையை மதித்து அவனை வணங்கிய பாணன் அவனின் அனுமதியோடு சோழ நாட்டிலிருந்து தனது மனைவி,மக்களையும், உறவினர்களையும் அழைத்து வந்து அப்பெரு நிலப்பரப்பில் வாழ்ந்து வரலானான் . அந்த யாழ்ப்பாணனுக்கு பரிசாக வழங்கிய வாலசிங்க மன்னனால் வழங்கப்பட்ட வெண்மணல் நிறைந்த பெருநிலப்பரப்பே – அரியாலை – என அழைக்கப்படும் பகுதியாகும் . நல்லூரையும் , அரியாலையையும் பிரிக்கும் மேற்கு எல்லையில் (கச்சேரி – நல்லூர் வீதிக்கு அணமையில்) பாணனால் அமைக்கப்பட்ட குளம் ஒன்று தூர்ந்த நிலையில் இன்றும் காணப்படுகிறது . இக்குளம் 'பாணன் குளம் என்றே அழைக்கப்பட்டு வருகின்றது .

இசையில் வல்ல பாணன் என்னும் யாழ்பாடி வாழ்ந்த மண் ஆனபடியினாலன்றோ இம்மண்ணில் வாழ்பவர்கள் இயல் , இசை , நாடகத்துறைகளிலும், பல்வேறு துறைகளிலும் முன்னணியில் திழ்பவர்களாக இன்றுவரை இருந்து வருகிறார்கள் . பாணனுக்கு வழங்கப்பட்ட நிலம் தென்கிழக்கு மூலையாக இருப்பதனால் யாழ்ப்பாண நிலமும் இதற்குள் அடங்குகிறது . பாணனுக்கு வழங்கப்பட்ட நிலம் 'வெண்மண்ற்றிடர்' என்று குறிப்பிடப்படுகின்றது . நல்லூர் இராசதானியின் தென்பகுதி யாழ்ப்பாணமும் கிழக்குப் பகுதி அரியாலையும் இருப்பதனால் பாணனுக்கு வழங்கப்பட்ட நிலம் தென்கிழக்கு மூலை ஆதலினால் பாணனின் பெயரோடு அவன் வாசித்த யாழையும் இணைத்து இந்நிலப்பரப்பு முழுவதையும் 'யாழ்ப்பாணம்' என அழைத்திருக்க நியாயமுண்டு தற்போதைய நிருவாக அமைப்புகளால் பிரிக்கப்பட்டாலும் அரியாலைக் கிராமமே வெண்மண்ற்றிடரான பகுதியாக இன்றும் காணப்படுவதாலும் , பாணன் வாழ்ந்த இடம் எனக்கருதப்படும் 'பாணன் குளம்' பகுதி அரியாலை எல்லையிலேயே இருப்பதனாலும் அரியாலைக் கிராமம் அமைந்த பகுதியே பாணனுக்குக் கிடைத்த அன்பளிப்பான நிலப்பகுதி என்பது நிரூபணமாகின்றது

### கூட்டுறவுத் துறையில் கூடுதல் வளர்ச்சி



இக்கிராமத்தில் கூட்டுறவு வளர்ச்சி கண்டது இன்றைக்கு நாற்பது வருடங்களுக்கு முற்பட்டதாகும் . தனியான சங்கங்கள் தனி மனிதப் பங்குப் பணத்தினைக் கொண்டு இயங்கிய காலத்தில் அரியாலையில் பல சங்கங்கள் இயங்கின . இவை சொந்தமாக நிலங்களை வாங்கி பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் சென்றதன் மூலம் கூட்டுறவுத் துறையில் பெரும் வளர்ச்சியை அரியாலைக் கிராமம் கண்டது .

### கல்வித்துறைக்கு வித்திட்டவர்கள்

காலஞ்சென்ற விசுவநாதர் காசிப்பிள்ளை என்பவர் அக்கால அப்புக்காத்தாகக் கடமை புரிந்தவர் . யாழ்ப்பாண மாவட்டத்தில் பசுபதிச் செட்டியார் அப்புக்காத்து நாகலிங்கம் ஆகியோருடன் இணைந்து பல கல்லூரிகளை உருவாக்கி அதன் முகாமையாளராகவும் இருந்து திறம்படச் செயலாற்றியவர் . இவரை 'பெரிய காசிப்பிள்ளை' என்றே அரியாலை மக்கள் அழைத்து வந்தனர் . இந்த அரியாலையில் 'சிறீ பார்வதி வித்தியாசாலை' யைத் தமது ஊர்மக்களின் கல்வி வசதிக்காகத் தோற்றுவித்தார். இவர் பரம்பரையில் வந்த காலஞ்சென்ற கனகரத்தினம் அவர்கள், ஆங்கிலக் கல்வி மோகம் மலையாக வளர்ந்திருக்க அந்தக் காலத்தில் கிறிஸ்தவ திருச்சபைகள் நிர்வகித்த கல்லூரிகளுக்கு ஒப்பாக எமது கிராமத்தில் தகுதி வாய்ந்த ஆங்கிலக் கல்லூரியை உருவாக்கினார் . தனது சொந்தக்காணியை இதற்காக அன்பளிப்புச் செய்தார் . இவரால் உருவாக்கப்பட்ட கல்லூரியே 'ஸ்ரான்லி வித்தியாலயம்' என்றும், பின்னர் கனகரத்தினம் மகா வித்தியாலயம் என்றும் பெயர் மாற்றப்பட்டு இயங்கிவந்த அரசாங்கக் கல்லூரியாகும் .

### மூன்று மேயர்களை உருவாக்கிய ஊர்

அரசியலில் பல தலைவர்கள் முன்னின்று செயற்பட்ட போதும், குறிப்பாகச் சிலரை இங்கு குறிப்பிடலாம். காலஞ்சென்ற 'க. சிற்றம்பலம்' என்பவர் டி .எஸ் . சேனநாயக்க காலத்தில் அமைந்த மந்திரி சபையில் தபால் மந்திரியாக இருந்தவர். இப்பதவியை வகித்த காலத்தில் அரியாலையில் இருந்த பலரைப் தபால் திணைக்களத்தில் சேர்த்தார் . காலம் சென்றவர்களான பி . காசிப்பிள்ளை (இவரை சின்னக் காசிப்பிள்ளை என்றும் அழைப்பர் ) சு .செ . மகாதேவா, க .பொன்னம்பலம் இவர்கள் மூவரும் யாழ்ப்பாண மாநகர சபையில் முதல்வர்களாகப் பதவி வகித்தவர்கள் . யாழ்ப்பாண மாநகர சபை வரலாற்றிலேயே மூன்று நகரப் பிதாக்களை வழங்கிய கிராமம் அரியாலை ஆகும் .

காலஞ்சென்ற அ . விசுவநாதன் இவர் ஒரு சமதர்மவாதி . பல தரப்பட்ட சமூகத்தவர்களும் ஒன்றிணைந்து பேதமின்றி வாழ வேண்டும் என்பதற்காக பலமுறை நாடாளுமன்றத் தேர்தலில் சமசமாஜ் கட்சி வேட்பாளராக நின்றவர் . தோல்வி கண்டவர் இவர் நினைத்திருந்தால் செல்வாக்கு மிக்க கட்சிகளுடன் இணைந்து வெற்றி பெற்றிருக்க முடியும். கொள்கைப்பற்று மிக்க இவர் நாடாளுமன்ற அங்கத்தவராக வராத போதிலும் யாழ்ப்பாண மாநகர சபையில் அங்கத்தவராக இருந்து மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர் .

### அரியாலைக்குப் புகழ் தேடித்தந்த அறிஞர்கள்

யாழ்ப்பாணப் பகலைக்கழகத்தில் முதலாவது விஞ்ஞானப் பீடாதிபதி ரி. கந்தையா தற்பொழுது விவசாய பீடாதிபதியாக இருந்த கலாநிதி எஸ். மோகன்தாஸ் ( இவர் தென்னை வளம பற்றி ஆராய்ந்து கலாநிதிப் பட்டம் பெற்றவர்), மனோதத்துவ நிபுணராக இருந்த ஆ . சிற்றம்பலம், சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி கணேசரத்தினம், இலங்கை , நிருவாக சேவையில் பணிபுரிந்த, ரி . சோமசுந்தரம் , ரி. இரத்தினசுந்தரம், வே. ரகுநாதன். அ .ஜெயரத்தினம் வவுனியா யாழ்ப்பாண அரசாங்க அதிபராக பணிபுரிந்த செ.பத்மநாதன் ஆகிய இவர்கள் அரியாலைக் கிராமத்திற்கு புகழ்தேடித் தந்தவர்களாவர். இவர்கள் தவிர்ந்த மாவட்ட அடிப்படையில் பணிபுரிந்தவர்கள் ஏராளம் உண்டு.

### புத்தகங்களால் புகழ் சேர்ந்தவர்கள்

காலஞ்சென்ற சோமசுந்தரம் அவர்கள் யாழ். கனகரத்தினம் (ஸ்ரான்லி ) மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் . இவர் இலங்கை கல்வித் திணைக்கள அங்கீகாரம் பெற்று கணிதம், அட்சர கணிதம், கேத்திர கணிதம் ஆகிய நூல்களை வெளியிட்டார் . காலஞ்சென்ற சி . பொன்னம்பலம் பூமிசாத்திரம்



என்னும் புத்தகத்தினை கல்வித்திணைக்களத்தின் அனுமதியுடன் சகல வகுப்புகளுக்குமான முறையில் தனித்தனியே வெளியிட்டார் .

அரசியல்வாதியும், ஆசிரியரும், சட்டத்தரணியுமான காலஞ்சென்ற அ.விசுவநாதன் அவர்கள் 'குடியியல்' என்னும் புத்தகத்தினை சகல தர வகுப்புகளுக்குமான முறையில் கல்வித் திணைக்களத்தின் அனுமதியோடு வெளியீடு செய்தார். இவர்கள் மூவரும் கல்வியோடு சம்பந்தமான நூல்களை வெளியிட்டனர்.

# முல்லை சிறுவர் இல்லங்களின் புத்தாண்டுக்கலைவிழா



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளியவளை பாரதி சிறுவர் இல்லம் முல்லைத்தீவு முத்தையன்கட்டு அன்பு இல்லம் செஞ்சோலை சிறுவர் இல்லம், ஆகிய இல்லங்களைச் சேர்ந்த சிறுவர்களின் புத்தாண்டு கலைவிழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை முல்லைத்தீவு முத்தையன் கட்டு அன்பு இல்லத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக நேட்டோ நிறுவனத் தலைவர் செ.பத்மநாதன் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ம.கணேசராஜா ஒட்டுசுட்டான பிரதேச சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் எஸ். இந்திரகுமார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் எஸ்.ரி.குமரன் மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர்

சிறுவர்களின் புத்தாண்டு கலை நிகழ்வுகளும் விளையாட்டு நிகழ்வுகளும் இடம் பெற்றன.கலை நிகழ்வுகளில் அன்பு இல்ல மாணவர்களின் வரவேற்பு நடன நிகழ்வு, பாரதி இல்ல மாணவர்களின் தீப நடன நிகழ்வு, செஞ்சோலைச்சிறுவர் இல்ல மாணவிகள் நந்தினியின் நடன நிகழ்வும், இசைச்செல்வியின் பாடல் நிகழ்வும் பாரதி சிறுவர் இல்ல மாணவி ஜெஸ்மீராவின் பாடல் நிகழ்வும் இடம் பெற்றது.

புதுவருட விளையாட்டு நிகழ்வுகளில் யானைக்கு கண் வைத்தல், வளையம் எறிதல், பந்து மாற்றம், பணிஸ் சாப்பிடுதல், கயிறடித்தல்,மாவு ஊதுதல் நீர் நிரப்புதல், தொப்பி மாற்றுதல், பந்து வாளியினுள் எறிதல், பலூன் ஊதுதல் ஆகிய போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றன. புதுவருட போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

## கீரிமலை வலித்தூண்டல் பாடசாலைக்கு தற்காலிக ஆசிரியர் நியமனம்

(மானிப்பாய்)

25 வருடங்களின் பின் சொந்த இடத்தில் இயங்கும் யாழ். கீரிமலை வலித்தூண்டல் றோ.க பாடசாலையில் தற்காலிகமாக ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளார்.இப்பாடசாலைக்கு முன்னர் நிரந்தர ஆசிரியர் இல்லாமையால் கல்விச் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்தது.

எனினும் குறித்த பாடசாலைக்கு நிரந்தரமாக ஆசிரியர் நியமிக்கப்படும்வரை யாழ் எய்ட் தன்னார்வத் தொண்டு நிறு வனமானது தற்காலிகஆசிரியரை நியமித்து உதவி புரிந்துள்ளது.

இதன் மூலம் மாணவர்களின் கற்றல் தேவைகள் பூர்த்தி செயயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவுஸ்ரேலிய மெல்பேர்னில் வசிக்கும் புலம் பெயர் வாழ் ஈழத தமிழரும் சமூக சேவையாளருமான திருமதி.இராஜராஜேஸ்வரி ரஞ்சன் அனுசரணையில் யாழ். எய்ட் ஸ்தாபகரும் நோர்வேயின் அபிவிருத்திக்கான முகவர் அமைப்பின் பாகிஸ்தானுக்கான கணக்காளர் நாயகமுமான தி.நடனசபேசனின் ஆலோசனைக்கமைய தற்காலிக ஆசிரியர் நியமிக்கப் பட்டுள்ளார். (48)

# அச்சத்தின் மத்தியில் வெங்காயச் செய்கை

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்கு பிரதேச விவசாயிகள் பெரும் அச்சத்தின் மத்தியில் பெரும்போக வெங்காயச் செய்கையில் முனைப்புடன் ஈடுபட்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. வழமையாக பருவ மழையைத் தொடர்ந்து நிலம் பண்படுத்தி பயிர்ச் செய்கையில் ஈடுபடும் இப்பகுதி விவசாயிகள் இம்முறை பருவமழை போதிய அளவில் கிடைக்காத நிலையிலும் தொடர்ந்தும் காலந்தாழ்த்தாது வெங்காயச் செய்கையில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

குறிப்பாக அச்சுவேலி, ஆவரங்கால் புத்தூர். நீர்வேலி, கோப்பாய் பகுதிகளில் உள்ள விவசாயகள் தாழ்நிலப் பகுதியிலேயே விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வருவது வழமையாகும். ஆனால பெருமழை பெய்யும் வேளைகளில் வெள்ளந்தேங்கி நிற்கும் இப்பகுதிகளில் பருவமழை சரியாக பெய்யாத நிலையிலும் காலம் தாழ்த்தாது வெங்காயச் செய்கையில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

தற்போது விதை வெங்காயம் பத்தாயிரம் ரூபா வரை விற்பனையாகி வரும் நிலையில், பயிர்ச் செய்கையின் பின்னர் பெருமழை பெய்யுமாயின் அது தமக்கு பேரழிவினை ஏற்படுத்தும் எனவும் அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இம்முறை வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் வழமையை விடவும் மிகக் குறைவான விவசாயிகளே வெங்காயச் செய்கையில் நாட்டம் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (03)

வெள்ளி நற்சிந்தனை...



# நினைத்ததை நடத்தி வைப்பவன்

இறைவனின் அன்பு உள்ளத்தை உணர உணர அவனை நோக்கி ஈர்க்கப்படுவது தவிர்க்க முடியாத விடயமாகிவிடுகிறது. இந்த நெருக்கம் மேன் மேலும் அவரது அன்பை உணர வாய்ப பாகி விடுகிறது. காலப்போக்கில் அவனிடம் உள்ள விருப்பமே பக்தியாகப் பரிணமித்து விடுகிறது.

இறைவனின் புகழ் பாடுவது ஒரு இன்பம். அவனது பெருமையை எண்ணித் தியானத்தில் இருப்பது மற்றொரு வகை இன்பம். இந்த இன்பங்களை அனுபவிக்கத் தொடங்கி விட்டால் உலகத்தின் ஏனைய இன்பங்கள் எல்லாம் எவ்வளவு போலித்தனமானவை என்று புரிந்துவிடும். முடிவில் இறைவனோடு ஐக்கியமடைய வேண்டும் என்கிற பேரின்பம் மட்டும் தான் எஞ்சி நிற்கும்.

கிருஷ்ணனுக்கு, ருக்மணி தன்னுடைய உள்ளத்தின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தித தூது அனுப்புகிறாள். அவள் வெளியிடும் உணர்ச்சிகளில் ஜீவாத்மா பரமாத்மாவோடு ஐக்கியப்படுவதற்காக ஏங்கிவரும் ஏக்கம் தெளிவாகப் பிரதிபலிப்பதைப் பார்க்கலாம். அது மட்டுமல்ல. பக்தியின் பல்வேறு நிலைகளும் அதில் வெளிப்பட்டிருப்பதோடு பரிபூரண சரணாகதித் தத்துவம் அதில் அடங்கியிருக்கிறது.

ருக்மணி, கிருஷ்ணனுக்கு மாலை இட்டு மனைவி ஆகிவிட வேண்டும் என்கிற சங்கல்பத்தில் உறுதியாக இருக்கிறாள். இறைவனின் திருவடியில் சரணாகதி அடைய இந்தத்திட சித்தம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். கிருஷ்ணனை, ருக்மணி அச்சுதா! என்று அழைக்கிறாள். அச்சுதன் என்றால் "நினைத்ததை நடத்தி வைப்பவன்"என்று பொருள். அந்த நம்பிக்கை அவளுக்கு இருந்தது. தன்னுடைய பிரார்த்தனை வீண்போகாது என்று அவள் நம்பினாள். அவள் நம்பிக்கை பலித்து, கிருஷ்ணனுக்கு மனைவியுமானாள்.

ருக்மணிக்குக் கிருஷ்ணனிடத்தில் ஏற்பட்ட பக்தியும், நம்பிக்கையும் இறைவனிடத்தில் நமக்கு இருக்கவேண்டும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிருக்கப் பெட்டகம்

"உங்கட சொந்த ஊர் எது?"
"கிண்டல் பண்ணாதீங்க... சொந்த ஊர் எல்லாம் எனக்குக் கிடையாது."

"தபால்காரரே... எனக்கு கடிதம் ஏதாவது வந்திருக்கா?"
"உங்க பேர் என்ன சொல்லுங்க?"
"கடிதத்திலேயே பேர் இருக்குமே?"

"பாராளுமன்றத்தை கூட்டப் போறாங்களாமே...?"
"இவ்வளவு நாளா குப்பையாகவா கிடந்தது...?"

**ஜோதிடர்:** உங்களுக்கு ஏழெட்டு மாதத்தில் திருமணம் நடக்கும்...
**வந்தவர்:** எந்தெந்த மாதம் என்று சொல்ல முடியுமா ஜோசியரே?

"முதல் காதலி "தமிழ்' ரெண்டாவது காதலிதான் "நீ' என்று என் காதலர் சொன்னதைக் கேட்டு ஏமாந்திட்டேன்"
"எப்படி?"
"ஏற்கெனவே 'தமிழ்ச்செல்வி' என்று ஒரு காதலி இருக்கிறாளாம்."

**பெண்ணின் தாய்:** என் பெண் கொஞ்சம் சாய்ஞ்சு சாய்ஞ்சுதான் நடப்பா... பரவாயில்லையா?
**மாப்பிள்ளையின் தாய்:** பரவாயில்லை என் மகன் எப்ப வும் தள்ளாடிக்கொண்டேதான் நடப்பான்.

**நோயாளி:** ஒப்பிரேஷன் பண்ணினால் பிழைக்க முடியுமா டொக்டர்?
**டொக்டர்:** ஒப்பிரேஷன் பண்ணித்தானே நான் பிழைக்கறேன்.

"ஆதாமுக்கு இனிஷியல் என்ன?"
"தெரியேல்லையே..?"
"கு. ஆதாம் – குரங்கில் இருந்துதானே மனிதன் பிறந்தான்!"

"எந்த மாதத்தில் மக்கள் குறைந்தளவு நேரம் தூங்குவார்கள்?"
"தெரியேல்லையே"
"இது கூடவா தெரியாது? பெப்ரவரி மாதத்தில்தான்... அந்த மாதத்தில் 28 நாள்தானே உண்டு"

**ஒருவர்:** உங்கள் மூத்த மகன் "கணக்கில் புலி' என்று சொன் னீங்களே... அப்ப இரண்டாவது மகன்..?
**நண்பர்:** கம்ப்யூட்டரில் மவுஸ்..!

"என் மகள் உலகமே தெரியாமல் வளர்ந்திட்டாள்."
"அவளிடம் அட்லஸை எடுத்துக் காட்ட வேண்டியதுதானே!"

"வீட்டோடு மாப்பிளை வேணும் என்று கேட்டீங்களே...
இவர் வீட்டைவிட்டு வெளிய தலைகாட்டவே மாட்டார்"
"அப்பிடியா?"
"ஆமாம், பொலீஸ் தேடிக்கொண்டிருக்கு"

"தலைவர் தீயணைப்பு வண்டியுடன் போறாரே... ஏன்?"
"அவர் பிரசாரம் செய்தால் அனல் பறக்குமாம்"

**பொலீஸ்:** விபத்து எப்படி நடந்தது?
**பஸ் சாரதி:** அதுதான் தெரியேல்லை. கொஞ்ச நேரம் தூங் கிவிட்டேன்.

**மந்திரி:** அரசே நம் நாட்டில் ஆறு குளங்கள் வற்றிவிட்டன..!
**அரசர்:** அதனாலென்ன? ஆறு குளங்கள் மட்டும்தானே வற்றின! மீதிக் குளங்களைப் பயன்படுத்தச் சொல்லி உத்தரவிடுங்கள்!

"கதிர்காமத்துக்கு கால்நடையாகப்போகப்போறேன்?"
"கோயிலுக்குப் போகும்போதாவது மனுசனாகப் போகக் கூடாதா?"

"ஏன்ரா, இரவு முழுதும் படிச்சேன் என்று சொன்னியே. உன் அறையில் லைற்றே எரியேல்லையே"
"படிக்கிற ஆர்வத்தில அதைக் கவனிக்கேல்லை அப்பா"

"என் ஜாதகப்படி எனக்கு அறிவு அதிகமாம்."
"இப்ப தெரியுதா நான் ஏன் ஜாதகத்தை நம்புறதில்லை என்று!"

"நான் என் மனைவிக்குப் பயப்படுவேன்... நீங்கள்?"
"நான் ஏன் உங்கள் மனைவிக்குப் பயப்படோணும்?"

"ஒரு முட்டாளை எப்படிக் காக்க வைப்பது?"
"பதிலை நாளைக்குச் சொல்கிறேன்".

ஒன்பது எம்.பி., பத்து எம்.பி. வைத்திருப்பவர்கள் எல்லாம் பிரதமர் கனவில் இருக்கும்போது 8192 எம்.பி. அதாவது எட்டு ஜிபி (Giga bite) வைச்சிருக்கும் நான் ஏன் பிரதமராகக் கூடாது?

# சாதனை மாணவர்களின் உள்ளத்திலிருந்து.....

## உதயமூர்த்தி கீர்த்தனன்

யாழ். ஹாட்லிக் கல்லூரி
கணிதப் பிரிவு -3A
மாவட்ட நிலை : 02
தேசிய நிலை: 05



தினமும் படித்தல், படித்தவற்றை திரும்பிப் படித்தல், பெற்றோரின் ஆதரவும், ஆசிரியர்களின் ஒத்துழைப்புமே எனது வெற்றிக்கு காரணமாகும்.

நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவில்லை. க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ பெறுபேற்றைப் பெறறேன். எனது தந்தை புள்ளி விபரவியல் உத்தியோகத்தராகக் கடமையாற்றுகிறார்.

பாடசாலையின் சிரேஷ்ட மாணவத் தலைவனாக இருந்தேன். வினாடி வினாப் போட்டிகளில் பங்குபற்றியுள்ளேன். எனது வெற்றிக்கு காரணமான அதிபர் ஆசிரியர் மாணவர்களிற்கு நன்றி கூறுகிறேன். விடா முயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் பரீட்சையில் வெற்றிபெறலாம்.

## காசிலிங்கம் கிரிதரன்

யாழ். ஹாட்லிக் கல்லூரி
உயிரியற் பிரிவு -3A
மாவட்ட நிலை :03
தேசிய நிலை : 17



எதற்கும் முக்கியத்துவம் கொடுத்தால் சிறப்பாக முன்னேற முடியும், முயறசியும் கடவுள் நம்பிக்கையும் வெற்றிக்கு அவசியமானவை.


நான் பாடசாலைக் காலத்தில் விளையாட்டில் அதிகம் ஈடுபடுவேன். மைதான நிகழ்ச்சி, சுவட்டு நிகழ்ச்சி விளையாட்டுக்களில் வெற்றிகளைப் பெற்றுள்ளேன்.

எனக்கு தந்தை இல்லை. சகோதரி வைத்தியராகவுள்ளார். நான் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 145 புள்ளிகளையும் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் 8ஏபி பெறுபேற்றையும் பெற்றேன்.

எனது வெற்றிக்காரணமான அதிபர் ஆசிரியர்கள், சக மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு நன்றி கூறுகிறேன்.

## குலசிங்கம் கௌரிசங்கர்

யாழ். ஹாட்லிக் கல்லூரி
உயிரியற் பிரிவு -A2B
மாவட்ட நிலை :25
தேசிய நிலை : 818



முயற்சியும் பெற்றோர் ஆசிரியரின் ஆசியும் இருந்தால் நிச்சயம் வெற்றி பெறலாம்.

அந்தவகையில் நான் தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகளையும்,க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 6ஏ 2பி சி பெறுபேற்றையும் பெற்றேன்.நான் விடாமுயற்சியுடன் படித்த வற்றை அன்றே படிப்பேன்.எனது தந்தை விவசாயி, சகோதரன் மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் கல்வி பயில்கின்றார்.நான் விளையாட்டு நிகழ்வுகளில் அதிகம் பங்குபற்றியுள்ளேன்.

நான் இப்பெறுபேற்றை பெற்றதையிட்டு எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் சக மாணவர்கள் ஆகியோருக்கு நன்றி கூறுகிறேன்.

## தில்லைநாதன் சுதாகரன்

யாழ். ஹாட்லிக் கல்லூரி
கணிதப் பிரிவு -3A
மாவட்ட நிலை :17
தேசிய நிலை : 155



திரும்பத் திரும்பக் கற்றலுடன் பாடசாலைக் கல்வி, கல்விநிலையங்களின் கல்விக்கு முக்கியமளித்தல் வேண்டும்.

நான் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளையும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 7ஏ பி சி பெறு பேற்றையும் பெற்றேன்.

எனது தந்தை தந்தை விவசாயி, சகோதரி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் படிக்கின்றார். படிக்கும் காலத்தில் இலத்திரனியல் சாதனங்களின் பயன்பாட்டை குறைக்க வேண்டும்.

**தொகுப்பு : கணா நாதன்**

**க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களின் சிறந்த பெறுபேற்றை பெற்ற மாணவர்கள் தமது சாதனை பகிர்வை தினமுரசில் வெளியிடவிரும்பினால் 0777193264, என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.**

# கைத்தொழிலாளர்களுக்கு நன்மைபயக்கும் புதிய திட்டங்களை வகுக்க வேண்டும்



(கொழும்பு)

கைத்தொழிலாளர்களுக்கு நன்மைபயக்கக் கூடிய புதிய திட்டங்களை வகுத்து நாம் சிறந்த முறையில் செயலாற்றுவதற்கு முன்வரவேண்டும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டை வரவேற்று அமைச்சினால் பணிகளை ஆரம்பிக்கும் நிகழ்வு அமைச்சர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

பௌத்த, இந்து, இஸ்லாம், மத குருமார்களின் மத அனுஷ்டானங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த வைபவத்தில் அரச சேவையின் உறுதிமொழி அனைத்து அதிகாரிகளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர், அமைச்சின் செயலாளர் .சிவஞானசோதி அமைச்சின் புதிய வருடத் திற்கான செயற்பாடுகள் தொடர்பிலும் புதிய திட்டங்கள் தொடர்பிலும் தெளிவுபடுத்தினார்.

இதன்போது உரையாற்றிய பிரதியமைச்சர் வீரகுமார திஸாநாயக்க 2013 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டங்களை விட பாரிய வேலைத் திட்டங்களை 2014 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளதாகத் தெரிவித்தார்.

எமது அமைச்சின் ஊடாக நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து கைத்தொழிலாளர்களினதும் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நாம் பலம் பொருத்தியவர்களாக செயற்பட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றி அவர் வலியுறுத்தினார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கையில், அமைச்சின் செயற்திட்டங்களையும் அதற்கு மேலதிகமாக கைத்தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கக் கூடிய புதிய திட்டங்களையும் வகுத்து நாம் சிறந்த முறையில் செயலாற்றுவதற்கு முன்வர வேண்டுமென்றும எமது உழைப்பின் அனைத்து பயன்களும் எமது இலக்காகிய கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு நன்மையாக அமைய வேண்டு மென்றும அதேநேரம் உங்களது செயற்பாடுகளின் மூலம் உங்களது வாழ்க்கையை ஒளிமயமான தாக்கிக் கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களினதும் அதிகாரிகளும் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

## முறைப்பாடு

வேதனம் மற்றும் பதவி உயர்வுகள் மற்றும் சேவைகள் சட்ட மூலத்தை சீர்திருத்துமாறு கோரி, மனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்படவுள்ளது.

அகில இலங்கை வைத்திய அதிகாரிகளின் சங்கம் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. குறிப்பிட்ட வருடத்திற்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை என்று, அந்த சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஜயந்தபண்டார தெரிவித்துள்ளார்.

# சோளப்பயிருடன் கஞ்சா

திருகோணமலை, மொறவெவ, எத்தாபெத்திவென பகுதியில் சோளப் பயிர்ச்செய்கை காணியில் கஞ்சா செடிகளை பயிரிட்டிருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கடந்த செவ்வாய்க் கிழமை மாலை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் ஆரம்பகட்ட விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாகவும், அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஹெரோயின் வைத்திருந்ததால் சேவையில் இருந்து இடைநிறுத்தம்

ஹெரோயின் வைத்திருந்த சந்தேகத்தில் கைதான வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

இதேவேளை, கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபரான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்று முன்தினம் மாலை கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் விடுத்த கோரிக்கையின் பிரகாரம், 07 நாட்கள் தடுத்துவைக்கும் உத்தரவிற்கமைய, அவரிடம் விசாரணைகளை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

# அரசபணி வலுவடைய அரபபணிபபான சேவை அவசியம

(கொழும்பு)

பணிகளை தயக்கமின்றி நிறைவேற்றினால் அரச பணி வலுவடையும் எனவே தராதரம் பாராது சிறந்த மக்கள் சேவையை முன்னெடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு, சகல அரச ஊழியர்களிடமும் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலணியினர் புதிய வருடத்தின் பணிகளை நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கும் பொருட்டு ஜனாதிபதி செயலகத்தில் முற்பகல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


கடந்த வருடத்தில் நாட்டில் பல வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு முடிந்துள்ளது. இந்த வருடத்திலும் ஜனாதிபதியினால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன அரசாங்க ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றார்.

# கிராமப்புற பாடசாலைகளின் கல்வித் தரம் உயர்வு

கிராமப்புற பாடசாலைகளின் கல்வித் தரம் உயர்ந்துள்ளது என கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டின் முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக சகல தமிழ், முஸ்லிம், சிங்கள பாடசாலைகளும் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதனை முன்னிட்டு கொழும்பு லும்பினி வித்தியாலயத்தில் கல்வியமைச்சர பந்துல குணவர்த்தன தலைமையில் விசேட வைபவம் நடைபெற்றது.

கல்வியமைச்சின் உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்ட இந்த வைபவத்தில் அமைச்சர் மேலும் உரையாற்றுகையில், கிராமப்புறப் பாடசாலைகளின் கல்வித்தரம் இப்போது உயர்ந்துள்ளதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் அதற்கான நடவடிக்கைகளை கல்வியமைச்சு மேற்கொண்டுவருகின்றது என்றார்.

9.  இத்திண்மத்தில் காணப்படும் முகம் ஒன்றின் வடிவம் யாது? ....................

11) குறிப்பிட்ட வகுப்பொன்றில் மாணவர்கள் சித்தியடைந்த பாடங்களும், எண்ணிக்கையும் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது. வகுப்பில் 40 மாணவர்கள் உள்ளனர். என்பதை கவனத்திற்கொள்க.

| பாடம் | சித்தியடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| விஞ்ஞானம் | 25 |
| கணிதம் | 10 |
| தமிழ்மொழி | 32 |
| ஆங்கிலம் | 15 |
| வரலாறு | 28 |

1. கூடுதலான மாணவர்கள் சித்தியடைந்த பாடம் எது? ....................
2. குறைந்தளவு மாணவர்கள் சித்தியடைந்த பாடம் எது? ....................
3. வகுப்பிலுள்ள மாணவர்களில் $\frac{1}{4}$ மாணவர்கள் சித்தியடைந்த பாடம் எது? ....................
4. தமிழ்மொழி பாடத்தில் சித்தியடையாத மாணவர்கள் எத்தனை பேர்? ....................
5. வரலாற்றுப்பாடத்தில் சித்தியடையாத மாணவர்கள் எத்தனை பேர்? ....................

12) பின்வரும் படச்சட்டகங்களின் உதவியுடன் பொருத்தமான ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களை கொண்டிருத்தல் வேண்டும். இலக்கணரீதியிலான தொடர்பு சரியாக அமைய வேண்டும்.



1. ....................
2. ....................
3. ....................
4. ....................
5. ....................
6. ....................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - I
1.30 மணி

# கல்வி முரசு



**(1) பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

பாலை மோரை தந்து நிதம்
பண்பாய் பழகும் பசுப் போல
ஞாலம் தன்னில் நாம் காணும்
நல்ல மிருகம் வேறுண்டோ

வண்டிச் சவாரி செய்வதற்கும்
வயலை நன்றாய் உழுவதற்கும்
பண்டைக் காலம் உதவியது
பயன்சேர் எருத்து மாடன்றோ

1. ஞாலம் என்ற சொல்லுக்கான ஒத்த சொல்லை தருக? ....................
2. எருது எனும் **சொல்லின்** பெண்பால் சொல்லை குறிப்பிடுக? ....................
3. முதலாம் பாடலில் இடம் பெற்றுள்ள பெயர் அடைமொழியைக் குறிப்பிடுக? ....................
4. பண்டைக்காலம் என்பதனால் விளங்கிக் கொள்வது யாது? ....................
5. பாடலில் வர்ணிக்கப்படும் பிராணியினால் கிடைக்கும் பயன் ஒன்றைக்குறிப்பிடுக? ....................
6. பாடலில் இடம் பெற்றுள்ள உவமைத் தொடரைக் குறிப்பிடுக? ....................
7. நல்ல எனும் சொல்லின் எதிர் சொல்லைக் குறிப்பிடுக? ....................

**(2) பின்வரும் மரபுத்தொடர்களின் பொருளை எழுதுக.**

1. நாக்குப் புரளுதல் .................... 2. குரங்குப் பிடி ....................

**(3) பின்வரும் கூற்றுக்குப் பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.**

1. நிலம் நீர் காற்று வானம் தீ முதலியன ஐம்பூதமாகும்
2. மகனே வாழ்க

**(4) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. உழைக்கும் மனிதனுக்கு கைகளே பலமாகும்.
வாக்கியத்தின் சினைப் பெயர் யாது? ....................
2. பெரிய யானை காட்டில் உலாவித் திரிந்தது.
வாக்கியத்தில் உள்ள பெயரடைமொழி எது? ....................
3. பாடசாலை சிரமதானத்தில் பெற்றோர்கள் பங்கு கொண்டனர்.
வாக்கியத்திலுள்ள படர்க்கை, பலர்பால், பெயர்ச்சொல் எது? ....................

**(5) பின்வரும் தொடர்களுக்கான கருத்தை குறிப்பிடுக.**

1. எடுத்தெறிதல் ....................
2. கட்டுக்கதை ....................

**(6) கருத்தினை தமிழில் எழுதுக.**

1. What's that? .................... 2. Good morning ....................


**(7) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக.**


1. எட்டு .................... 2. நீலம் .................... 3. கால் ....................


1. வம்பட்டு ................................ 2. கொஹா ................................

(02 புள்ளிகள்)

**08) சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. கொடுக்கால் எதிரியைத்தாக்கும் பிராணி
   1. தேள் 2. வண்ணத்துப்பூச்சி 3. நுளம்பு 4. நத்தை
2. ஆபத்து வேளைகளில் தன்குஞ்சுகளை சிறகுக்குள் ஒழித்துக் கொள்ளும் பிராணி
   1. தேனீ 2. கோழி 3. வாத்து 4. சேவல்
3. பராக்கிரமபாகுவின் வரலாற்றைக் கூறும் நூல்.
   1. பாரதசாசனம் 2. சூளவம்சம் 3. மகாவம்சம் 4. பூமிவன்சய
4. சிறுவர் உரிமை மீறல் சம்பந்தமான விடயங்களை தெரிவிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய தொலைபேசி எண் யாது.
   1. 1919 2. 118 3. 117 4. 333
5. தவிட்டரிசியிலுள்ள போசணைச்சத்து
   1. மாச்சத்து 2. விற்றமின் B 3. விற்றமின் D 4. கல்சியம்
6. 


   படத்தில் காட்டியுள்ளபடி நீர் நிரம்பிய கண்ணாடிக் குவளையினை காட்போட் அட்டையுடன் தலைகீழாக பிடிக்கின்ற போது நிகழ்ந்த மாற்றம்.
   1. நீர் விரைவாக குவளையினுள் சென்றமை
   2. காட்போட் துண்டு ஊறிவிடும்
   3. குவளை காட்போட்டுடன் ஒட்டிக்கொள்ளும்
   4. கண்ணாடிக்குவளை விழுந்து உடையும்
7. வித்து முளைப்பதற்கு தேவையற்ற காரணி ஒன்று.
   1. நீர் 2. வெப்பம் 3. வளி 4. உரம்
8. இலங்கைக்கு வடக்குத் திசையில் அமைந்துள்ள நாடு.
   1. தாய்லாந்து 2. இந்தியா 3. மாலைதீவு 4. மலேசியா
9. 

   இவ்வுடுத்தொகுதி
   1. இடபம் 2. தேள் 3. வேட்டைக்காரன் 4. ஜெமினி
10. சிறு குழந்தைகளுக்குரிய மருந்து வகைகளை அருந்தக் கொடுக்கும் போது கவனிக்க வேண்டியது.
    1. குழந்தையின் வயது 2. நோயின் தன்மை 3. மருந்தின் அளவு 4. காலம்
11. வித்துக்கள் நீக்காமல் உணவாகப் பயன்படுத்த முடியாதது.
    1. போஞ்சி 2. வெண்டி 3. பப்பாசி 4. முருங்கை
12. தென்மாகாணத்தில் அமைந்துள்ள மாவட்டம் அல்லாதது.
    1. காலி 2. அம்பாந்தொட்டை 3. மாத்தறை 4. களுத்துறை
13. இயற்கையின் சமநிலையை பேணக்கூடிய பிராணி
    1. ஓணான் 2. நத்தை 3. நாய் 4. எலி
14. தாதுசேன மன்னனால் கட்டப்பட்ட கால்வாய் எது?
    1. அபயவாவி 2. யோதகால்வாய் 3. எலகரகால்வாய் 4. கல்லோயா காலவாய
15. 

    இவ்வுபகரணத்தைப் பயன்படுத்துபவர்
    1. கொத்தன் 2. கொல்லன்
    3. ஆசாரி 4. தச்சன்

**09) பின்வரும் குறியீடுகள் உணர்த்தும் விடயங்கள் எவை**

1.  ................

2.  ................

3.  ................

4.  ................


**10) கணித வினாக்களுக்கு விடை தருக.**

1. | | |
   |---|---|
   | 8 | 5 |
   | 4 | 0 |

   கூண்டிலுள்ள எண்ணைக்கொண்டு ஆக்கக் கூடிய மிகப்பெரிய எண் யாது? ................
2. மோட்டார் சைக்கிள் ஒன்றின் மானியின் வாசிப்பு பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது 0 5 0 9 9 இன்னும் 100 Km பயணித்த பின் மானி காட்டும் வாசிப்பு யாது? ☐☐☐☐☐
3. 610 தேங்காய்களை மூன்று கடைகளுக்கு பகிர்ந்தளித்தபின் எஞ்சும் தேங்காய்கள் எத்தனை? ................
4. A எனும் தொழிற்சாலையில் 50099 கண்ணாடி போத்தல்களும் B எனும் தொழிற்சாலையில் 50009 போத்தல்களும் உற்பத்தி செய்யப்பட்டன. இரு தொழிற்சாலையிலும் உற்பத்தி செய்த மொத்த கண்ணாடி போத்தல்கள் எத்தனை? ................


<u>தரவுகளை படத்தில் வரைக</u>

5. தரன் A எனும் இடத்திலிருந்து மேற்குத் திசையாக 2m தூரமும் பின் அங்கிருந்து வடக்கு நோக்கி 1m தூரமும் சென்றபின் கிழக்கு திசைக்குத் திரும்பி 3m தூரமும் பயணமானான்.




ஒரு கட்டம் $1m^2$ ஆகும்.

6. படத்தை பயன்படுத்தி விடை தருக.




1. B அறையின் நீளம் எத்தனை மீற்றர்? ................
2. A அறையினதும் C அறையினதும் நீளம் மொத்தம் எத்தனை மீற்றராகும்? ................

7. ஒரு தராசில் ஒரு தட்டில் 1kg படியும் 200g படியும் போடப்பட்டது. மறு தட்டில் ஒரு பொதியும் 200g படியும் போடப்பட்டது. தராசின் இரு தட்டுகளும் சம நிறையைகாட்டின எனின் தட்டில் போடப்பட்ட பொதியின் நிறை யாது? ................

# இரணைமடு இயற்கைச் சமன்பாட்டை மாற்றியமைக்க முயன்றால் விளையும் விபரீதம்


(தொடர்ச்சி.......)

இத்திட்டமானது இரணைமடுக்குளத்திலிருந்து கனகராயன் ஆற்றிலிருந்து புகரி நீர்,நெத்தலி ஆற்றினூடாக வரும் நீர் ,தேராவில் ஆற்றினூடாக வரும் நீர் ஆகியவற்றை ஆனையிரவிலும் சுண்டிக்குளத்திலும் தடுப்பணைகள் அமைத்து ஆனையிறவு கடலேரியில் சேகரித்து பின்னர் முள்ளியானூடாக வல்லைவெளி மற்றும் உப்பாற்றுவெளி என்பவற்றை உள்ளடக்கி தொண்டமனாறு மற்றும் அரியாலை தடுப்பணை என்பவற்றுடன் இணைத்து பாரிய நீர்த்தேக்கத்தை உருவாக்குவதேயாகும். இத்திட்டத்தினால யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரானது பல மடங்கு மீழ்நிரப்புகைக்கு உட்படுவதுடன் வடமராட்சி,தென்மராட்சிப்பகுதியில் காணப்படும் பல ஆயிரம் ஏக்கர் சதுப்பு நிலங்கள் மற்றும் உவர் தரைகள் என்பன பயன்பாட்டுக்கு கொண்டு வரலாம் என்பதேயாகும்.

அத்தோடு யாழ்ப்பாணத்தின் சுற்றுலாத்துறையில் பாரிய அளவில் முன்னேற்றம் ஏற்படுவதுடன் சுற்றுச்சூழல் நிலமைகளும் அபிவிருத்தி அடையும் இத்திட்டமானது 1980களின் முற்பகுதியில் பாரிய அளவில் முன்னெடுக்கப்பட்டு யுத்தம் காரணமாக பின்னர் கைவிடப்பட்ட திட்டமாகும். எனவே இத்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து யாழ்ப்பாணத்திற்கான நீடித்த நிலையான நீர்வள அபிவிருத்தியை மேற்கொள்வதே மிகச் சிறந்ததாகும்

3) யாழ்-இரணைமடு நீர்விநியோக திட்டத்திற்கு பிரதான காரணமாக அதிகாரிகளினால் கூறப்படுவது யாழ்ப்பாண நிலத்தடி நீர் தொடர்ச்சியாக மாசுபட்டு வருகின்றது என்பதாகும். இம் மாசு எதனால் ஏற்படுகின்றது என்பதை யாரும் சிந்திக்கவில்லை. அத்துடன் அதனைக்கட்டுப்படுத்துவதற்கான சட்டங்கள், வரையறைகள், ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளுவதற்கு எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை. அதிலும் பிரதான மாசுபடுதல் வழியாகக்கூறப்படுவது யாழ்ப்பாணத்தில் அடர்த்தியான மலசல கூடங்கள் அமைத்தலாகும். இவற்றைக்கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர சட்டங்களில் இடமுண்டு என்பதுடன் பல ஆயிரம் மில்லியன் ரூபாக்களை செலவழித்து இரணைமடு நீரை பெறுவதிலும் பார்க்க கொழும்பில் உள்ளதைப்போல யாழ்ப்பாணத்திலும் பொதுக் கழிவகற்றல் வலையமைப்பை உருவாக்குதல் சாலச் சிறந்ததாகும்.

4)தற்போதைய நிலையில் யாழ்ப்பாணத்திற்கான குடிநீர் நெருக்கடியானது 25 வருடங்களின் பின்னரே ஏற்படக்கூடிய நிலை காணப்படுவதாக கூறப்படுகிறது. அக்கால கட்டத்தில் கடல் நீரை குடிநீராக மாற்றும் தொழில்நுட்பம் இலகுவாக கிடைத்துவிடும் என்பதுடன் இத்திட்டமே யாழ்ப்பாணத்துக்கான பல ஆயிரமாண்டுகளுக்கு நீடித்து நிலைக்கக்கூடிய திட்டமாகும். எனவே இரணைமடு விவசாயிகள் ஆகிய நாங்கள் எதிர்பார்த்து நிற்பது இவ்விடயத்தில் யாழ்ப்பாணத்து மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும். மக்களும் மக்கள் பிரதிநிதி ஆரோக்கியமான் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவேண்டும். இதனால் நீண்டகால நோக்கில் பாதிக்கப்படபோவது யாழ்ப்பாணத்து மக்களும் தான் யாழ்ப்பாணத்



துக்கு இலவசமாகவும் இயற்கையாகவும் ஆரோக்கியமான குடிநீர் கிடைக்க பல வழிகளை இறைவன் தந்த போதும் இவ்வாறு இரணைமடுவிலிருந்து நீரை வழங்க முயற்சிப்பது பண்நாட்டு வங்கிகளும் நிறுவனங்களும் கடன் என்ற போர்வையில் நிதியை வழங்கி பின்னர் நீண்ட காலத்திற்கு யாழ்ப்பாண மக்களின் உழைப்பை உறிஞ்சி தங்கள் கயாணக்களை நிரப்பிக் கொள்வதற்கேயாகும். அத்துடன் யாழ்ப்பாணத்துக்கான உணவுப் பாதுகாப்பு அரணைத் தகர்த்து அவர்களை தங்கிவாழும் நிலைக்கு ஆக்குவதுமேயாகும்.

மேற்படி மாற்றுத்திட்டம் தொடர்பாக ஏன் கவனம் செலுத்தவில்லை என்பதற்கு எதுவிதமான ஏற்கொள்ளமுடியாத பதிலும் அதிகாரிகளினால் முன்வைக்கப்படாமல் உள்ளதாலும் நிச்சயமாக குறித்த நீர் வழங்களினால் இங்கு குடியேறியிருக்கும் கிளிநொச்சி மக்களின் வாழ்வாதாரத்தை சிதைக்கும் நடவடிக்கை என நாங்கள் கருதுவதாலும் எல்லாவற்றுக்கும் மேலாக இரணைமடு திட்டத்தை விட பனமடங்கு பயன்தரக்கூடிய மாற்றுத்திட்டத்தை நடைமுறைப்படுத்த 100 வீத சாதகமான நிலை காணப்படுவதாலும் குறித்த இரணைமடு நீர் தேக்கத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர்வழங்கும் திட்டத்தை தாம் எதிர்ப்பதாகவும் விவசாயிகளின் அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முற்றும்

# குடிநீர் வழங்காததைக் கண்டித்து வெளிமலை மக்கள் ஆர்ப்பாட்டம்



(மன்னார்)

முசலி பிரதேச சபைக்கு முன்னால் வெளிமலை கிராம மக்கள் நேற்றுமுன்தினம் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதேச சபையினால் கடந்த ஐந்து நாட்களாக குறித்த பிரதேச மக்களுக்கு குடிநீர் வழங்கப்படாமையினை கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

குடிநீர் பிரச்சினை தொடர்பாக பலமுறை பிரதேச சபை செயலாளரிடமும் பிரதேச சபை உறுப்பினர்களினதும் கவனத்திற்கு கொண்டு வந்தும் இது தொடர்பாக யாரும் கரிசனை கொள்வதாக இல்லை என மக்கள் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் இருந்து அயல் கிராமங்களுக்கு பவுஸர்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இருந்தும் பிரதேச சபையில் கடமையாற்றும் சில ஊழியர்களின் அசமந்தப் போக்கினால் கிராம மக்களுக்கு நீர் வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது என அவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் குறித்து பிரதேச சபை தவிசாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதனையடுத்து இப்பிரச்சினைக்கான தீர்வை வெகுவிரைவில் பெற்றுத் தருவதாக பிரதேச சபை தவிசாளார் உறுதியளித்துள்ளார். இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றுள்ளனர்.

# சிவனொளிபாதமலை யாத்திரியை 5 ஆம் திகதிவரை தவிர்க்க அறிவுறுத்து



சிவனொளிபாதமலை ஆலயத்தின் அபிவிருத்திப் பணிகள் இடம்பெறுவதால் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை பகல் வேளை பக்தர்கள் யாத்திரை செல்வதை தவிர்க்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவிருத்தி திட்டத்திற்கென் சிவனொளிபாதமலைக்கு விளக்கு, மணிக்கூடு உட்பட்ட 20000 கிலோவிற்கு மேற்பட்ட பொருடகள் நேற்று முதல் எடுத்துச் செல்லப்படுகின்றன. லக்ஸபான வாழமலை பிரதேச மைதானத்தில் இருந்து எம்.ஐ 17 என்ற வானூர்தியில் குறித்த பொருட்களை சிவனொளிபாதமலைக்கு விமானப்படையினர் கொண்டு செல்கின்றனர்.

இந்தப் பொருட்கள் 5ஆம் திகதி வரையும் கொண்டு செல்லப்படவிருப்பதனால் அது வரை பக்தர்கள் மாலை 6 மணியிலிருந்து காலை 6 மணிவரை மாத்திரமே சிவனொளி பாதமலை செல்ல முடியும் என பிரதான நாயக்க தேரர் பெங்கமுவ தம்மதின்ன தெரிவித்துள்ளார்.


# நியமனம்

கிளிநொச்சிக்கு புதிய சமுர்த்தி உதவி ஆணையாளராக எம்.எம். இர்பான் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் நேற்றுமுன்தினம் உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார். இதுவரைகாலமும் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளராக இவர் கடமையாற்றி வந்தார்.

அத்துடன், இதுவரைகாலமும் கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளராகவிருந்த திருமதி பரமோதயன் ஜெயராணி நேற்றுமுன்தினம் முதல் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளராக நியமனம் பெற்றுச் சென்றிருந்தமையால் அவ் வெற்றிடத்திற்கே எம்.எம். இர் பான் நியமனம் பெற்றுள்ளார்.

# ஆலயத்துக்கு நிதியுதவி



யாழ்.ஈச்சமோட்டை ஞான வைரவர் ஆலயத்திற்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வடமாகாண ஆளுநரினால் வழங்கப்பட்டன. நேற்று ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இவ்உபகரணங்கள் ஆலய பிரதம குருவிடம் கையளிக்கப்பட்டது

# ஐரோப்பிய ஒன்றிய வரிச்சலுகை 10 வருடங்களுக்கு கிடைக்கும் கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர்

(கொழும்பு)


இலங்கைக்கு இந்த மாதம் முதல் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையின் பலன்கள் கிடைக்கும் என கைத்தொழில் மற்றும் வணிகத் துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

ஜனவரி முதலாம் திகதி முதல் அடுத்த 10 வருடங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின இந்த வரிச் சலுகை இலங்கைக்கு கிடைக்கும். ஜீ.எஸ்.பி வரிச் சலுகையின் புதிய திட்டத்திற்கு அமைய சிறிய மற்றும் நடுத்தர கைக் தொழில் உற்பக்தி ஏற்றுமதியாளர்கள் பயனடைய முடியும்

ஐரோப்பிய ஒன்றியம் உலகில் மிகப் பெரிய வர்த்தக மற்றும பொருளாதாரத்தை கொண்டுள்ள பிராந்தியமாகும். 80 இற்றும் குறையாத நாடுகள் இலங்கையின் வர்த்தக பங்காளிகளாக உள்ளன.

இதில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் மிகப் பெரிய வர்த்தக பங்காளியாக இருப்பதுடன், இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு தெளிவான சந்தையாக திகழ்கிறது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மத்திய ஆபிரிக்காவில் மதச் சண்டை; இரு சிறுவர்கள் தலை துண்டித்துக்கொலை



மத்திய ஆபிரிக்க குடியரசில் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நடந்து வரும் சண்டையில் 2 சிறுவர்கள் தலை துண்டித்து கொல்லப்பட்டதாக யுனிசெவ அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த திங்கட்கிழமை நடந்த சண்டையில் 2 சிறுவர்கள் தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டனர்.அவர்களில் ஒருவர் சடலம் சின்னாபின்னமாக்கப்பட்டது. இந்தச் சண்டையில், இளைஞர்களுக்கு எதிராக எப்போதும் இல்லாத அளவுக்கு வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

டிசம்பரில் சண்டை தொடங்கியதிலிருந்து இதுவரை 16 சிறுவர்கள் தலை துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் 60 பேர் காயம் அடைந்துள்ளதாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சிறுவர்கள், இளைஞர்களை குறிவைத்தே வன்முறை கட்டவிழ்த்து விடப்படுகிறது என்று யுனிசெவ் அமைப்பின் மத்திய ஆபிரிக்க பிரதிநிதி சுலே மாஸ்னி டயாபேட் தெரிவித்துள்ளார்.

## இலங்கைச் சிறையிலுள்ள மீனவர்களை விடுவிக்குமாறுகோரி ஆர்ப்பாட்டம்



இலங்கைச்சிறையிலுள்ள தமிழக மீனவர்களை விடுதலை செய்யக்கோரி பாம்பனில் பேருந்து நிலையம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆர்பாட்டத்தில் 500இற்கும் மேற்பட்ட மீனவர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த டிசம்பர் 29 அன்று பாம்பன் மீனவர்கள் 18 பேர் கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டனர்.

மேலும் மூன்று மாதங்களாக தமிழக மீனவர்கள் 256 பேர் இலங்கைச் சிறைகளில் வாடி வருகின்றனர். மேலும் மீனவர்களின் 81 படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்நிலையில் மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக உறுதியான நடவடிக்கை எடுக்க மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி நேற்று பாம்பனில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ராமேஸ்வரம், பாம்பன், உள்ளூர் படகு மீனவர்களின் குடும்பங்கள் இணைந்து நடாத்திய ஆர்ப்பாட்டத்தில் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு மெத்தனப் போக்கை கடைப்பிடித்து வருகிறது எனக் கூறி கண்டன கோசங்கள் எழுப்பப்பட்டன.

## புத்தாண்டுக் கொண்டாட்டத்தைக் கண்டித்து சோமாலியாவில் கார்க்குண்டுத்தாக்குதல்

### 10பேர் பலி பலர் காயம்



புத்தாண்டுக் கொண்டாட்டத்தைக்கண்டித்து சோமாலியாவில் நிகழ்த்தப்பட்ட கார்க்குண்டு வெடிப்பில் சிக்கி 10 பேர் பலியாகியுள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.


சோமாலிய தலைநகரில் ஹோட்டல் அருகே கார்களில் வெடிகுண்டுகளுடன் வந்த மர்ம நபர்கள் அவற்றை வெடிக்கச் செய்தனர்.

இதில், பாதுகாப்புப் படை வீரர்கள் உட்பட 10 பேர் பலியாகினர். இது குறித்து பாதுகாப்புத் துறை உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில்: 10 சடலங்களை கைப்பற்றியுள்ளோம், ஆனால் சேதம் பெரிய அளவில் இருப்பதால் பலி எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது என்றார்.

அல் ஷெபாப் பயங்கரவாதிகள் இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு பொறுப்பேற்றுள்ளனர்.

உலகச் செய்திகள்

## இலவச பிரசவத்திற்காக பிரிட்டன் செல்லும் கர்ப்பிணிகள்



(லண்டன்)


பிரிட்டனுக்கு, வெளிநாடுகளில் இருந்து, சுற்றுலா வரும், கர்ப்பிணிகளின் தொகை அதிகரித்துள்ளது.

பிரிட்டனுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள், வந்த இடத்தில் பிரசவித்தால், அதற்கான செலவை, அரசே ஏற்றுக் கொள்கிறது. இதற்காக, பிரிட்டன், 20 கோடி ரூபாய் செலவு செய்கிறது. இதை அறிந்த, அண்டை நாடுகளின் கர்ப்பிணி பெண்கள், நிறைமாத கர்ப்பிணியாக, சுற்றுலா, "வீசா"வில் பிரிட்டன் வந்து சேர்கின்றனர். பிற ஐரோப்பிய நாடுகளில், மருத்துவமனைகளில், பிரசவத்திற்கு, நாள் ஒன்றுக்கு, பெரும்தொகை கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இந்தக் கட்டணத்தை கொடுக்க முடியாதவர்கள், குழந்தை பெற்றுக் கொள்ள, பிரிட்டனுக்கு வந்து விடுகின்றனர். இலவசமாக பிரசவம் முடிந்தபின் குழந்தையுடன் நாடு திரும்பி விடுகின்றனர்.

இதையடுத்து, இவ்வருடம் ஜனவரி முதல், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான, பிரசவ விதிமுறைகளில் மாற்றம் கொண்டுவர, பிரிட்டன் அரசு முடிவு செய்துள்ளது.

## தலையணையால் அமுக்கி இலங்கை குடும்பப்பெண் கொலை

### தமிழ்நாடு அகதிமுகாமில் சம்பவம்



தமிழ்நாடு, தம்மம்பட்டி அருகே இலங்கை அகதிகள் முகாமில் மனைவியை அவரது கணவர் தலையணையால அமுக்கி கொலை செய்துள்ளார்.

இதுதொடர்பாக பொலிஸார் வழக்குப் பதிவு செய்து அவரது கணவரான பொலிஸ் உறுப்பினரை தேடி வருகிறார்கள்.

சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகில் உள்ள நாகியம்பட்டி பகுதியில் இலங்கை அகதி முகாமில் இலங்கையைச் சேர்ந்த ஞானகுமாரி (வயது 24) என்பவர் வசித்து வந்தார்.

இவருக்கும், மனோஜ்குமார் என்பவருக்கும் கடந்த 7 வருடத்திற்கு முன்பு திருமணம் நடந்தது. மனோஜ்குமார் டில்லியில் மத்திய ரிசேர்வ் படையில் பொலிஸாராக பணியாற்றி வருகிறார்.

இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். கடந்த சில நாட்களுக்கு முன்பு மனோஜ்குமார் விடுமுறையில் வீட்டிற்கு வந்திருந்தார்.

இந்த நிலையில் கணவன், மனைவி இடையே வருடப்பிறப்பு தினமான நேற்று முன்தினம் காலை வாய்த்தகராறு ஏற்பட்டது. இருவரும் மாறி மாறி தாக்கிக்கொண்டனர். முகத்தில் தலையணை வைத்து அமுக்கியதில் ஞானகுமாரி மயங்கி விழுந்து விட்டார். இதை அறிந்த அவரது கணவர் அங்கிருந்து தப்பி ஓடி விட்டார்.

ஞானகுமாரி மயங்கி கிடந்ததை அறிந்த அயலவர்கள் அவரை உடனே தனியார் வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கு அவர் இறந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

## ஈரானுக்கு புனிதப்பயணம் பக்தர்கள் மீது தாக்குதல்

### இருவர் பலி, 29பேர் காயம்

ஈரானுக்கு புனிதப் பயணம் சென்று திரும்பிய பாகிஸ்தான் பக்தர்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் இருவர் பலியாகியுள்ளனர். 29பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானிலிருந்து 35 பக்தர்கள் இந்த வார ஆரம்பத்தில் ஈரானில் உள்ள புனிதத் தலங்களை தரிசிக்க சென்றிருந்தனர். அங்கு அவர்கள் தங்கள புனிதப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் பேருந்து ஒன்றில் தங்கள் ஊர்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். நேற்று முன்தினம் மாலை பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தின் குவெட்டா நகரத்தின் அருகே உள்ள அக்தராபாத் பைபாஸ் சாலையில் வந்துகொண்டிருந்தபோது பேருந்து தாக்கப்பட்டுள்ளது.



வெடிகுண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து துப்பாக்கிச்சூடுகளும் நடைபெற்றதாகத் தகவல்கள் தெரிவித்தன. இதனைத் தொடர்ந்து பேருந்து தீப்பிடித்து எரிந்ததில் இரண்டு பயணிகள் பலியாகி உள்ளனர். 29 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பலுசிஸ்தான் மாகாணத்தின் தகவல் தொடர்பு அமைச்சரான அப்துல் ரஹீம் இந்த விபத்துக் குறித்த செய்தியை வெளியிட்டுள்ளார்.ஆரம்ப கட்ட விசாரணைக்குப்பின்பு தற்கொலைப் படை தாக்குதல் நிகழ்ந்திருக்கக்கூடும் என்று வெடிகுண்டு ஆய்வுக்குழு தெரிவித்துள்ளது. 80- 100 கிலோ சக்தி கொண்ட குண்டு இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது. வெடிகுண்டுகளுடன் காரில் வந்த தற்கொலைப் படைத் தீவிரவாதி ஒருவர் இந்தப் பேருந்தை மோதியிருக்கக்கூடும் என்று ஆய்வுக்குழுவின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## ஹெலிகொப்டர் ஒப்பந்தம் இரத்து

நவீன ஹெலிகொப்டர்களை கொள்வனவு செய்ய இத்தாலிய நிறுவனமான அகஸ்டா வெஸ்ட்லேண்டுடன் மேற் கொள்ளப்பட்ட ரூ.3,600 கோடி ஒப்பந்தத்தை இந்தியா இரத்துச் செய்தது.

இந்த ஒப்பந்தத்தைப் பெற, இந்திய விமானப் படையைச் சேர்ந்த அதிகாரிகள், மத்திய அரசில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு ரூ. 360 கோடி இலஞ்சம் வழங்கியதாக கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் புகார் எழுந்தது. குறிப்பாக இந்திய விமானப படை முன்னாள் தலைமைத் தளபதி எஸ்.பி. தியாகிக்கு, இந்த விவகாரத்தில் தொடர்பு இருப்பதாக குற்றஞ் சாட்டப்பட்டது. குறிப்பிடத்தக்கது.

# வவுனியா விவசாயப் பண்ணை பணியாளர்கள் நிரந்தர நியமனம் வழங்கக் கோரிக்கை

(வவுனியா)

தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என வவுனியா விவசாய பண்ணையில் பணியாற்றும் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 15 முதல் 20 வருடங்களாக விவசாயப் பண்ணையில் பண்ணைத் தொழிலாளர்களாக பணியாற்றி வருகின்றோம். இதன காரணமாக நாம் பல சலுகைகளை இழந்து வருவதுடன் எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத துர்ப்பாக்கிய வாதிகாளாக உள்ளோம்.

பண்ணையில் அனைத்து பணிகளையும் நீண்ட காலமாக செய்யும் எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாமல், வேறு இடங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய சிலர் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.


இதன் காரணமாக எம்மோடு நாள் சம்பளத்திற்கு பணியாற்றிய பலர் வேறு தொழில் வாய்ப்புக்களை எதிர்பார்த்து சென்றுள்ளதுடன் சிலர் நிரந்தர நியமனம் கிடைக்காமலேயே ஓய்வு நிலைக்கும் சென்று விட்டனர்.

அண்மையில் எம்மோடு பணியாற்றிய பெண்ணொருவர் மின்னல் தாக்கத்திற்கு பலியான போது அவரது குடும்பத்திற்கு எவ்வித உதவிகளும் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக அக்குடும்பம் பெரும் கஷ்டத்துடன் வாழ்ந்து வருகின்றது.

எமக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படாவிட்டால் எமக்கும் இந்நிலையே ஏற்படும். எனவே நிரந்தர நியமனம் வழங்குவதற்கு விவசாயத் திணைக்கள அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.


இவ்விடயம் தொடர்பில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அ.சகிலாபானு தெரிவிக்கையில்,

இது தொடர்பில் மேலதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளமையால் வடமாகாண விவசாய அமைச்சே இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.



தொண்டைமானாறு அக்கரை கடற்கரைப் பகுதியில் நேற்று முற்பகல 10.00 மணியளவில் ஆறு அடி நீளமான டொல்பின் காதில் காயத்துடன் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளதைக் காணலாம். (116)

# கற்றல் உபகரணங்கள் மாணவர்களுக்கு வழங்கல்



(முல்லைத்தீவு)

சங்குவேலி சிறி காளியம்பாள் சனசமூக நிலைய போரூட் சேமிப்புத் திட்ட சேமிப்பாளர்களின் பிள்ளைகளுக்கும் சனசமூக நிலைய அங்கத்தவர்களின் தரம் 5 இல் சித்தியடைந்த பிள்ளைகளுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு சனசமூக நிலைய போஷகர் இ.சிவநாயகம் தலைமையில், நிலைய முன்றலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

போரூட் சேமிப்புத் திட்டத்தில் சேமிக்கப்பட்ட பணத்திற்கு கிடைத்த வட்டிப் பணத்திலிருந்து கற்றல் உபகரணங்கள் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் உடுவில் பிரதேச செயலக நிர்வாகக் கிராம அலுவலர் நா.நவரத்தினராசா, மானிப்பாய் பொலிஸ் நிலைய உப பரிசோதகர் பி.ஆனந்தா, வலி.தெற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தேவராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கடலில் தத்தளித்த குடும்பத்தினர் மீட்பு

படகில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டதால், நடுக்கடலில் தவித்த இலங்கையைச் சேர்ந்த தம்பதியினரை, இந்தியக் கடற்படையினர் மீட்டு தமிழக கடலோர பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நிர்மலன் (வயது - 24) இவரது மனைவி நிஷாந்தினி (வயது - 22), இவர்களது ஒரு வயது மகனுடன் தலைமன்னார் கடற்கரையில் இருந்து மீன்பிடிப் படகில் தனுஷ்கோடிக்கு வந்தனர். கலையரசன் என்பவர் படகை ஓட்டி வந்தார்.

இயந்திரக் கோளாறு ஏற்பட்டு, இந்தியக் கடல் எல்லையில் படகு நின்றது. ரோந்து சென்ற இராமேஸ்வரம், இந்தியக் கடற்படையினர், படகை பறிமுதல் செய்து, தம்பதியை இராமேஸ்வரம் அழைத்து வந்தனர் என்று இந்திய பொலிஸார் தெரிவித்தனர்.

## இன நல்லிணக்கத்தில்...

பிஸ்வால் எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்புக்கு வரவுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. கடந்த நவம்பர் மாதம், தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலராக நிஷா தேசாய் பிஸ்வால் பொறுப்பேற்றிருந்தார்.

றொபேட் ஓ பிளேக்கின் இடத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட பின்னர் கொழும்புக்கான இவரின் முதல் பயணம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

ஜனவரி இரண்டாவது வாரத்தில் இலங்கைக்கு வருவதற்குரிய அனுமதியை இலங்கை வெளிவிவகார அமைச்சிடம் நிஷா தேசாய் பிஸ்வால் கோரியுள்ளார் என்பதை, வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம உறுதிப்படுத்தியிருந்தார்.

எனினும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், நிஷா தேசாய் பிஸ்வாலின் கொழும்புப் பயணத்தை இன்னமும் உறுதிப்படுத்தவில்லை.

இந்தநிலையில், அவர் எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பு வருவார் என எதிர்பாக்கப்படுகிறது. எதிர்வரும் மார்ச் மாதம் நடக்கவுள்ள ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக, ஆராயும் நோக்கிலேயே நிஷா தேசாய் பிஸ்வால் கொழும்புக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## கடமை தவறினர்...

அங்கு கடமையிலிருந்த பொலிஸார் பாராமுகமாக நடந்து கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பி.பி.சி. தமிழோசையுடன் பேசிய காணாமற் போனோரை தேடி கண்டறியும் குழுவின் தலைவரான சுந்தரம் மகேந்திரன், திருகோணமலை பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு பதிவு செய்வதற்காக சென்றிருந்தபோது தாம் அச்சுறுத்தப்பட்டதாக தெரிவித்தார்.

தமிழ் மக்களை ஒன்றிணைத்து சிங்கள மக்களுக்கு எதிராக இனவாதத்தை தூண்டி பிரச்சினைகளை ஏற்படுத்த தாம் முற்படுவதாக நீதிமன்றத்தில் தம் மீது வழக்கு தொடரப்படும் என்றும் வேண்டுமானால் நீதிமன்றத்தில் சந்திக்கலாம் என்றும் கூறி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி தம்மை அச்சுறுத்தியதாக தெரிவித்தார்.

கடந்த 20 ஆம் திகதி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் பொலிஸார் பக்கச்சார்பாக நடந்து கொண்டமை மற்றும் தனக்கு விடுத்த அச்சுறுத்தல் தொடர்பான முறைப்பாட்டை தாம் செய்த போதிலும், அதன்மீது இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும், அதன் காரணமாகவே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்ததாகவும் அவர் கூறினார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் நடைபெற்ற தம்முடைய போராட்டத்தில் தங்கள் மீது தொடரப்பட்ட வன்முறைகளுடன் தொடர்பானவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்றும் பொலிஸ் பக்கச்சார்பாக நடந்து கொண்டமை தொடர்பாக விசாரணை நடைபெற வேண்டும் என்றும் இதுவே தமது கோரிக்கை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமது எழுத்து மூல மனுவை பெற்றுக் கொண்ட இலங்கை மனித உரிமைகள் ஆணையகத்தின் அதிகாரிகள், இரு தரப்பையும் பிறிதொரு நாளில் அழைத்து இது தொடர்பான விசாரணையை நடத்துவோம் என்று தம்மிடம் தெரிவித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

## நகரசபையின்...

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், பொதுச் செயலாளர் மாவை. சோ.சேனாதிராஜாவும் கூட்டாக விடுத்த அறிக்கையில், வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிப்பவர்களின் பதவி பறிக்கப்படுவதுடன், கட்சியில் இருந்தும் நீக்கப்படுவார்கள் என்று கடுமையாகத் தெரிவித்ததன் பின்னரும் சில உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திடடங்களைத் தோற்கடிக்கும் நடவடிக்கையில் கூட்டமைப்பு உறுப்பினர்களே ஈடுபட்டு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## பிரதமர்...

ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித்த தேரரை அவமதித்தார் என்று குற்றஞ்சாட்டி பிரமரிடமிருந்து ஒரு பில்லியன் ரூபா நட்டஈடு கோரியே வழக்குத்தாக்கல் செய்யப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஓமல்பே சோபித்த தேரரின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் கடந்த பல நாட்களாக பிரதமர் செயற்பட்டுள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பாடசாலை...

வரையான காலப்பகுதியில் 61 ஆயிரத்துக்கும் அதிகமான சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக அவசர தொலைபேசி இலககமான 1926 ஊடாக இதுவரை 8 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஆனால் அதில் 1000 இற்கும் அதிகமானவை பொய் முறைப்பாடுகள் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் அனோமா திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுவரை கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக எமது அதிகாரசபை நடவடிக்கைகளை எடுத்துள்ளது மேலும் பாடசாலைக்கு மாணவர்களை கூட்டிச்செல்லும் வாகனங்களுக்கு விசேட குறியீடுகளை வழங்கவும் தீர்மானித்துள்ளதுடன் ஒவ்வொரு பிரதேசத்திலும் பொலிஸ் நிலையங்களில் மாணவர்களை கூட்டிச்செல்லும் வாகனங்களை பதிவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

## வடக்கு...

இணைந்ததாகவே அமையவேண்டும்.

இவ்வாறே இன்றும் பல சாரதிகள், ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுகின்றன. க.பொ.த உயர்தரத்தில் மாணவர்கள் பெரும் வளர்ச்சியை வெளிக்காட்டியுள்ளனர். யுத்த காலத்தில் இருந்த கல்வி வளர்ச்சி பூச்சியமாகவே இருந்தது. ஆனால் இன்று இந்த மாணவர்கள் அகில இலங்கை ரீதியில் 3 ஆவது இடத்தை பிடித்திருப்பது மாணவர்களின் கல்வியில் வட மாகாணம் வளர்ச்சி கண்டுள்ளது என்பதே உண்மை.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த ஜனாதிபதிக்குத்தான் நாம் நன்றி சொல்லவேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் மாகாண பிரதம செயலாளர், பேரவைச் செயலாளர் உட்பட அமைச்சுக்களின் செயலாளர்கள், உயரதிகாரிகள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

## மூளை அழற்சி...

வாழும் வயதெல்லை அதிகரித்து வருவதும் இதற்கு ஒரு காரணம் ஆகும்.

உறவினர்கள், குடும்பங்கள் பிற நாட்டில் வாழ்வதாலும், ஆளுதவி இல்லாமையாலும் முதியவர்கள் பல்வேறு கஷ்ரங்களுக்கும் சிரமங்களுக்கும் ஆளாகி வருகின்றனர்.

அதிகரித்து வரும் இந் நோயாளர்களின் எண்ணிக்கை ஒரு உலகள்ாவிய பிரச்சினையாக இருந்தபோதும் யாழிலும் இந் நிலைமை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2050 ஆம் ஆண்டு தற்போது உலகில் டிமென்சியாவுடன் வாழும் மக்களின் எண்ணிக்கை மும்மடங்கால் அதிகரிக்கும் என்று சர்வதேச நிபுணர்கள் கூறுகின்றனர். டிமென்சியா நோயாளிகளின் எண்ணிக்கை 130 மில்லியனுக்கும் அதிகமாகும் என்று Alzhemers disease Interanational என்ற சர்வதேச அறக்கட்டளையின் ஆராய்ச்சி தெரிவிக்கின்றது.

இதன் போது ஏற்படும் ஞாபக மறதியை நிவர்த்தி செய்ய மருந்துகள் கண்டறியப்படவில்லை எனினும் மருந்தைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் உலகளாவிய ரீதியில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய தேவைகளின் முக்கிய கவனிப்பு அன்றாட பராமரிப்பு மற்றைய மருத்துவப் பிரச்சினைகளின் பொருத்தமான கவனிப்பு போன்ற உதவிகளே தேவையாகக் காணப்படுகின்றது. இந் நோயினால் பாதிக்கப்பட்ட முதியவர்களின் கவனிப்பை மேம்படுத்துவதற்கு ஆக்கபூர்வ நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கின்றது என்று யாழ். போதனா மருத்துவமனை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# முன்னணி மாணவர்கள் ஆளுநரால் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

கல்விப்பொதுத்தராதர உயர்தரப்பரீட்சையில் வடமாகாணத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலிடம் வகிக்கும் மாணகர்கள் வடமாகா ஆளுநரினால் நேற்று கௌரவிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாவட்டங்களில் கணித, விஞ்ஞான, கலை, வர்த்தக பிரிவுகளில் முன்னணி புள்ளிகளைப் பெற்று முதலிடம் வகித்த மாணவர்கள் 20 பேர் பதக்கம் அணிவிக்கப்பட்டு பணப்பரிசில்கள், ஞாபகச் சின்னங்கள் என்பன வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலையின் அதிபர் மற்றும் பெற்றோர்களுடன் கல்வி அதிகாரிகள், கல்வியமைச்சின் அதிகாரிகள் எனப்பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற புதிய ஆண்டை வரவேற்கும் நிகழ்வில் இவ்வாறு சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இம்முறை கணிதப்பிரிவில் யாழ்.இந்துக்கல்லூரி மாணவன் ஆர்.ஜதுசன் முதலிடம் பிடித்தது மட்டுமல்லாது அகில இலங்கை ரீதியில் 3 ஆம் இடத்தை பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## சட்டவிரோத றோலர் படகு வடமராட்சி கடலில் மடக்கிப்பிடிப்பு

(வடமராட்சி)

தொண்டைமானாறு பெரிய கடற்பரப்பில் நேற்று அதிகாலை தடைசெய்யப்பட்ட றோலர் மீன்பிடியில் ஈடுபட்டவர்கள் உள்ளூர் மீனவர்களால் பிடிக்கப்பட்டு கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இப்பகுதியில் குறித்த சிலர் நீண்ட காலமாகவே தடை செய்யப்பட்ட றோலர் மீன்பிடியில் ஈடுபட்டுவந்தனர். இதற்கு அப்பகுதி மீனவர்கள் தமது எதிர்ப்பை தெரிவித்து வந்த நிலையிலும், அவர்கள் தமது தொழிலை மேற்கொண்டனர்.

இந்த நிலையில் நேற்று அதிகாலையும் இரண்டு றோலர் படகுகளில் கல்லுகள், இரும்புக்கம்பிகளுடன் மீன்பிடியில் ஈடுபட்டனர். இதனையடுத்து சுமார் 50 வரையான மீனவர்கள் படகுகளில் சென்று இரண்டு றோலர்களையும் சுற்றிவளைத்து அவற்றிலிருந்த 6 பேரைப்பிடித்துவந்து கடற்றொழில் நீரியல்வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் கணேசமூர்த்தி தலைமையிலான அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். அந்த அறுவரையும் நேற்றைய தினம் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இவர்களை விசாரணை செய்த நீதவான் கஜநிதிபாலன் ஒவ்வொருவரையும் 50 ஆயிரம் ரூபாவும், றோலருக்கு 10 இலட்சம் காசுப்பிணையிலும் செல்ல அனுமதித்தார். சம்பவ இடத்திற்கு யாழ்.மவாட்ட கடற்றொழிலாளர் சங்கங்களில் சம்மேளனத்தலைவர் அ.எமிலியம்பிள்ளை, வடமராட்சி கடற்றொழில் சமாசத்தலைவர் அருள்தாஸ் ஆகியோரும் வருகை தந்திருந்தனர். (116)

## கல்வியங்காடு விபத்து; இளைஞனுக்கு விளக்கமறியல்

யாழ்.கல்வியங்காட்டில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வயோதிபரை மோட்டார் சைக்கிள் மோதியதில் வயோதிபர் உயிரிழந்துள்ளார். மோதிய இளைஞர் யாழ்.நீதவான் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த விபத்தில் இணுவில் மேற்கினைச் சேர்ந்த சந்திரகுமார் யோகநாதன் (வயது - 61) என்பவரே உயிரிழந்துள்ளார். கல்வியங்காடு பகுதியில் நேற்று முன்தினம் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வயோதிபரை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதிவிட்டு தப்பிச்சென்றது. இதில் வயோதிபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். பொதுமக்கள் வழங்கிய மோட்டார் சைக்கிள் இலக்கத் தகட்டு இலக்கத்தினை வைத்து பாஷையூர் பகுதியினைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை கோப்பாய் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் நேற்று கைது செய்தனர்.

மேற்படி நபரை யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்திய போது, நீதவான் மேற்படி நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

## மோட்டார் சைக்கிள் யாழ்.நகரில் திருட்டு

இராணுவத்தினருடைய மோட்டார் சைக்கிளொன்று திருடப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் இராணுவத்தினரால் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.ஆஸ்பத்திரி வீ[illegible]பிலுள்ள மருந்தகம் ஒன்றில் மருந்து வாங்குவதற்காக நேற்றுப் பிற்பகல் வந்த இராணுவத்தினருடைய மோட்டார் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கடந்த ஆண்டில் தங்கம் கடத்தல்; 15 கோடி தங்கநகை பிடிபட்டது

(கொழும்பு)

கடந்த வருடத்தில் மாத்திரம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் ரூ.15 கோடிக்கு அதிகம் பெறுமதியான தங்கம் மீட்கப்பட்டதாக இலங்கை சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் தங்கம் தொடர்பில் 93 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதாக சுங்கப் பிரிவு ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

அதன்போது 24 கிலோ 800 கிராம் தங்கம் மீட்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இவ்வருடத்தில் முதல் சம்பவமாக 22 மில்லின் பெறுமதியான தங்கத்தை சென்னைக்கு கடத்தவிருந்த பம்பலபிட்டியைச் சேர்ந்த நபர் நேற்று முன்தினம் காலை கைது செய்யப்பட்டுள்ளதாக லெஸ்லி காமினி குறிப்பிட்டார்.

## அகதிகளின் உரிமையை மீறுகிறது ஆஸி.

இலங்கைத் தமிழ் அகதிகளை அவுஸ்ரேலிய அரசாங்கம் ஹிட்லரைப்போல நடத்துவதாக ஓய்வு பெற்ற ராஜதந்திரி புருஸ் ஹெய்க் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஹிட்லர் காலத்தில் யுதர்களின் கருத்துக்கள் கேட்கப்படாமல் அவர்கள் அழிக்கப்பட்டனர். அதேபோன்று தற்போது அவுஸ்ரேலிய அரசாங்கம் இலங்கை அகதிகளை கேள்விகள் இன்றி நாடு கடத்தி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். அத்துடன் அகதி அந்தஸ்து கோருகின்றவர்களை சட்டத்தரணிகளை சந்திப்பதற்கு அனுமதி வழங்ககப்படுவதில்லை இது ஒரு மிகப்பெரிய மனித உரிமை மீறல் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஈரானிய மசகு எண்ணெய் இறக்குமதி; அமெரிக்காவின் சலுகைக்காலம் நிறைவு

(கொழும்பு)

இலங்கைக்குத் தேவையான மசகு எண்ணெய் இறக்குமதி தொடர்பாக அமெரிக்காவுடன் அரசு நடத்திய பேச்சுக்கள் வெற்றிபெறவில்லை என்று அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

ஈரானிற்கு எதிராக அமெரிக்கா தடைகளை விதித்துள்ளது. எவ்வாறெனினும், ஈரானிடமிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு இலங்கை உள்ளிட்ட சில நாடுகளுக்கு சலுகை வழங்கியிருந்தது. அந்த சலுகைக்காலம் நிறைவடைந்து விட்டது.

இப்போது ஈரானிடமிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்யக்கூடாது என அமெரிக்கா இலங்கைக்கு அறிவுறுத்தியுள்ளதாக பெற்றோலிய வள அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மசகு எண்ணெய் இறக்குமதி தொடர்பில் அமெரிக்காவுடன் இலங்கை பல சுற்று பேச்சுவார்த்தைகளை ஏற்கனவே நடத்தியுள்ளது.

ஈரானுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை தளர்த்துவதற்கு உலகத் தலைவர்கள் அண்மையில் இணக்கம் வெளியிட்டிருந்தனர்.

எனினும், மசகு எண்ணெய் ஏற்றுமதி செய்ய ஈரானுக்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை.

ஈரானிய மசகு எண்ணெயை சுத்திகரிக்கும் நோக்கிலேயே சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டதாகவும், தற்போது ஈரானிடமிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளமை வருத்தமளிப்பதாகவும் பெற்றோலிய வள அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

மேலும் ஆறு மாதங்களுக்கு மசகு எண்ணெய் இறக்குமதி செய்ய இலங்கைக்கு கடந்த நவம்பர் மாதம் அமெரிக்கா சலுகை அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மருத்துவர் மீது தாக்குதல் முயற்சி; நலன்புரி நிலையவாசி கைது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியை பொலிஸார் முன்னிலையில் தாக்க முற்பட்ட கோணப்புலம் நலன்புரி நிலையத்தினைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை பொலிஸார் நெற்று தெரிவித்தனர்.

கோணப்புல நலன்புரி நிலையத்தில் 158 குடும்பங்களைச் சேர்ந்த 1500 பேர் வசித்து வருவதுடன், நலன்புரி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 18 மலசலகூடங்களை 10 குடும்பங்களுக்கு ஒரு மலசலகூடம் என்ற ரீதியில் பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் அங்கிருக்கும் வாசியொருவர் ஒரு மலசலகூடத்தினை தனது குடும்பத்திற்கும் தனது நெருங்கிய உறவுக்கார குடும்பம் ஒன்றின் பாவனைக்கும் மட்டும் எனக்கூறி பூட்டினால் பூட்டி வைத்துள்ளார். இதனால் ஏனைய 8 குடும்பங்களும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், கோணப்புலம் நலன்புரி நிலையத்தில் சுகாதார நடைமுறைகளைப் பார்வையிடுவதற்காகவும், சிறுவர்களுக்கான விழிப்புணர்வு கூட்டத்தினை நடத்துவதற்காகவும், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி, குடும்பநல உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் தெல்லிப்பழை பொலிஸார் ஆகியோர் நேற்று நண்பகல் நலன்புரி நிலையத்திற்குச் சென்றனர்.

இதன்போது, குறித்த நபருடன் உரையாடி ஏனைய குடும்பங்களின் பாவனைக்காக மலசலகூடத்தினைத் திறந்துவிடும்படி சுகாதார வைத்தியதிகாரி கூறினார். இருந்தும், குறித்த நபர் சுகாதார வைத்தியதிகாரியினை பொலிஸார் முன்னிலையில் தாக்க முற்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் மேற்படி நபரைக் கைது செய்து, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதாகப் பொலிஸர் மேலும் தெரிவித்தனர்.



புகைத்தல் ஒழிப்பு தினத்தில் சேகரிக்கப்பட்ட நிதியினைக் கொண்டு புங்குடுதீவு சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று நயினாதீவு அமுதசுரபி அன்னதான மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் புங்குடுதீவு சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர் சி.ஜெயசீலன் மாணவிக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்குவதையும், கூடிய நிதியினை சேகரித்த ந.சாந்தரூபனுக்கு யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன் பரிசில் வழங்குவதையும் காணலாம். (21)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஜனவரி 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.